Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து

(C/1460)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 01 திங்கட்கிழமை (14.05.2012) பக்கங்கள் 20 ஓசை – 226



தங்க மகன்

06

விசேட வர்ணம்



09



துரித அபிவிருத்தி

05




15

விருப்பத்திற்குரிய கொடி!



11

## வெளிவிவகார அமைச்சர் யாரென ஏற்பட்டது குழப்பம்

(கொழும்பு)

தென்னாபிரிக்க அரசாங்கத்தின் அதிகாரபூர்வ நிகழ்வு ஒன்றில், இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் யார் என்று தெரியாத குழப்ப நிலை ஏற்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது-

தென்னாபிரிக்காவின் பொது நிர்வாக அமைச்சராக இருந்த இராதாகிருஸ்ண படையாச்சி மாரடைப்பால் உயிரிழந்தார். அவரின் இறுதிச் சடங்கு கடந்த வாரம் டர்பன் கிங்ஸ்மீட் மைதானத்தில் இடம் பெற்றது.

அமைச்சர் இராதாகிருஸ்ண படையாச்சியின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து வெளிவிவகார அமைச்சினால் இரண்டு அனுதாபச் செய்திகள் அனுப்பப்பட்டிருந்தன.

19 ஆம் பக்கம் பார்க்க

## மாகாண எல்லைகளை மாற்றியமைக்கத் திட்டம்

(கொழும்பு)

இலங்கையில் உள்ள மாகாணங்களின் எல்லைகளை மாற்றியமைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இதுகுறித்து அர்ச உயர்மட்டத்தில் தற்போது விசேட பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பேச்சுவார்த்தைகளில் அரசாங்கத்தின் இந்தத் தீர்மானத்திற்கு இணக்கம் வெளியிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் சகல மாகாணங்க்ளுக்கும் கடல் பிரதேசம் ஒன்று வழங்கப்படும் வகையில் மாகாண எல்ஸ்லைகள் பிரிக்கப்பட உள்ளன. அத்துடன் அனைத்து மாகாணங்களுக்கும்

19 ஆம் பக்கம் பார்க்க

# தெரிவுக்குழுவில் பங்கேற்க தயாராகிறது கூட்டமைப்பு



## சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அரசினால் அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வெற்றுத்தாளுடன் செல்ல முடியாது. ஆனால் நிபந்தனையுடன் செல்வதற்கு கூட்டமைப்புத் தயாராக உள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார்.

ஜனநாயக அடிப்படையில் அரசியல் சமூக உரிமைகளை வென்றெடுப்பதற்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நேற்றைய தினம் யாழ். இளம் கலைஞர் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் அதிகாரப் பரவலாக்கல் மூலம் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு என்ற கருப்பொருளில் சுமந்திரன் எம்.பி. உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி மகிந்த பிரிட்டன் விஜயம்

(கொழும்பு)

பிரித்தானிய மகாராணி இரண்டாவது எலிசபெத் அரியாசனத்தில் அமர்ந்து 60 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு நடைபெறும் வைரவிழா நிகழ்வுகளில் பங்கேற்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ லண்டன் செல்லவுள்ளார்.

இந்த நிகழ்வில் பங்கேற்குமாறு விடுக்கப்பட்ட அழைப்பை அடுத்து அவர் அடுத்த மாதம் 3ஆம் திகதி தொடக்கம் 4 நாட்கள் பிரித்தானியாவுக்கான பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

ஜனாதிபதியின் பயணத்தை கொழும்பிலுள்ள பிரித்தானியத் தூதரகம் உறுதிப்படுத்தியுள்ளது.

ஆனால் இந்தப் பயணத்தின் போது ஜனாதிபதி பிரித்தானிய அரச அதிகாரிகள் எவரையாவது சந்திப்பாரா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை.

எனினும், இது ஒரு அரசு முறைப் பயணம் அல்ல என்று பிரித்தானிய தூதரக அதிகாரி தெரிவித்தார்.

## வேகமாகப் பரவும் வயிற்றோட்டம் மன்னார் நகர மக்கள் பாதிப்பு

(மன்னார்)

மன்னார் நகரில் தீவிரமாக பரவிவரும் வயிற்றோட்டம் காரணமாக 7 சிறுவர்கள் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருவதுடன், 80 இற்கும் அதிகமா னோர் சிகிச்சை பெற்றுள்ளதாக மன்னார் பொதுவைத்திய சாலையின் வைத்திய அதிகாரி டாக்டர் ஜி. குணசீலன் தெரிவித்தார்.

மன்னார் நகரின் மூர்வீதி, சின்னக்கடை, உப்புக்குளம் ஆகிய பகுதிகளில் கடந்த வியாழக்கிழமை முதல் வயிற் றோட்டம் பரவிவருகின்றது. வயிற்றோட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் மன்னார் பொதுவைத்தியசாலையிலும் தனியார் வைத்தியசாலைகளிலும் சிகிச்சை பெற்றுவருகின்றனர் எனவும், இவ்வாறு சிகிச்சை பெற்றவர்களில் அதிகமானோர் சிறுவர்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

இவ் வயிற்றோட்டம் குறித்து பொதுமக்களை விழிப்புடன் இருக்குமாறும் கொதித்தாறிய நீரைப் பருகுமாறும் ஹோட்டல்கள் மற்றும் உணவு விடுதிகளில் வாங்கும் உணவு வகைகள் குறித்து கவனத்தைச் செலுத்துமாறும் பொதுமக்களிடம், வைத்திய அதிகாரி டாக்டர் ஜி.குணசீலன் கேட்டுக்கொண்டுள்ளார்.

அத்துடன், வயிற்றோட்டம்

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.இந்து மாணவன் தேசிய மட்டத்தில் சாதனை



(யாழ்ப்பாணம்)

தேசிய மட்ட கனிஷ்ட மெய்வல்லுனர் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் புதிய சாதனை ஒன்றினை நிலை நாட்டியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் 2012 ஆம் ஆண்டுக்கான தேசிய கனிஷ்ட மெய்வல்லுனர் போட்டியில் 16 வயதுக்குட்பட்டோருக்கான உயரம் பாய்தலில் யாழ். இந்துக்கல்லூரியைச் சேர்ந்த செல்வன் இரத்தினசிங்கம் செந்தூரன் 192 சென்ரி மீற்றர் உயரத்தைக் கடந்து இந்தப் புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

முன்னைய சாதனையான 190 சென்ரி மீற்றர் உயரத்தை 2004ஆம் ஆண்டு முறியடித்து 191 சென்ரி மீற்றராக பதிவு செய்யப்பட்டிருந்தது. அதன் பின்னர் 2007ஆம் ஆண்டு இன்னொருவரால் அது சமன் செய்யப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் சுமார் 5 வருடங்களாக முறியடிக்கப்படாமல் இருந்த சாதனையை

19 ஆம் பக்கம் பார்க்க

## யுவதி மீது சேஷ்டை வாள்வெட்டில் முடிந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மட வீதியில் நேற்றுப் பிற்பகல் வீதியால் சென்ற யுவதி மீது இளைஞர் ஒருவர் சேஷ்டை விட முயன்ற சம்பவம் வாள் வெட்டில் முடிந்ததில் ஏழு பேர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது,

நேற்றுப் பிற்பகல் இரண்டு மணியளவில் திருக்குடும்ப கன்னியர் மட வீதியால் சென்ற யுவதியைப் பார்த்து அவ்விடத்தில் நின்ற இளைஞரொருவர் கிண்டலடித்துள்ளார். இதன்போது அவ்வீதி வழியே வந்த குறித்த யுவதியின் தந்தை அவ் இளைஞனுடன் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளார். இந்த வாய்த்தகராறு முற்றி இரு பகுதியினருக்குமிடையில் பெரும் களேபரமாக வெடித்தது.

இதன்போது ஏற்பட்ட வாள் வெட்டில் எழுவர் படுகாயமடைந்தனர். இதில் மூவருக்கு கழுத்து, தலைப் பகுதிகளில

19 ஆம் பக்கம் பார்க்க

**மாணவர்களின் கல்விசார் தோல்விகள் யார் பொறுப்பாளிகள்?**

**நளைய தினமுரசில் எதிர்பாருங்கள்...**

## தடுத்து வைக்கப்பட்டோரின் விபரங்களை அறிய ஏற்பாடு

(கொழும்பு)

பங்கரவாத தடுப்புப் பிரிவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் மற்றும் விடுதலை செய்யப்பட்டவர்களின் தகவல்களை அவர்களின் நெருங்கிய உறவினர்களுக்குத் தெரிவிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பயங்கரவாத விசாரணைப் பிரிவின் ஊடாக முன்னெடுக்கப் படவுள்ள இந்த செயற்திட்டத்தில் எந்நேரமும் உரிய தகவல்களை உறவினர்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்தத் தகவல்களை மனைவி, பிள்ளைகள், பெற்றோர், சகோதர, சகோதரி ஆகியோர் தமது அடையாளங் களை உறுதிப்படுத்திப் பெற்றுக்கொள்ள முடியும்.

தகவல்களைப் பெற விரும்புவோர் தாம் வசிக்கும் பிரதேசத்தின் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் அல்லது கிராம அலுவலர் மூலம் உறுதிப்படுத்தல் சான்றிதழைப் பெற்றுச் சமர்ப்பிக்க வேண்டும்.

19 ஆம் பக்கம் பார்க்க

# கரணவாய் கொலை வழக்கு தீர்ப்புக்காக ஒத்திவைப்பு

(திருநெல்வேலி)

கரணவாய் கொலை வழக்கு தீர்ப்புக்காக யாழ். மேல் நீதிமன்றினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் 2002 மார்ச் மாதம் 25 ஆம் திகதி கரணவாயில் மாணிக்கம் நவராஜா என்பவரைக் கொலை செய்ததாகச் செல்வரத்தினம் சுவேந்திரன், சண்முகம் சதஸ்கரன் ஆகிய இருவர் மீதும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

விசாரணையின் போது சமர்ப்பிக்கப்பட்ட உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் இறந்தவரின் உடலில் 16 காயங்கள் காணபபட்டன எனவும் அவற்றில் இரண்டு காயங்கள் பாரதூரமானவை எனவும் அவற்றினாலேயே மரணம் சம்பவித்ததாகவும தெரிவிக்கப்பட்டிருந்தது.

பொலிஸ் விசாரணையின் போது கத்தி ஒன்றும், வாள் ஒன்றும் சான்றுப் பொருட்களாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அத்துடன் பருத்தித்துறை, நீதவானாக அப்போது இருந்த அன்னலிங்கம் பிறேம்சங்கருக்கு வழங்கப்பட்ட ஒப்புதல் வாக்கு மூலமும் சான்றுப் பொருளாக சமர்ப்பிக்கப்பட்டபோது நீதிவானும் சாட்சியமளித்திருந்தார்.

கடந்த 11 ஆம் திகதி அரச சட்ட வாதி வி.திருக்குமரனும், முத லாம் எதிரியின் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா, இரண்டாம் எதிரியின் சட்டத்தரணி கே.பீ.எஸ்.வரதராஜா ஆகியோரும் தமது தொகுப்புரைகளை நிகழ்த்தினர். தொகுப்புரை முடிவில் வழக்கை எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு நீதிபதி ஜெ.விஸ்வநாதன் ஒத்திவைத்தார். (137)

# கோண்டாவில் கொலை வழக்கு மேலும் ஒரு சந்தேகநபர்

(திருநெல்வேலி)

கோண்டாவில் கொலை வழக்கில் 5 ஆவது சந்தேகநபராக யாழ். நீதிமன்றில் ஒருவர் முன்னிலைப் படுத்தப்பட்டார்.

இவர் ஏற்கனவே ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்தமை தொடர்பாக கைதுசெய்யப்பட்டு யாழ். சிறைச்சாலையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள ஜெயராஜ் சுரேஸ்குமார் (வயது - 21) என்பவராவார்.

இவ்வழக்கில் கடந்த மார்ச் 19 ஆம் திகதி இல் கோண்டாவிலில் கொள்ளையடிக்கும் நோக்குடன் வீடு ஒன்றுக்குள் புகுந்து சபாரத்தினம் ஜெயந்திரம் (வயது - 52) என்பவரைத் தாக்கிக கொலை செய்ததாக நான்கு நபர்கள் சந்தேகத்தின் பேரில் கோப்பாய் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்திருந்தார்.

5 ஆவது சந்தேகநபராக முன்னிலைப்படுத்தப்பட்டவரது வாக்கு மூலத்தை நாளைய தினம் யாழ். சிறைச்சாலைக்குச் சென்று பதிவு செய்யுமாறு கோப்பாய் பொலிஸாருக்கு யாழ் நீதவான் மா.கணேசராஜா உத்தரவு பிறப்பித்துள்ளார். (137)

# புகைப்படக் கண்காட்சி




எனது உலகு சிறுவர்களின் புகைப் படக் கண்காட்சி நாளை தொடக்கம் மூன்று நாட்கள் நடைபெறவுள்ளது. நாளைய தினம் காலை 10.00 மணிக்கு மறவன் புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்திலும், 16,17 ஆம் திகதிகளில் காலை 9.30 மணிக்கு ஊடக வளங்கள் பயிற்சி மையத்திலும் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலய அதிபர் வை.ஜெயகாந்த ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# வீதிப் பெயர் பலகை விசமிகளால் அகற்றப்பட்டது

(மானிப்பாய்)

சாந்தை வீதி புனரமைப்பிற்கென நடப்பட்ட பெயர் பலகை அகற்றப்பட்டதற்கு மானிபபாய் பிரதேச ஈ.பி.டி.பி.யின் அமைப்பாளரும் மானிப்பாய் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான வெ.அன்ரன் ஜோன்சன் (ஜீவா) கண்டனம் தெரிவித்துள்ளார்.

நெல்சிப் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட உள்ள வீதிப் புனரமைப்பிற்கான விபரங்கள் அடங்கிய பெயர் பலகை நடப்பட்டிருந்தது. அது கடந்த ஏழாம் திகதி இரவு விசமிகளால் அகற்றப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக பின்தங்கி உள்ள இப்பிரதேச மக்களின் முன்னேற்றத்தை விரும்பாத தீய சக்திகளே இந்தச் செயலில் ஈடுபட்டுள்ளன. இதன் மூலம் அவர்கள் இப்பிரதேசம் அபிவிருத்தி அடைவதை விரும்பவில்லை என்பது தெளிவாகின்றது.

சுய இலாபங்களுக்காக ஒரு பிரதேசத்தின் அபிவிருத்திக்கே தடைக்கல்லாக இருப்பது மிகவும் வேதனையாக உள்ளது. எனவே இந்தப் பெயர்ப் பலகையை மீண்டும் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார். (54)

# சிறுவர் உரிமை காக்க விசேட நடவடிக்கை

மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய கிளையினரால் சிறுவர் உரிமைகள் தொடர்பான கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை வேலணையில் நடைபெற்றது. மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் கனகராஜ் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் சிறுவர் உரிமை, சிறுவர்கள் பாடசாலையில் எதிர்நோக்கும் பிரச்சினைகள், சிறுவர் துஷ்பிரயோகங்களும், இளவயதுக் கர்ப்பம், மதுபாவனை உள்ளிட்டவற்றால் சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்நிகழ்வில் தீவகக் கல்வி வலய முறைசாராக் கல்வி ஆசிரிய ஆலோசகர் இளங்கோவன் யாழ். மதுவரித் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி கிருபாகரன், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் மனித உரிமைகள் ஆணையகத்தின் நிகழ்ச்சித்திட்ட உயர் அதிகாரி சிறிதரன் மற்றும் வேலணை 6 ஆம் வட்டாரம், 4ஆம் வட்டாரம் ஆகிய பகுதிக்கான கிராம சேவையாளர் குணசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு விடயம் குறித்து விளக்கமளித்தனர்.

இதில் வேலணைப் பகுதியில் இருக்கின்ற தனியார் நிறுவனங்களின் உறுப்பினர்கள் பொதுமக்கள் என 50 இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். (85)

# கள் விற்பனை ஆறுபேர் சிக்கினர்

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமான முறையில் கள்ளு மற்றும் சாராயம் விற்பனை செய்த 6 பேர் யாழ். மதுவரித் திணைக்களத்தினால் பிடிக்கப்பட்டுள்ளதாக யாழ். மதுவரி நிலையப் பொறுப்பதிகாரி என்.கிருபாகரன் தெரிவித்தார்.

வேலணை மற்றும் புங்குடுதீவுப் பகுதியில் கடந்த இரண்டு நாட்களுள் பிடிக்கப்பட்ட குறித்த 6 பேரும் ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எஸ்)

# திருமணத்தில் மோசடி இளைஞர் மீது வழக்கு




(திருநெல்வேலி)

பதிவுத்திருமணம் செய்த பெண்ணைக் கைவிட்டு மற்றொரு இளம் யுவதியுடன் குடும்பம் நடத்தப் புறப்பட்ட வாலிபர் ஒருவர் கடந்த வாரம் யாழ். நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டார். முதல் மனைவியின் மூலம் இவ்வாலிபருக்கு நான்கு மாதக் குழந்தையொன்றும் உள்ளது. தாவடியைச் சேர்ந்த 19 வயதான மனைவியைக் கைவிட்டுவிட்டு 17 வயதான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யுவதியுடன் காதல் வசப்பட்டு அவரைக் கைப்பிடித்தார். முதல் மனைவி யாழ்ப்பாணம் பெண்கள் சிறுவர் பொலிஸில் முறைப்பாடு செய்ததால் வாலிபரும் யுவதியும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது இளைஞனை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் மா.கணேசராசா உத்தரவிட்டார். யுவதி சிறுவர் இல்லமொன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வழக்கு விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டபோது வாலிபரை 50 ஆயிரம் ரூபாவுக்கான இரண்டு ஆட்பிணையில் விடுவிப்பதற்கு நீதிவான் உத்தரவிட்டார். முதல் மனைவி கணவன் மீது இலவச சட்டமன்றத்தின் மூலம் யாழ். நீதிமன்றில் தாபரிப்பு வழக்கு தாக்கல் செய்துள்ளார். (137)

# யாழ். இந்துக்கல்லூரியில் தாரணி ஒரு ஆச்சரியக் குறி



நெடுந்தீவு மகேஷ் எழுதிய தாரணி ஒரு ஆச்சரியக்குறி என்ற சிறுகதை நூலின் வெளியீட்டு விழா 12 ஆம் திகதி மாலை 3 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெற்றது. ஆறுதல் நிறுவன இயக்குனர் சுந்தரம் டிவகலாலா தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எஸ்.இளங்கோவன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

யாழ். தேசிய கல்வியற் கல்லூரி விரிவுரையாளர் பா.தனபாலன் வெளியீட்டுரையையும், கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் மற்றும் எழுத்தாளர் தாட்சாயணி ஆகியோர் ஆய்வுக் கட்டுரைகளையும் வழங்கினர்.

# உணவகங்களுக்கு தரச்சான்றிதழ்

(யாழ்.நிருபர்)


காரைநகர் பிரதேசத்திலுள்ள உணவகங்களுக்கு சுகாதாரப் பகுதியினரால் தரச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றது.

இங்குள்ள இரண்டு உணவகங்களுக்கு ஏ - தரச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இரண்டு உணவகங்களுக்கு பி - தரச் சான்றிதழ்களும் ஏனைய உணவகங்களுக்கு சி - தரச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

சி - தரச் சான்றிதழ் பெற்றுள்ள உணவங்கள் குறித்த காலப் பகுதிக்குள் பி - அல்லது ஏ - தரச் சான்றிதழைப் பெறத் தவறின் அந்த உணவகங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென சுகாதாரப் பகுதியினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை உணவு கையாளும் நிலையங்களில் கடமை புரிவோருக்கான அடையாள அட்டைகளை வழங்குவதற்கு காரைநகர் பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ளது. (10)

# சிங்கி இறால் பிடிக்க யாழில் முற்றாகத்தடை



(சிகரம்)

யாழ். மாவ்ட்டத்தில் சிங்கி இறால பிடித்தல், கொண்டுசெல்லல், விற்பனை செய்தல் என்பன முற்றாகத் தடைசெய்யப்பட்டிருப்பதாக பொலிஸ் ஊடகச் சந்திப்பில் தகவல் வெளியிடப்பட்டது.

இரண்டு வகையான சிங்கி இறால்கள் உரிய படங்களுடன் பெயரிடப்பட்டு இந்தத் தடை உத்தரவு 2000 ஆம் ஆண்டு மார்ச மாதம் 13 ஆம் திகதி வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி மூலம் விடுவிக்கப்பட்டிருப்பதாகப் பொலிஸ் தகவல்கள் தெரிவித்துள்ளன.

சிங்கி இறால் ஒன்று உயிருடன் சுமார் 5700 ரூபா வரையில் விற்கப்பட்டு வந்ததாகவும், இறந்த சிங்கி இறால் 500 ரூபா வரையில் விற்கப்பட்டதாகவும் தெரிவித்த அவர் புதிய வர்த்தமானி அறிவித்தலின்படி சிங்கி இறால் பிடிப்பதோ, விற்பதோ முற்றாகத் தடை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டைப் பகுதியில் இவ்வாறு சிங்கி இறால் பிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு ஒன்று பதிவுசெய்யப்பட்டிருப்பதாகச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்த யாழ். பொலிஸ் தலைமையகப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா தெரிவித்தார். (எஸ்)

நல்லவனுக்கு நலம் நடக்கும் என மட்டும் நம்பாது வல்லவனாயும் வாழ்ந்துவிடு பாப்பா - பாரதியார்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## ஏகாதிபத்தியத்தின் முகம்!

ஈராக் மக்கள் மீதான பேரழிவுத் தாக்குதலைத் தொடங்குவதற்கு நான்கு நாட்களுக்கு முன்னர், கூட்டணி நாடுகளின் கலந்தாய்வுக் கூட்டத்திற்குப் பின், அன்றைய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் செய்த பிரகடனம் இது: "உலகம் முழுமைக்கும் நாளை உண்மை விடியும்". அதாவது, ஏவுகணைகளின் முனையில் உண்மை உற்பத்தி செய்யப்படும் என்ற அமெரிக்காவின் கருதுகோளை முழு உலகும் தெரிந்து கொள்ளச் செய்தது.

இந்த உண்மையை வெளிப்படையான போர்கள் மூலமாகவும், மறைமுகமான இராஜதந்திரங்கள் மூலமாகவும் அமெரிக்காவும் அதன் ஏகாதிபத்திய நேசநாடுகளும் ஸ்தாபித்து வந்திருக்கின்றன. உலக அளவில் தனது மேலாதிக்கத்தை நிலைநிறுத்த அமெரிக்கா எதையும் செய்யத் தயங்காது என்பதையும் அது மீண்டும் மீண்டும் நிரூபித்திருக்கிறது.

அண்மையிலும் அதன் முகம் இன்னொரு தடவை அம்பலப்பட்டிருக்கிறது. அமெரிக்க விமான நிலையத்தில் உள்ளாடைக்குள் வெடிகுண்டுகளை மறைத்து வைத்து விமானத்தை வெடிக்கச் செய்ய முயன்ற ஒருவரை அமெரிக்க பொலிஸ் கைது செய்தது. அவர் ஏமனில் இருந்து செயற்பட்டு வரும் அல்கொய்தா தீவிரவாத இயக்கத்தை சேர்ந்தவர் என அறிவித்து அவரது முகவரியையும் வெளியிட்டது.

பின்னர் விசாரணையில் அமெரிக்கப் பொலிஸை அதிர்ச்சிப்படுத்தியதாய் உண்மை வெளித்தது. அந்த நபர் உண்மையில் சவூதிஅரேபியாவில் இயங்கி வரும் அமெரிக்க உளவுப் பிரிவைச் சேர்ந்தவர் என்பதும், ஏமனில் இருந்து செயற்பட்டு வரும் அல்கொய்தா இயக்கத்தோடு இணைந்து அந்த இயக்கத்தின் ரகசியங்களை தெரிந்துகொள்ள அனுப்பப்பட்டவர் என்பதும் வெளியானது.

பொதுவாக அமெரிக்க உளவுத் துறையினர் மற்ற நாடுகளில் எவ்வளவு பெரிய சதிவேலைகளில் ஈடுபட்டாலும் அவ்வளவு எளிதாக வெளியில் வராது. காரணம், அமெரிக்க உளவுத் துறையில் யார் யார் இருக்கின்றனர் என்று அதிலிருப்பவர்களுக்கே முழுமையாகத் தெரியாது. அதனால் தான் சவூதி அரேபியாவில் செயற்பட்டு வந்த அமெரிக்க உளவுத் துறையைச் சேர்ந்த ஒருவர் அமெரிக்க அதிகாரிகளினாலேயே தீவிரவாதி எனப் பிடிபட்டிருக்கிறார்.

ஒருவேளை அந்த வெடிகுண்டு வெடித்துச் சிதறியிருந்தால் அது ஏமன் நாட்டினால் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்டது என்றே வெளியில் தெரிய வந்திருக்கும். உடனே தாக்குதலைத் தொடங்க அமெரிக்காவுக்குக் காரணமும் கிடைத்திருக்கும்.

ஏற்கனவே அமெரிக்கா கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. இதனால் அங்கிருக்கும் மக்களில் ஐந்தில் ஒருவர் கடுமையான மன அழுத்தத்திற்கு உள்ளாகி மன நலம் பாதிக்கப்பட்டு வருகின்றனர் என ஆய்வு முடிவுகள் கூறுகின்றன. இதனால் அங்கு மக்களிடம் உண்டாகும் போராட்டத்தைத் திசைதிருப்ப, ஏனைய நாடுகளில் தலையீடுகளை நிகழ்த்தி வருகிறது.

இன்று உலகம் முழுவதும் 150 நாடுகளில் அமெரிக்காவின் படைகள் உண்டு. இதில் 14 இலட்சத்து 78 ஆயிரம் பேர் உள்ளனர். அந்தப் படையினரும் கடுமையான மன உளைச்சலுக்கு உள்ளாகியிருக்கின்றனர். பலர் மனநோயாளிகளாக மாறிவருகின்றனர்.

கடுமையான பொருளாதார நெருக்கடி, இராணுவ நெருக்கடி, மக்கள் போராட்டம் என தொடர் நெருக்கடிகளை அமெரிக்கா சந்தித்து வருகிறது. இந்நிலையிலும், உலக அளவில் தனது மேலாதிக்கத்தை தக்க வைக்க என்ன வேண்டுமானாலும் செய்யும் என்பதே மீண்டும் நிரூபணமாகியிருக்கிறது. இதுதான் ஏகாதிபத்தியத்தின் உண்மையான முகம்.

- ஆசிரியர்

# ஜெனிவா தீர்மானம் அழுத்தம் கொடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டதல்ல

(யாழ்.நிருபர்)

ஜெனிவா தீர்மானம் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்காக கொண்டுவரப்பட்டதல்ல. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்தி சமாதான முறையில் நல்லதொரு அரசியல் தீர்வினை எட்டி அனைத்து மக்களும் சமாதான முறையில் வாழ்வதை உறுதிப்படுத்துவதே அதன் நோக்கமாகும்.

இவ்வாறு நேற்றுக் காலை இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெற்ற ஜனநாயக அடிப்படையில் அரசியல், சமூக, உரிமைகளை வென்றெடுப்பதற்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அமெரிக்க தூதரக சிரேஷ்ட அரசியல் அலுவலர் போல் காட்டர் குறிப்பிட்டார்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தலைமையில் நடைபெற்ற இவ் விழிப்புணர்வுக் கருத்தரங்கில், போல் காட்டர் தொடர்ந்து பேசுகையில்,

விடுதலைப்புலிகள் - அரசு போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வு நிலை மீளக்கட்டியெழுப்பப்பட வேண்டும். கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாண மாவட்டங்களில் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு கட்டடங்கள், பாடசாலைகள் புனரமைக்கப்பட்டு மாணவர் பாடசாலை செல்வதைப் பார்க்க முடிகின்றது.

தொடர்ந்து இப்பிரதேசத்தின் அபிவிருத்திக்கும், மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கும் தேவையான நிதி உதவி வழங்கப்பட்டு வருகின்றது. இந்தப் பிரதேச மக்களின் வாழ்வில் இந்த நிதி உதவிகள் நல்ல தொரு மாற்றத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கின்றோம்.

போருக்குப் பின்னர் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்தார். இக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கு போதிய கால அவகாசம் இருந்தது. இன்னும் கால அவகாசம் முடிந்துவிட்டதாக நாம் கூறவில்லை.

ஜெனிவா தீர்மானம் அரசுக்கு அழுத்தம் கொடுக்கிறது என்று கூறவேண்டியதில்லை. ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றி அனைத்து மக்களும் சமாதான முறையில் வாழ வேண்டும் என்பதனையே எதிர்பார்க்கப்படுகின்றது.

அனைத்து மக்களினதும் உரிமைகள் சமமாக மதிக்கப்பட்டு நீதியானதும் நேர்மையானதுமான சுமுகமான தீர்வு ஏற்பட்டு எல்லா இன மக்களும் சமமாக வாழும் நிலை உருவாக வேண்டும் எனவும் குறிப்பிட்டார். (10)

## டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் டெங்கு ஒழிப்பு வாரம் இன்று திங்கட்கிழமை முதல் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இன்று 14 ஆம் திகதியிலிருந்து 21 ஆம் திகதி வரை அப்பகுதியிலிருந்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. ஒவ்வொரு வீடுகளாகச் சென்று நுளம்பு உற்பத்திக்கான காரணிகள் காணப்படுகின்றனவா என்று அவதானிக்கப்படவுள்ளது.

இந்த அவதானிப்பு நடவடிக்கைகளில் சுகாதாரப் பகுதியினரும், பொலிஸாரும் இணைந்து செயற்பட இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (100)

# கணக்காளர் சேவைக்கு ஆட்சேர்ப்பு: அரச சேவையில் உள்ளவர்கள் புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இற்காக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான விசேட போட்டிப்பரீட்சைக்கு மட்டுப்படுத்திய விண்ணப்பதாரிகளுக்கு சந்தர்ப்பம் வழங்காமையால் பாதிக்கப்பட்ட யாழ்.மாவட்ட அரச உத்தியோகத்தர்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை வடக்கு மாகாண ஆளுநருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் அனுப்பி வைத்துள்ளனர். அதன் விபரம் வருமாறு:

இலங்கை கணக்காளர் சேவைக்குறிப்பின் பிரகாரம் இப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் போது திறந்த மற்றும் மட்டுப்படுத்திய இரண்டு போட்டிப்பரீட்சைகளில் இருந்தும், தகுதியானவர்களை நேர்முகப்பரீட்சையுடன் நேரடியாக இணைத்துக்கொள்ளல் என்ற அடிப்படையில் மூன்று முறைகளில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இவ்விசேட பரீட்சையானது திறந்த போட்டிப் பரீட்சையாக மட்டும் நடைபெற இருப்பதால் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதி இருந்தும் வயதுக்கட்டுப்பாடு காரணமாக தோற்ற முடியாதுள்ளது. ஏற்கனவே அரச சேவையில் இருப்போராகிய நாம் மட்டுப்படுத்திய போட்டிப் பரட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளமையால் பாதிக்கப்பட்ட நிலையில் இப் பரட்சைக்கு தோற்றுவதற்காக எம்மையும் சேர்த்துக் கொள்வதற்கு சந்தர்ப்பம் அளிக்குமாறு கோரி பின்வரும் நியாயங்களை தங்களுக்கு தயவுடன் முன்னிலைப்படுத்துகின்றோம்.

இலங்கை கணக்காளர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை நாடளாவிய ரீதியில் 2006 (2007) ஆம் ஆண்டிற்குப் பின்னர் 6 வருடங்கள் கழித்து தற்போது நடைபெறவுள்ளது. எனினும் நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் இப்பரீட்சையானது நடைபெறுவதால் திறந்த போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான உச்ச வயதுக்கட்டுப்பாடு காரணமாக எம்மால் தோற்ற முடியாதுள்ளது.

இலங்கை கணக்காளர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விசேட போட்டிப் பரீட்சை - 2012 திறந்த பரீட்சையாகவும், முதல் தடவையாகவும் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் நடைபெறவுள்ள நிலையில் இதற்கு முன்னர் இச் சந்தர்ப்பமின்மை காரணமாக ஒரு தடவையேனும் இப்பரீட்சைக்கு தோற்றாத போதும், வயதுக்கட்டுப்பாடு காரணமாக திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற முடியாத, ஏற்கனவே அரச சேவையிலுள்ள எம்மை மேலும் பாதிப்பிற்குள்ளாக்கியுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் நிலவிய அசாதாரண நிலைமைகளினால் முன்னர் நடைபெற்ற திறந்த போட்டிப் பரீட்சைக்கு தோற்ற முடியாதிருந்த எமக்கு மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கும் இடமளிக்கப்படாமையானது பெரும் மன உளைச்சலுக்கு ஆளாக்கியுள்ளது.

இலங்கை கணக்காளர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான பரீட்சை வினாத்தாள்கள் திறந்த மற்றும் மட்டுப்படுத்திய ஆகிய இரண்டிற்கும் பொதுவானதாக இருப்பதால், இவ்விசேட பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏற்கனவே அரச சேவையிலுள்ளவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குதல் நியாயபூர்வமானதாக இருக்கும்.

வடக்கு மாகாணத்தில் ஏற்கனவே அரச சேவையிலுள்ள தகுதியான நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களில் இருந்து, நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்து கௌரவ ஆளுநரின் சிறப்பு அனுமதியுடன் பதில் கணக்காளர்களாக நியமிக்கப்பட்டுள்ளவர்களும் இப்பரீட்சைக்கு தோற்ற வேண்டிய நிலையில் உள்ளனர். எனினும அதற்கான சந்தர்ப்பமும் வழங்கப்படவில்லை.

எனவே எமக்கும் இவ்விசேட பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கும் வகையில் இப்பரீட்சையுடன் மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சையையும் சேர்த்து நடத்த வேண்டும் அல்லது திறந்த போட்டிப் பரீட்சைக்கான உச்ச வயதுக் கட்டுப்பாட்டை அரச சேவையிலுள்ளவர்களுக்கு தளர்த்தப்படவேண்டும் எனத் தயவுடன் எதிர்பார்க்கின்றோம்.

ஏற்கனவே அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் அரசாங்க நடைமுறைகள், விழுமியங்கள், சேவை அனுபவங்கள் கொண்டவர்கள். எனவே அவ்வகையினராகிய எம்மை இலங்கை கணக்காளர் சேவைக்குறிப்பின் பிரகாரம் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சந்தர்ப்பம் வழங்குதல் சிறப்பானதாக அமையும்.

மேற்படி விடயங்களை சாதகமான முறையில் பரிசீலனை செய்து ஏற்கனவே அரச சேவையிலுள்ள எம்மை வடக்கு, கிழக்கு மாகாண கணக்காளர் சேவையின் விசேட பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சந்தர்ப்பம் அளிக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# குடிநீர் இன்றித் துன்பமுறும் பொலிகண்டி கரையோர மக்கள்

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு பருத்தித்துறைப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட இன்பருட்டி-திக்கம் சந்தி ஊடான பொலிகண்டிப் பகுதியில் வாழும் கரையோர மக்கள் குடிநீர், வீதிப் புனரமைப்பு இன்றி பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருவதாக அம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

கரையோரப் பகுதிகளில் வாழும் நாம் நன்னீரைப் பெறுவதில் நாளாந்தம் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றோம். குறிப்பாக நன்னீரைப் பெற்றுக்கொள்ள ஒரு கிலோ மீற்றருக்கு அப்பால் செல்ல வேண்டியுள்ளது.

கடற்கரையோரப் பகுதிகள் உவர் நீராக இருப்பதால் நன்னீரைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. கடந்த 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நீர்த்தாங்கிகள் வைக்கப்பட்டு சிறந்த முறையில் நாம் நன்னீரைப் பெற்றுவந்த நிலையில், இத்திட்டம் முடிவுற்றதால் நாம் தற்போது குடிநீரின்றி கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றோம்.

இதேவேளை நாம் நன்னீர் எடுத்துவரும் பகுதியில் நன்னீர்த்திட்டம் நிறுவனங்கள் மூலமாக முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும், இப்பகுதியில் இத்திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும் எனின், இங்கு தண்ணீர்த் தாங்கி ஒன்று கட்டப்பட வேண்டும் என பருத்தித்துறைப் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அவசர தேவைகள் என்றாலும் நாம் அவ்வளவு தூரம் சென்றே குடிநீரைப் பெறுவதாக தெரிவிக்கும் மக்கள், தொண்டைமானாறு, பொலிகண்டி வரையும் வியாபாரி மூலையிலிருந்து பருத்தித்துறை வரையும் உள்ள வீதி பள்ளம் நிரவி தார் ஊற்றப்பட்டுள்ள நிலையில் கரையோர வீதிகள் புனரமைக்கப்படாதுள்ளதாக அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

எனவே இவ்விடயம் தொடர்பாக மக்களின் குடிநீர்ப் பிரச்சினைக்கு உரியவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுகின்றனர். (116)

## வடமராட்சியில் குறைவடைந்துள்ள சட்டவிரோத மதுப் பாவனை

(வடமராட்சி)

பருத்தித்துறை மதுவரித் திணைகளத்தினால் மேற்கொளளப்படும் சட்டவிரோத மதுப் பாவனையற்ற கிராமங்களை உருவாக்குதல் வேலைத்திட்டத்தின் கீழ் வடமராட்சிப் பகுதியில் சட்டவிரோத மதுப் பாவனை 90 சதவீதம் குறைந்துள்ளது. ஏனைய 10 வீதமும் எதிர்கால எமது நடவடிக்கைகளில் குறையுமென பருத்தித்துறை மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி தி.அசோகரத்தினம் தெரிவித்துள்ளார். அவர் இது தொடர்பாகத் தெரிவிக்கையில்,

சட்டவிரோத மதுப்பாவனை இந்த வருடத்திலேயே மிகவும் சிறப்பான முறையில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. சட்டவிரோத மதுப்பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கு அந்தந்தக் கிராம அலுவலர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஒத்துழைப்புடன் சட்டவிரோத மதுப்பாவனை அதனால ஏற்படுகின்ற பாதிப்புக்கள் தொடாபில் அந்தந்தக் கிராமங்களில் சென்று அப்பகுதி மக்களுக்குத் தெளிவான கருத்தரங்கு மற்றும் விழிப்புணர்வுகளை நடத்தி வருகின்றனர்.

இதில் அல்வாய் தெற்கு, கரவெட்டி மத்தி, தொண்டைமானாறு, புலோலி தெற்கு, அல்வாய் வடமேற்கு போன்ற இடங்கள் சட்டவிரோத மதுப்பாவனையற்ற இடமாக இனங்காணப்பட்டுள்ளது. அத்தோடு உடல் உள ரீதியாகவே சமூகப் பொருளாதார ரீதியாகவே மற்றும் கலாசார ரீதியாகவும் இதனால் அளவுக்கு அதிகமான சட்டத்திற்குட்பட்ட மதுப்பாவனையால் ஏற்படுகின்ற தீங்குகள் தொடர்பான ஒழுங்கு முறைகள்ச் செயற்பாட்டின் மூலம் விழிப்புணர்வை அம்மக்களுக்கு ஏற்படுத்தியிருந்தோம்.

இத்திட்டத்தில் சட்டவிரோத மதுப்பாவனை இடம்பெற்றால் எமது திணைக்களத்தின் ஊடாக நாம் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதுடன் அதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பையும் நாம் நாடி நிற்கிறோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (116)

## இரட்டைக் கொலை வழக்கில் மௌனமாக இருந்த சாட்சி

(திருநெல்வேலி)

சுழிபுரம் இரட்டைக் கொலை வழக்கில் சாட்சியமளித்த இளம் பெண்ணொருவர் குறுக்கு விசாரணையின் போது பல கேள்விகளுக்குப் பதில் அளிக்காமல் மௌனம் சாதித்ததுடன் சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது எனவும் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை இவ்வழக்கு யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றத்தில் நீதிபதி ஜெ.விஸ்வநாதன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கடந்த 2009 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 8 ஆம் திகதி சுழிபுரத்தில் இராசன் றசீதரன் (வயது - 20) மற்றும் அவரது தாயார் நிமலா (வயது - 44) ஆகியோரைக் கொலை செய்ததாக இரண்டு பெண்கள் உட்பட எட்டுப்பேர் மீது சட்டமா அதிபரால் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

முதலாவதாக கொலை செயயப்பட்ட றசீதரனின் மனைவியான செல்வசாந்தி (வயது-21) சாட்சியமளித்தார். சம்பவதினம் இரவு 8.30 மணியளவில் தாம் வசித்து வந்த அகதி முகாமிலிருந்து வீடு ஒன்றுக்கு தொலைக் காட்சி பார்ப்பதற்காகச் சென்றதாகவும், 100 மீற்றர் தூரம் செல்வதற்கிடையில் திடீரென அங்கு வந்த 1 ஆம் எதிரி தனது கணவனைக் கத்தியால் வெட்டியதாகவும், குரல் சத்தம் கேட்டு அங்கு ஓடிவந்த கணவனின் தாயாரை 2 ஆம் எதிரி கத்தி போன்ற ஒன்றினால் வெட்டியதாகவும், அவர் சாட்சியமளித்தார். ஏனைய எதிரிகளில் சிலர் கைகளில் தடிகள், பொல்லுகளை வைத்திருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பொன்னுச்சாமி அனிஷா (வயது-24) சாட்சியமளித்தபோது சம்பவத்தைத் தான் நேரில் கண்டதாகக் குறிப்பிட்டார். இந்நிலையில் மேல் விசாரணைக்காக அடுத்த மாதம் 28 ஆம் திகதி வழக்கை நீதிபதி ஒத்திவைத்தார். (137)

## நிலக்கண்ணி வெடித்தது

நாகர்கோயில் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணி இடம்பெற்ற வேளை திடீரென நிலக்கண்ணி ஒன்று வெடித்துள்ளது.

நேற்றுமுன்தினம் காலை 9.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் எந்தவித சேதமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எஸ்)

## காப்பெற்றாக 6ஆம் குறுக்கு வீதி

(குருநகர்)

யாழ்.ஆறாம் குறுக்கு வீதியும் 'காப்பெற்' வீதியாகச் செப்பனிடும் வேலைகள் நடைபெற்று வருகின்றது.

பிரதான வீதியில் பிலிப்ஸ் நேசிங்ஹோம் சந்தியில் இருந்து குருநகர் கடற்கரை வீதி வரையான பகுதியே ஆறாம் குறுக்கு வீதியாக அமைந்துள்ளது.

இதனிடையே குறுக்காக அமைந்துள்ள பாங்ஷால் வீதியும், கடற்கரை வீதியும் ஏற்கனவே 'காப்பெற்' வீதியாக மாற்றம் பெற்றுள்ளதும் சுட்டிக் காட்டத்தக்கது. (68)

## 50 வருடங்களாக புனரமைக்கப்படாத வீதி

வரணி வடக்கு வாழைத் தோட்டம் பழுதனை வீதி மிக நீண்டகாலமாகப் புனரமைப்புச் செய்யப்படாமல் இருப்பதால் இவ் வீதியால் பயணத்தை மேற்கொள்ள முடியாது மக்கள் சிரமங்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 50 வருடங்களாகப் புனரமைக்கப்படாத வீதி தற்போது பற்றைகளால் மூடி பயணிக்க முடியாதவாறு காணப்படுவதாகவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனா.

மாசேரி, காட்டுப்புலம், மாவில போன்ற கிராம மக்கள் முன்னர் இவ்வீதியையே பயன்படுத்தி வந்த நிலையில் வீதி புனரமைக்கப்படாததால் பருத்தித்துறை கொடிகாமம் பிரதான வீதியால் பயணிக்க வேண்டியுள்ளதாகவும், இதனால் நேரவீண் விரயம் ஏற்படுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் பல்வேறு வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டு வரும் நிலையில் இவ்வீதியையும் புனரமைப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுத்துச் செயற்பட வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுகின்றனர். (150)

## ஒருநேர பேருந்துச் சேவை; சிரமப்படும் மாணவர்கள்

(பூநகரி)

பூநகரிப் பிரதேசத்தைச் சேர்ந்த கௌதாரிமுனை, வெட்டுக்காடு, வினாசியோடை, பரமன்கிராய் பகுதியில் இருந்து பூநகரி மகா வித்தியாலயத்திற்குக் காலையில் அரச பேருந்தில் வரும் மாணவர்கள் பாடசாலை விட்டால் வீடு செல்ல முடியாத நிலையில் நீண்ட நேரம் தாமதிக்க வேண்டிய நிலைக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கின்றனர்.

பாடசாலை மாணவர்களின் நலன்கருதி இப்பேருந்து சேவை நடைபெறாத நிலையில் அதிகாலை 6 மணிக்கு வீட்டில் இருந்து புறப்படும், தரம் 6 இற்கு மேல் படிக்கும் 50 இற்கு மேற்பட்ட மாணவர்கள் இரவு நேரத்திலேயே வீடு வந்து சேரும் நிலை ஏற்படுவதாகவும் பிள்ளைகளின் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

இம்மாணவர்களின் நலன் கருதி இப்பகுதிக்கு பாடசாலை விட்டபின் மாணவர்கள் வந்து சேரக்கூடிய முறையில் பேருந்து சேவை ஒன்றை நடத்த போக்குவரத்துச் சபையின் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (112)

## வேலணைப் பிரதேசத்தில் டெங்கு கட்டுப்பாடு

(வேலணை)

தீவகப் பகுதிகளில் டெங்கு அபாயத்திலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்குடன் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை பொலிஸாரும், வேலணைப் பிரதேச சபையும் சுகாதாரப் பரிசோதகர்களும் இணை ந்து இந் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.அல்லைப்பிட்டி, மண்கும்பான், செட்டிபுலம், துறையூர், அம்பிகை நகர், புளியங்கூடல், சரவணை, வேலணை ஆகிய பகுதிகளில் இச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதைவிட இப்பகுதிகளில் ஊர்காவற்றுறை பொலிஸாரும் ஒலி பெருக்கிகள் மூலம் டெங்கு நுளம்பு தொடர்பாக அறிவுறுத்தல்களை மக்களுக்கு வழங்கி வருகின்றனர்.

இதேவேளை தனியார் நிறுவனங்கள், கடை உரிமையாளர்கள், பொதுநிறுவனங்கள் சூழலை மிகவும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் எனவும் இதை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸார் ஒலி பெருக்கி மூலம் தெரிவித்துள்ளார். (85)

## குடும்ப அட்டை மீளாய்வுப் பதிவு

வண்ணார்பண்ணை ஜே-82 பிரிவு கிராம சேவையாளர் பகுதி மக்களுக்கான குடும்ப அட்டை மீளாய்வுப் பதிவுகள் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் தனது அலுவலகத்தில் நடைபெறும் என மேற்படி பிரிவு கிராம சேவையாளர் அறிவித்துள்ளார்.

இதுவரை மீளாய்வுப் படிவங்களை பூரணப்படுத்திக் கொடுக்காதவர்கள் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் கையளிக்குமாறும், 15 ஆம் திகதி தேசிய அடையாள அட்டையுடன் குடும்பத் தலைவர் சமுகமளிக்க வேண்டுமெனவும் உதவிப் பணம் பெறுபவர்களும் தமது உதவிப்பண அட்டையுடன் வருமாறு அவர் தெரிவித்துள்ளாா. (10)





1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வடக்கு மாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்களை மீள்குடியேற்றுதல் தொடர்பான கூட்டம் அண்மையில் மன்னார் மாவட்டத்தில் நடைபெற்றது. வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், கைத்தொழில் வர்த்தக அமைச்சர் ரிசாட் பதியுதீன், அமைச்சரின் ஆலோசகர் எம்.வாமதேவன், வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஷ் உள்ளிட்ட பிரதிநிதிகள் இதுகுறித்து கலந்துரையாடுவதைக் காணலாம்.

# விரைவில் மருதபுரம் கிராமம் துரித அபிவிருத்தியைக் காணும்

(காரைநகர்)

காரைநகர் - மருதபுரத்தில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் 350 குடும்பங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக காரைநகர் பிரதேச எதிர்க்கட்சித் தலைவரும், காரைநகர் பிரதேச ஈ.பி.டி.பி அமைப்பாளருமான வி.கண்ணண் தெரிவித்துள்ளார்.

மருதபுரம் மருதமலை முருகன ஆலய மகாகும்பாபிஷேக இறுதி நாள் நிகழ்வுகள் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற போது அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்;

காரைநகரில் மிகவும் பின் தங்கிய நிலையிலுள்ள இக்கிராமத்தின் அபிவிருத்தி குறித்து நடவடிக்கைகள் படிப்படியாக எடுக்கப்பட்டு வருகிறது.

இதன் பிரகாரம் இக்கிராமத்திலுள்ள வீதிகள் புனரமைக்கப்பட்டு பிரதேச சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இம் மக்களுக்காக ஏனைய தேவைகள் படிப்படியாக பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.



இவ்வாலயத்தின் திருப்பணிகளுக்காக ஆலய பரிபாலன சபையினர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் விடுத்த கோரிக்கையை அடுத்தே அவரின் நிதிப்பங்களிப்பிலும், மக்களின் பங்களிப்பிலும் வாலயப் புனரமைப்பு பணிகள் இடம்பெற்றுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

# உணவு கையாளும் நிலையங்களை தரப்படுத்தும் செயற்பாடு

(வேலணை)

தீவகப்பிரதேசத்தில் உணவு கையாளும் நிலையங்களை தரப்படுத்தும் செயற்பாடு நேற்று முன்தினம் வேலணை வைத்திய அதிகாரி தலைமையில் மேற்கொள்ளப்பட்டது.

நெடுந்தீவு, நயினாதீவு, புங்குடுதீவு ஆகிய பகுதிகளில் உணவு கையாளும் நிலை மேம்பாடு தொடர்பாகவும், உணவு கையாளும் சுகாதாரங்கள் கடைப்பிடிக்க வேண்டிய தனிநபர் சுகாதாரம் என்பன பற்றியும் அறிவுரை வழங்கப்பட்டது.

வேலணை வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள தொழிற்சாலைகள், வெதுப்பகம், உணவகம் என்பன மூன்று வகையாகப்பிரிக்கப்பட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இதன் போது 6 உணவகங்களுக்கு ஏ தரமும், இரண்டு தொழிற்சாலைகள், 30 உணவகங்களுக்கு பி தரமும், 3 உணவகங்களுக்கு சி தர சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

இதில் வேலணை பிரதேச சபையின் தவிசாளர் சின்னையா சிவராசா, ஊர்காவற்றுறை வைத்தியசாலையின் அதிகாரி அருணா புண்ணியமூர்த்தி, சுகாதார வைத்திய அதிகார, வெதுப்பக, உணவுக் கடை உரிமையாளர்கள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர். (85)

# யுவதியைக் கடத்திய வழக்கில் இளைஞருக்குப் பிணை

(திருநெல்வேலி)

16 வயதுக்குட்பட்ட யுவதியொருவரை அவரது பெற்றோரின் பாதுகாப்பிலிருந்து கடத்திச் சென்றதாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இளைஞன் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

பளையை சேர்ந்த இவ்விளைஞன் (வயது - 27) கடந்த மூன்று வாரங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.


இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சந்தேகநபரின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனுவின் மீதான தீர்ப்பு வழங்கப்பட்டது. தலா இரண்டு இலட்சம் ரூபா பெறுமதிக்கு 3 பிணையாளிகளை சமர்ப்பித்து சந்தேக நபர் பிணையில் செல்வதற்கு நீதவான் கட்டளையிட்டார்.

மேலும் சந்தேக நபர் பளை பொலிஸ் நிலையத்தில் ஒவ்வொரு மாதக்கடைசி ஞாயிற்றுக்கிழமையும் கையெழுத்திட வேண்டும் எனவும் உத்தரவிட்டார். (137)



ஆயுர்வேத திணைக்களமும் கொரியாவின் கே.ஓ.ஐ.சி.ஏ. அமைப்பின் தலைவரான டாக்டர் ஹான் தலைமையிலான அக்கு பஞ்சர் சிகிச்சைக் குழுவினர் அண்மையில் யாழ்ப்பாணம் குருநகர் 372 இலக்கம் பாங்ஷால் வீதியில் அமைந்துள்ள மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையில் இலவச கொரியன் அக்கு பஞ்சர் சிகிச்சையினை ஆரம்பித்து வைத்தார். (05)

# பரமர் சங்கமம்



பிரேரணைகள் மூலம் பல அருமையான தீர்மானங்களை நாடு பூராகவும் அமைந்துள்ள அமைப்புகள் நிறைவேற்றி வருகின்றன. இவற்றில் எத்தனை தீர்மானங்கள் நடைமுறையில் செயலுருப் பெறுகின்றன?

இல்லை எண்டாலும் ஆயிரக்கணக்கான தீர்மானங்கள் நாள், வாரம், மாதம், வருடங்கள் தோறும் நிறைவேற்றப்படுகின்றன.

சன சமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள் என்றில்லாமல் தொழிற்சங்கங்கள் ஆலயங்களின் பொதுச் சபைகள் எனப்பல மட்டங்களிலும் இருக்கின்ற மக்கள் சமூக அமைப்புகளும் ஒவ்வொரு நெருக்கடிகளின் போதும் தீர்மானங்கள் எடுத்து ஜனாதிபதிக்கோ குறிப்பிட்ட அமைச்சுகளுக்கோ அனுப்பி வைப்பதுடன் ஓய்ந்து போகின்றன.

அவற்றில் சில பத்திரிகைகளில் செய்திகளாக வெளிவந்து பலரது கவனங்களையும் ஈர்த்தாலும் செயற்படுத்தப்படாமல் ஆவணப் பொதிகளில் கட்டிப்போடப்படுவதுடன் சரி.

நடைமுறைப்படுத்தக்கூடிய அதிகாரங்களைக் கொண்ட மாநகர சபைகள், நகர - பிரதேச சபைகள் தோறும் நடைபெறுகின்ற மாதாந்தக் கூட்டங்களில் கூட பல பிரேரணைகள் கொண்டுவரப்பட்டு எடுக்கின்ற தீர்மானங்களும் நடைமுறைச் சாத்தியம் இல்லாமல் தூங்கு நிலை அடைவதுண்டு.

இல்லாமலும் நாட்டையே கட்டி ஆள்கின்ற நாடாளுமன்றத்தால் எடுக்கப்படுகின்ற எத்தனையோ தீர்மானங்கள் வாக்கெடுப்பில் தோல்வி கண்டு கைவிடப்படும் நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன.

இதனால் தீர்மானங்கள் எடுக்கப்படாமல் சில வேலைத்திட்டங்களை உடனடியாக முடிவெடுத்து நிறைவேற்றி விடுகின்ற செயற்பாடுகளும் பரவலாக நடந்தேறி உள்ளதையும் கண்டுள்ளோம்.

சமீபத்தில் தம்புள்ள மற்றும் காத்தான்குடிப் பள்ளிவாசல்களில் நடைபெற்ற அசம்பாவிதங்களால் பாதிக்கப்பட்டவர்கள் கூட்டம் கூட்டி பிரேரணைகள் மூலம் தீர்மானங்களை நிறைவேற்றி சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பியதைப் பத்திரிகைகள் வாயிலாக அறிந்தோம்.

அது சம்பந்தமான தீர்வுக்கு எட்டப்பட்ட முன்பாகவே மேலும் இந்துக்கள், கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள் சார்பான இன, மத, மொழிகள் சார்ந்த அசம்பாவிதங்கள் நடந்தேறுவதும் அவையும் தீர்மானங்கள் எடுப்பதுடன் ஓய்ந்து கொண்டிருப்பதையுமே காணக்கூடியதாக இருக்குப் பாருங்கோ.

ஏன் இன்னும் பல்வேறு சமூகங்களிலும் வாழ்கின்ற மக்கள் மனதில் இத்தகைய கிஞ்சல் தனமான செயற்பாடுகளில் ஈடுபடாமல் சகல இன, மத, மொழியினரும் ஒற்றுமையாக வாழவேண்டுமென்ற தீர்மானத்திற்கு வரமுடியவில்லை? பின்னை இது யோசிக்க வேண்டிய விசயமில்லையே....

# விபத்தில் சிக்கி கால் முறிந்தது

(கொடிகாமம்)

கொடிகாமம் - தம்பாந் தோட்ட பகுதியில் முச்சக்கர வண்டியும், மோட்டார் சைக்கிளும் விபத்தில் சிக்கியதில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் கலை 11 மணியளவில் இடம் பெற்ற இவ் விபத்தில் கொடிகாமம் பாலாவியைச் சேர்ந்த க.ரவிச்சந்திரன் (வயது - 41) என்பவரே கால் முறிந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (எஸ்)

# வண்ணான்குளம் பாலம் துரிதகதியில் புனரமைப்பு

(வண்ணை)

வண் - வட மேற்கு பத்திர காளி கோவில் வீதியில் திரு வள்ளுவர் சன சமூக நிலையத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள வண்ணான் குளம் வீதிப் பாலம் துரிதமாக அமைக்கப்பட்டு வருகின்றது.

கடந்த இருவருடங்களுக்கு மேலாக மேற்படி பாலம் பழுதடைந்து இருந்ததால் அவ்வீதியூடாக கொக்குவில் மேற்கு மற்றும் ஆனைக்கோட்டை பகுதிகளுக்குச் செல்லும் பிரயாணிகள் மிக நீண்ட தூரம் வேறு வீதியூடாகவே சென்றுவரும் நிலைமைகள் இருந்து வந்தது.

பால வேலைகள் முடிவடைவதால் அப்பாலத்தூடாக பயணிக்கும் மக்கள் யாழ். மாநகர முதல்வருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (68)

# முரசின் இன்றைய பலன்

(14.05.2012 –திங்கட்கிழமை)

நந்தன வருஷம் வைகாசி மாதம் 01 ஆம் திகதி. நவமி முன்னிரவு 8.50 வரை.
நட்சத்திரம் சதயம். மரணயோகம் பின்னிரவு 12.14 வரை.
இராகுகாலம் 7.23 - 8.53 வரை. சுபநேரம 11.53 - 12.03 வரை.
எமகண்டம் 10.23 - 11.53 வரை. குளிகைகாலம் 1.23 -2.53 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | உற்சாகம், அன்னியரால் அனுகூலம், கறுப்பு நிற மனிதரால் நன்மை, தொழில் பெருகும். |
| ரிஷபம் | எதிலும் வெற்றி, மனஸ்தாபம், தேவையற்ற பிரயாணம் தவிர், குடும்பச் சிறப்பு. |
| மிதுனம் | கடவுள் வழிபாடு, குடும்பத்தில் சஞ்சலம், பிரச்சினைகள் சுமுகமாகும், பணவரவுகள். |
| கடகம் | கவனம் தேவை, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, பணியில் விரும்பிய இடமாற்றம், அவதானம். |
| சிம்மம் | மனத்தெளிவு, பொன்பொருள் சேரும், தெய்வ தரிசன பயணம், உறவினர் தேடி வருவார். |
| கன்னி | நண்பரால் நன்மை, உடல் நலனில் முன்னேற்றம், அன்னியருதவி, பணபபுழக்கம். |
| துலாம் | தொழில் முயற்சி, எதிர்பாராத செலவுகள், தடைகள் விலகும், வேலை வாய்ப்பு கிட்டும். |
| விருச்சிகம் | மனமகிழ்ச்சி, அதிகாரிகளை அனுசரிக்கவும், வாக்குறுதிகளை காப்பாற்றவும். |
| தனுசு | பணியில் சிரமம், வங்கிக்கடன்கள் தீரும், நினைத்ததெல்லாம் நிறைவேறும், ஒற்றுமை. |
| மகரம் | பதவியுயர்வு, பொறுப்புக்கள் அதிகரிக்கும், பெற்றோர்கள் உதவி, ஆடை ஆபரண சேர்க்கை. |
| கும்பம் | மனதில் உற்சாகம், எதிர்பாராத நற்செய்தி, குடும்பத்தில் ஒற்றுமை, வெளியூர்ப் பயணம். |
| மீனம் | சுலப நன்மை, திடீர் தனஇலாபம் கிட்டும், அன்னியரால் அனுகூலம், வெளிநாட்டு வாய்ப்பு. |

# இந்தியாவின் தங்க மகன்

(கொல்கத்தா)

இந்தியாவின் தங்க மகன் சச்சின் டெண்டுல்கர் என்று மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி புகழாரம் சூட்டியுள்ளார்.

கொல்கத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் - மும்பை இண்டியன்ஸ் அணிகளுக்கு இடையேயான ஆட்டம் தொடங்குவதற்கு முன்பு, மேற்கு வங்க மாநிலம் சார்பில் சச்சினுக்கு பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது. சர்வதேச கிரிக்கெட்டில் 100 சதங்களை அடித்த சாதனைக்காக சச்சின் அப்போது கௌரவிக்கப்பட்டார்.

அப்போது மம்தா பேசியதாவது: சச்சின் இந்தியாவின் தங்க மகன், எனவேதான் அவருக்கு தங்கத்தினால் ஆன கிரிக்கெட் துடுப்பு, பந்தை எங்கள் மாநிலம் சார்பில் பரிசாக அளித்துள்ளோம். உங்கள் சாதனைக்காக நாங்கள் தலைவணங்குகிறோம். உங்களால் அனைவருமே பெருமையடைந்துள்ளோம் என்று மம்தாபேசினார்.

பாராட்டை ஏற்றுப் பேசிய சச்சின், உங்கள் அனைவரது ஆதரவுக்கும் நன்றி. கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் பலமுறை விளையாடியுள்ளேன். அவை மகிழ்ச்சிகரமான அனுபவம். இப்போது இந்த பாராட்டு விழாவும் மறக்க முடியாத நிகழ்வாக அமைந்துள்ளது. எனக்கும், இந்திய கிரிக்கெட் அணிக்கும் கொல்கத்தா மக்கள் எப்போதும் ஆதரவு அளிக்க வேண்டும் என்றார்.



# கால்பந்து ரசிகர்கள் காயம்

(இஸ்தான்புல்)

துருக்கி தலைநகரில் கால்பந்துப் போட்டியின்போது ஏற்பட்ட கலவரத்தில் பெருமளவான ரசிகர்கள் காயமடைந்துள்ளனர்.

துருக்கி தலைநகர் இஸ்தான்புல்லில் லீக் கால்பந்து போட்டி நடந்தது. அதில் பெனர்பாச் அணியும், கலாடாசரி அணியும் விளையாடின. அதில், கலாடாசரி அணி வெற்றி பெற்றது. இதனால், ஆத்திரம் அடைந்த பெனர்பாச் அணி ரசிகர்கள் ரகளை மற்றும் கலவரத்தில் ஈடுபட்டனர்.

நடுவரின் ஒருதலை பட்சமான நடவடிக்கையே தங்களது அணி தோல்விக்கு காரணம் என குற்றம் சாட்டினர். கலவரத்தில் ஈடுபட்ட ரசிகர்கள் பொலிஸார் மீது கல்வீசி தாக்கினர். மேலும் பொலிஸ் வாகனங்களை தீ வைத்து எரித்தனர். மைதானத்தில் இருந்த இருக்கைகள், ரோட்டோர கடைகள் அடித்து நொறுக்கப்பட்டன.

இதற்கிடையே கலவரத்தில் ஈடுபட்ட ரசிகர்களை மிளகு ஸ்பிரே அடித்து பொலிஸார் கலைத்தனர். இச்சம்பவத்தில் பலர் காயம் அடைந்தனர். இதனால் இஸ்தான்புல் நகரில் பதட்டமும் பரபரப்பும் ஏற்பட்டது.

# மெருகேறும் ஆட்டம்

(மும்பை)

ரோகித் சர்மாவின் ஆட்டம் ஆண்டுக்கு ஆண்டு மேருகேறி வருகின்றது என மும்மை இன்டியன் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரும், தென்னாபிரிக்க அணியின் முன்னாள் அதிரடி வீரருமான கிப்ஸ் தெரிவித்தார். ரோகித்சர்மாவின் ஆட்டத்தை நான் கடந்த 5 ஆண்டுகளாக பார்த்து வருகிறேன். அவரது ஆட்டத்தில் ஆண்டுக்கு ஆண்டு நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. அவரது ஆட்டம் அவரை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்கிறது. அவரது திறமை பற்றி யாரும் கேள்வி கேட்க இயலாது. இந்திய அணியில் உள்ள மற்றொரு திறமையுள்ள வீரர் வீராட் ஹோலி. ஆட்டத்தின் நுணுக்கம், ஆடும் திறமை ஆகியவற்றில் ஹோலியைவிட ரோகித் சர்மாவே சற்று சிறந்தவர். இனி வரும் காலங்களில் இருவரும் இந்திய அணியில் மேட்ச் வின்னர்களாக இருப்பார்கள். டெக்கான் அணிக்காக நானும்,ரோகித் சர்மாவும் 3 ஆண்டு ஆடினோம். நான் அவரின் ரசிகர் ஆவேன் எனவும் அவர் தெரிவித்தார்.

# இலங்கையில் போட்டி இல்லை

பாகிஸ்தான் அணிக்கும் அவுஸ்ரேலிய அணிக்குமிடையில் இலங்கையில் இடம்பெறவிருந்த தொடர் இலங்கையில் இடம்பெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தொடர் இடம்பெறவிருந்த அதே காலப் பகுதியிலே சிறிலங்கா பிறீமியர் லீக் தொடர் இடம் பெறவுள்ளதன் காரணமாகவே அவுஸ்ரேலிய, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான தொடரை இலங்கை நடாத்த முடியாது போயுள்ளது.



கடந்த மார்ச் மாதம் இத்தொடரை இலங்கையில் நடாத்துவது தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அணுகிய போது இலங்கைக் கிரிக்கெட் சபை அதற்கு சம்மதம் தெரிவித்திருந்தது. மார்ச் மாதத்தின் போது சிறிலங்கா பிறீமியர் லீக் தொடர் தொடர்பான எந்தவித முடிவுகளும் காணப்பட்டிருக்கவில்லை. தற்போது சிறிலங்கா பிறீமியர் லீக் தொடர்பான உறுதியான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுபான் அஹமட், அவுஸ்ரேலியாவுக்கெதிரான. தொடரை நடாத்துவதற்கு வேறு இடங்களை தற்போது தேட வேண்டியுள்ளதாகத் தெரிவித்தார். அத்தொடரை இலங்கையின் நடாத்துவதற்கான இறுதிக்கட்ட ஒப்புதல்களைப் பெறவே காத்திருந்ததாகவும், எனினும் சிறிலங்கா பிறீமியர் லீக் தொடர் காரணமாக அத்தொடரை இடம்மாற்ற வேண்டிய தேவையேற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தங்களின் முடிவு தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த இலங்கைக் கிரிக்கெட் சபையின் செயலாளர், சிறிலங்கா பிறீமியர் லீக் தொடர் இடம்பெறும் காலப்பகுதியில் போதியளவு மைதானங்கள் இன்னொரு தொடரை நடாத்துவதற்குக் காணப்படாது எனவும், அத்தோடு இன்னொரு தொடரை நடாத்துவதற்குரிய வசதிகளும் காணப்படாது எனத் தெரிவித்தார்.

அத்தோடு அதிகமான கிரிக்கெட்போட்டிகள் இடம் பெற்றால் செம்டெம்பர் மாதம் இலங்கையில் இடம் பெறவுள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக ருவென்ரி 20 தொடர் இடம்பெறும்போது ஆடுகளங்கள் நல்லநிலையில் காணப்படாது எனவும்தெரிவித்தார்.

# பங்கேற்க ஒப்புதல்

சம்பியன்ஸ் லீக் ருவென்ரி 20 போட்டித் தொடரில் பாகிஸ்தானை சேர்ந்த உள்ளூர் ருவென்ரி 20 சம்பியன் அணி பங்கேற்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக இந்திய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. கடந்த 2008ஆம் ஆண்டு, மும்பையில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதை அடுத்து அந்நாட்டு அணியுடனான கிரிக்கெட் போட்டிகளை இந்தியா தவிர்த்து வந்தது. இந்த நிலையில், சென்னையில் நேற்று முன்தினம் நடந்த கிரிக்கெட் சபைச் செயற்குழு கூட்டத்தில், சிஎல் டி20 தொடரில் பாகிஸ்தான் அணி இடம் பெற ஒப்புதல் வழங்கப்பட்டது. இது குறித்து, பிசிசிஐ தலைவர் சீனிவாசன் கூறியதாவது: அடுத்த சம்பியன்ஸ் லீக் ருவென்ரி 20 தொடர் இந்தியாவில் அக்டோபர் மாதம் நடைபெற உள்ளது. இந்த தொடரில் விளையாட பாகிஸ்தான் ருவென்ரி 20 சம்பியன் சியால்கோட் ஸ்டாலியன்ஸ் அணிக்கு அழைப்பு விடுக்க முடிவு செய்யப்பட்டது. இதற்கான ஒப்புதலை சம்பியன்ஸ் லீக் நிர்வாகக் குழுவுக்கு முறைப்படி அனுப்பி வைப்போம்.

# சென்னை அபார வெற்றி

இந்தியன் பிறிமியர் லீக் ருவென்ரி 20 கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற டில்லி டெயார் டெவில்ஸ் அணிக்கெதிரான போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி ஒன்பது விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய டில்லி டெயார் டெவில்ஸ் அணி பென் ஹில்பென் ஹாவுஸ்சின் சிறப்பான பந்துவீச்சு மூலம் 20 ஓவர்களில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 115 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. இதில்யோகேஷ் நாகர் 43 ஓட்டங்களையும்,வேணு கோபால்ராவ் 27 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றிருந்தனர். பந்து வீச்சில் பென் ஹில் பென் ஹாவுஸ் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதுடன், அல்பி மோர்கல் மற்றும் ரவிச்சந்திரன் அஸ்வின் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 115 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 15.2 ஓவர்களில் வெற்றியிலக்கை எட்டியது. இதில் முரளி விஜய் ஆட்டமிழக்காமல் 48 ஓட்டங்களைப் பெற்றதுடன், டேவிட் ஹசி 38 ஓட்டங்களைக் குவித்தார். பந்து வீச்சில் இர்பான் பதான் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார். போட்டியின் சிறப்பாட்டகாரராக பென் ஹில்பென்ஹாவுஸ் தெரிவுசெய்யப்பட்டார்.

ஆட்டநாயகன் விருது வென்ற ஹில்பென்ஹாவுஸ் குறிப்பிடுகையில், கடந்த இரண்டு போட்டிகளிலும் சிறப்பாகப் பந்து வீசி அணியின் வெற்றிக்குத் துணை புரிந்ததில் மகிழ்ச்சி. இருப்பினும் மும்பை இன்டியன்ஸ் அணிக்கெதிரான போட்டியில் எனது பந்து வீச்சே தோல்விக்குக் காரணமாக அமைந்தது என்பதையும் நான் மறந்துவிடவில்லை. இதற்காக அணித் தலைவர் டோனி மிகுந்த நம்பிக்கையுடன் என்னை வழி நடத்தினார். இதுவே இருபோட்டிகளிலும் சிறப்பாக செயற்பட துணைபுரிந்தது எனத் தெரிவித்தார்.

# கோரிக்கை விடுத்தால் பரிசீலிக்கலாம்

எதிர்வரும் ஓகஸ்ட் மாதந்தில் இடம்பெறவுள்ள சிறிலங்கா பிறீமியர் லீக் தொடரில் இந்திய வீரர்கள் பங்குபற்றுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இந்திய வீரர்களைப் பங்குபற்ற அனுமதிக்குமாறு இலங்கைக் கிரிக்கெட் சபை கோரிக்கை விடுக்குமாயின் அதுகுறித்து பரிசீலிக்கவுள்ளதாக இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் என்.ஸ்ரீனிவாசன் தெரிவித்துள்ளதை அடுத்து இந்த வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த வருடம் இலங்கைக் கிரிக்கெட் சபை ஏற்பாடு செய்ய முனைந்த போது தெளிவற்ற காரணங்களுக்காகவே இந்திய வீரர்களின் பங்குபற்றுதலை மறுத்ததாகவும், அதற்கான காரணங்களை இலங்கைக் கிரிக்கெட் சபையிடம் அப்போதே தெளிவுபடுத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த வருடம் சிறிலங்கா பிறீமியர் லீக் தொடரை நடாத்துவதற்கு இலங்கைக் கிரிக்கெட் சபை முன்வந்த போது இந்திய வீரர்கள் அத்தொடரில் பங்குபற்றுவதை அனுமதிக்க முடியாது என இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அறிவித்தது.

சிறிலங்கா பிறீமியர் லீக் தொடரை நடாத்துவதற்காக சமர்செட் நிறுவனத்துடன் இலங்கைக் கிரிக்கெட் சபை மேற்கொண்டிருந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் வீரர்களுக்கான ஊதியங்களுக்கு சமர்செட் நிறுவனேமே பொறுப்பாகக் காணப்படுவதால் வீரர்களுக்கான ஊதியம் தொடர்பில் தெளிவான நிலைமை இல்லை எனத் தெரிவித்தே இந்தியக் கிரிக்கெட் சபை கடந்த வருடம் மறுப்புத் தெரிவித்திருந்தது.

இந்தியக் கிரிக்கெட் சபையின் மறுப்பினை அடுத்தே சிறிலங்கா பிறீமியர் லீக் தொடரை கைவிட வேண்டிய தேவை இலங்கைக் கிரிக்கெட் சபைக்கு ஏற்பட்டது. இந்தியக் கிரிக்கெட் வீரர்களையும் தாண்டி, இந்திய நிறுவனங்களில் முதலீடு, அனுசரணை ஆகியவற்றை இலங்கைக் கிரிக்கெட் சபை நம்பியிருந்த நிலையில், இந்தியக் கிரிக்கெட் சபையின் மறுப்பினை அடுத்து அந்நிறுவனங்களும் பின்வாங்கிக் கொண்டதால் இலங்கைக் கிரிக்கெட் சபை கடந்த வருடம் சிறிலங்கா பிறீமியர் லீக்கை பிற்போட்டுக் கொண்டது.

இந்தாண்டுக்கான தொடரை இலங்கைக் கிரிக்கெட் சபை எதிர்வரும் ஓகஸ்ட் 10ஆம்திகதி முதல் 31ஆம் திகதி வரை நடாத்த ஏற்பாடு செய்துள்ள நிலை யில், இந்திய வீரர்கள் பங்குபற்றுவதை இலங்கைக் கிரிக்கெட் சபைவிரும்பி,அதற்கானகோரிக்கைளை விடுக்குமாயின்அதைப் பரிசீலிக்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்த என்.ஸ்ரீனிவாசன், கடந்த வருடத்தில் காணப்பட்ட தவறுகள் இம்முறை காணப்படுமாயின் இந்திய வீரர்களை அனுமதிப்பதில் எந்தவிதமான சிக்கல்களும் காணப்படாது எனத் தெரிவித்தார்.

# செரீனா - அசரென்கா மோதல்

(மாட்ரிட்)

ஸ்பெயினில் நடைபெற்று வரும் மாட்ரிட் ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் மகளிர் இறுதிச் சுற்றில் பெலாரஸின் விக்டோரியா அசரென்கா - அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் ஆகியோர் தகுதி பெற்றுள்ளனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற அரையிறுதிச் சுற்றில் அசரென்கா, போலந்தின் அக்னிஸ்கா ரத்வன்ஸ்காவை எதிர்கொண்டார். இதில் 6-2,6-4 என்ற நேர் செட்களில் அசரென்கா வென்று இறுதிச் சுற்றுக்கு முன்னேறினார்.

முன்னதாக நடைபெற்ற மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் தரவரிசையில் 9ஆவது இடத்தில் உள்ள செரீனா, செக். குடியரசின் லூசி ஹராடிகாவை 7-6,6-0 என்ற செட் கணக்கில் வென்றார்.

விக்டோரியா அசரென்கா இப்போது மகளிர் ரென்னிஸ் தரவரிசையில் முதலிடத்தில் உள்ளார். செரீனா முன்பு முதலிடத்தில் நீண்டநாட்கள் தக்கவைத்திருந்தவர். எனவே இவர்கள் இடையிலான போட்டி ரென்னிஸ் ரசிகர்கள் இடையே மிகவும் எதிர்பார்க்கப்படுகிறது. இப்போட்டியில் பட்டம் வெல்வேன் என செரீனா வில்லியம்ஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.



# 15 வயதுப் பிரிவு கால்பந்தாட்டம் ஹென்றியரசர் கல்லூரி சம்பியன்

(நெல்லியடி)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மட்ட கால்பந்துப் போட்டித் தொடரின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி சம்பியனானது.

15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான மாவட்ட மட்ட கால்பந்துத் தொடர் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்றது.

இதன் முதலாவது அரையிறுதிப் போட்டியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியும், யாழ். மத்திய கல்லூரி அணியும் மோதின. போட்டியின் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய ஹென்றியரசர் கல்லூரி அணி, ஆட்டம் நிறைவடையும் வரை அதை தக்கவைத்துக் கொண்டது. இறுதியில் 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்ற ஹென்றியரசர் கல்லூரி அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும், தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும் மோதின. இதில் வலுவான ஆட்டத் திறனை ஒருங்கிணைந்து வெளிப்படுத்திய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 2-0 என்ற கோல் கணக்கில் மிகச் சிறப்பான வெற்றியைப் பதிவாக்கிக் கொண்டதுடன் இறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியையும் பெற்றது.



(படப்பிடிப்பு : சுரேஷ்)

தொடர்ந்து நடைபெற்ற இறுதிப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும், இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியும் மோதின. இரு அணிகளும் பலமான அணி என்பதால் இப்போட்டி இரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது. முற்பாதி ஆட்டத்தில் சதுரியமான மு[illegible]யில் சிறப்பாக கோல் ஒன்றை [illegible]போட்டுக் கொண்டது இ[illegible]ாலை ஹென்றியரசர் கல்லூரி அணி.

பிற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் மிக வேகமான ஆட்ட முறையை மேற்கொண்டனர். விறுவிறுப்பாக நடைபெற்ற பிற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளாலும் கோல் எதனையும் போட முடியவில்லை. இறுதியில் ஹென்றியசர் கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. (20)

## காலிறுதிப் போட்டியில யாழ். பல்கலை அணி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைப் பல்கலைக்கழக அணிகளுக்கு இடையே நடைபெறும் 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணி 4 விக்கெட்டுக்களால் வெற்றிப்பெற்று காலிறுதி ஆட்டத்திற்கு தகுதிப் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியும் சப்ரகமுவ பல்கலைக்கழக அணியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சப்ரகமுவ 43.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 108 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இவ் அணியில் விஜயரெட்னா 19, கருணநாயக்கா, பிரியதர்சனா தலா 18, அபயசெகரா 13 ஓட்டங்களை பெற்றனர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணியைச்சேர்ந்த லவன் 4 ஓவர்கள் பந்து வீசி 6 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் அச்சுதன் 10 ஓவர்கள் பந்து வீசி 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் ஜெயரூபன் 9 ஓவர்கள் பந்து வீசி 20 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் விதுஸ், விதுபாலா முறையே 13,16 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணி 24.4 ஓவரில் 6 விக்கெட்டுக்களை 109 ஓட்டங்களை பெற்று வெற்றி பெற்றது.

இவ் அணியில், செல்ரன் 5 ஆறுகள் 2 நான்குகளுடன் 41, தசரிதன் 25, ஜெயரூபன் 17, பிரகாஷ் 16, ஓட்டங்களை பெற்றனர்.

சப்ரகமுவ பல்கலைக்கழக அணியைச்சேர்ந்த பிரியதர்சனா 8 ஓவர்கள் பந்து வீசி 36 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும் விஜயரெட்னா 7 ஓவர்கள் பந்து வீசி 20 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்கள்.

## ஸ்ரீமுருகன், வொறியஸ் சம்பியன்

(சுன்னாகம்)

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தினால் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் பெண்கள் பிரிவில் மல்லாகம் ஸ்ரீமுருகன் அணியும், ஆண்கள் பிரிவில் மல்லாகம் நியூவொறியஸ் அணியும் சம்பியனானது.

இப்போட்டி மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழக மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

பெண்களுக்கான இறுதிப் போட்டியில் மல்லாகம் ஸ்ரீமுருகன் அணியும், சுன்னாகம் வளர்பிறை அணியும் மோதின. இதில் மல்லாகம் ஸ்ரீமுருகன் அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது.

தொடர்ந்து நடைபெற்று ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் உடுவில் மத்தி அணியும், மல்லாகம் நியூ வொறியஸ் அணியும் மோதின. இதில் நியூ வொறியஸ் அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது. (93)

# முல்லை. மாவட்ட மட்ட கால்பந்து சம்பியனானது செம்மலை ம.வி.

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டியில் செம்மலை மகாவித்தியாலய அணி சம்பியனானது.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு உட்பட்ட துணுக்காய், முல்லைத்தீவு வலயங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டித் தொடரில் 19 வயதுக்கு உட்பட்ட கால்பந்தாட்டப் போட்டி யோகபுரம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

அனைத்துப் போட்டிகளும் மிகவும் விறுவிறுப்பாக இடம் பெற்றிருந்ததுடன் அநேகமான ஆட்டங்கள் சமநிலை உடைப்பின் மூலமே முடிவுகள் தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் இப்போட்டித் தொடரில் முதலாவது போட்டியில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணிக்கும் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய அணிக்கும் இடையில் இடம் பெற்றது. இப்போட்டியில் இரு அணிகளும் கோல் எதனையும் போடாத நிலையில் சமநிலை உடைப்பு மூலம் 3-2 என்ற கோல் கணக்கில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றது.

அடுத்து நடைபெற்ற போட்டியில் கோட்டைகட்டிய குளம் அ.த.க. பாடசாலை அணியை 7-0 என்ற கோல் கணக்கில் இலகுவான வெற்றி கொண்டு அரையிறுதிப் போட்டிக்கு செம்மலை மகாவித்தியாலயம் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணியும், விசுவமடு பாரதி வித்தியாலய அணியும் மோதிக் கொண்டன. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் தமக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களை நழுவவிட்டமையால் போட்டி முடிவுடையும் நேரத்தில் எந்தவித கோல்களையும் இரு அணிகளாலும் பெறமுடியவில்லை. தொடர்ந்து சமநிலை உடைப்பின் மூலம் போட்டி முடிவு தீர்மானிக்கப்பட்டது. இதில் 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்ற விசுவமடு பாரதி வித்தியாலய அணி இறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியைப் பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் கற்சிலைமடு அ.த.க. பாடசாலை அணியும், செம்மலை மகாவித்தியாலய அணியும் மோதிக் கொண்டன. இப்போட்டியில் இரு அணிகளுமே முதல் பாதி ஆட்டம் வரை ஒருவருக்கொருவர் சளைக்காமல் போட்டியிட்டனர். இரண்டாவது பாதி ஆட்டத்தில் கற்சிலைமடு அ.த.க. பாடசாலை ஆதிக்கம் செலுத்தியபொழுதிலும் முன்னணி வீரர்கள் விட்ட தவறினால் பல கோல்களினைப் பெறும் வாய்ப்பினை தவறவிட்டனர். இதனால் குறிப்பிட்ட நேர முடிவில் இரு அணிகளும் மேலதிக கோல் எதனையும் போடாத காரணத்தினால் சமநிலை உடைப்பு மூலம் வெற்றிதோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் 3-1 என்ற கோல் கணக்கில் செம்மலை ம.வி.அணி வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதிப் போட்டியில் விசுவமடு பாரதி வித்தியாலய அணியும் செம்மலை ம.வி. அணியும் மோதிக் கொண்டன. இப்போட்டியில் இரு அணிகளும் தலா இரண்டு கோல்களைப் பெற்றுக் கொண்டமையால் சமநிலை உடைப்பு மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்ற செம்மலை மகாவித்தியாலய அணி மாவட்ட சம்பியனானது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் கற்சிலைமடு அ.த.க. பாடசாலை அணியும், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணியும் மோதின. இதில் போட்டி நிறைவுக்கு வந்தவேளை இரு அணிகளுமே தலா ஒவ்வொரு கோலைப் போட்டிருந்தமையால் சமநிலை உடைப்பு மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் கற்சிலைமடு அ.த.க. பாடசாலை 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. (42)





இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் சபை முன்பள்ளியின் விளையாட்டு விழா நேற்று முன்தினம் பிற்பகல் 2.00 மணிக்கு இ.தொ.ச உறுப்பினர் தி. கிரிசன் தலைமையில் சிறப்புற இடம்பெற்றது. சிறார்களின் வண்ணமயமான பல போட்டி நிகழ்வுகள் இதன்போது இடம்பெற்றது. இதில் சிறார்கள் சத்தியப்பிரமாணம் செய்வதையும், உருவம் சேர்த்தலையும் காணலாம். (26)

- அரவிந்தன் கட்டுரையிலிருந்து

போர் நடந்த கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா வடக்கு, மன்னார் கிழக்குப் போன்ற இடங்களின் கல்விநிலை மிகப் பின்தங்கியுள்ளது. அதிலும் கிளிநொச்சியின் நிலை இன்னும் மோசமானது.

"போர்க்காலத்தில் - வசதிகளும் வளங்களும் குறைந்து செல்லும் நிலையில் கல்விச் செயற்பாடுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இருந்தது. ஆனால் இப்போது - போர் முடிந்த பின்னர்-வளங்களும் வசதிகளும் அதிகரித்து வரும் சூழலில், கல்வியின் நிலையானது வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்கு என்ன காரணம்?" என்று இந்தப் பின்னடைவு நிலை குறித்து கடந்த வாரம் கிளிநொச்சியில் நடைபெற்ற ஆராய்வுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் கேட்ட கேள்வியே இன்று எல்லோருடைய மனதிலும் உள்ளது.

இதற்கு அந்தக் கூட்டத்தில் பலரும் பலவிதமான அபிப்பிராயங்களையும் காரணங்களையும்தெரிவித்திருந்தனர்.

1. போதிய ஆசிரிய வளமின்மை. கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களுக்குப் பல பாடசாலைகளில் ஆசிரியர்களில்லை. (பதிலாக வேறு வலயங்களில் தாராளமாகவே இந்தப் பாடங்களுக்குரிய ஆசிரியர்கள் உள்ளனர்).

2. அனுபவம் மிக்க ஆசிரிய வளக்குறைபாடு.

3. புதிய நியமனம் மற்றும் இடமாற்றம் செய்யப்படுகின்ற ஆசிரியர்கள் அனைவரும் உரிய முறையில் கடமையைப் பொறுப்பேற்பதில்லை. தங்களுக்கு வசதியான இடங்களுக்கு இடமாற்றம் பெறுவதற்காக முயற்சிக்கிறார்கள். இந்த இழுபறியில் அல்லது தாமதத்தில் மாணவர்களே பாதிக்கப்படுகின்றனர். இதற்கு உடந்தையாக இருக்கும் நிர்வாக நிலைமை மாற்றமடைய வேண்டும்.

4. வெளி மாவட்டங்களிலிருந்து தினமும் வந்து கற்பிக்கின்ற ஆசிரியர்கள். பெரும்பாலும் பிரதானசாலையோரப் பாடசாலைகளைத் தவிர, உள்ளூர்ப்பாடசாலைகளுக்கு நேரம் பிந்தியே கடமைக்குச் செல்கின்றனர். இதனால் ஒரு பாடவேளை தினமும் தவறுகிறது. மிகக் குறைந்த எண்ணிக்கையானவர்களே தங்கி நின்று கற்பிக்கின்றனர். விடுதிகள் இருக்கின்ற பாடசாலைகளில் கூட ஆசிரியர்கள் தங்கி நிற்பதற்குப் பின்னிற்கிறார்கள்.

5. வளங்களைச் சரியாகப் பகிர்ந்தளிப்பதிலும் பயன்படுத்துவதிலும் காணப்படும் குறைபாடுகள்.

6.கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், ஐ.சீ.ரி ஆகிய பாடங்களுக்கானவள நிலையங்களின் செயற்பாடின்மை.

7.ஆய்வுகூட வசதிகள் போதாமை.

8. மின்சார வசதிக் குறைபாடு.

9. வகுப்பறைகளுக்கு வெளியேயான கற்றற் செயற்பாடுகள்குறைவு. (களப்பயணம், புத்தாக்கம், நூலகப் பயன்பாடு போன்றவை).

10. போரினால் ஏற்பட்ட உளத் தாக்கம், பெற்றோரை இழந்த பிள்ளைகளின் பெருக்கம், குடும்ப உறுப்பினர்களை இழந்திருக்கும் நிலை மற்றும் அலைச்சல்கள் போன்றவை ஏற்படுத்துகின்ற தாக்கங்கள்.

11. போருக்குப் பின்னான மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகள் பிள்ளைகளின் மீதான பெற்றோரின் அக்கறைகளைக் குறைத்துள்ளமை.

12. கடமையாற்றும் ஆசிரியர்கள் உயர்ந்த சேவையாற்றக்கூடியசூழலை உருவாக்கவேண்டும். ஆசிரியர்களுக்கும் பாடசாலைக்கும் சமூகத்துக்கும் இடையிலான உறவின் போதாமை.

13. பாதிக்கப்பட்ட பிரதேசத்துக்குச் சென்று கடமையாற்றக் கூடிய, சேவை மனப்பாங்கை வளர்ப்பதற்குரிய அந்த உணர்வை ஏற்படுத்தக் கூடிய-நடவடிக்கைகளிலுள்ள குறைபாடு. ஊடகங்கள் முதற்கொண்டு சமூக அமைப்புகள் வரையில் இதில் கவனம் செலுத்த வேண்டும்.

14. பாதிக்கப்பட்ட பிரதேச மாணவர்களின் நலனைக்கருத்திற் கொண்டு மனிதாபிமான அடிப்படையில் ஆசிரிய சங்கங்களும் மனித உரிமை அமைப்புகளும் செயற்பட முன்வரவேண்டும்.

15.யுத்தத்திற்குப் பின்னரான நிலைமையை எதிர்கொள்வதற்கான விசேட பொறிமுறைகள் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படியான பொறிமுறையும் அணுகுமுறையும் உருவாக்கப் படாமையே போர்நடந்த பகுதிகளின் பின்னடைவு நிலைக்கும் அவல நீடிப்புக்கும் காரணமாகும்.

பெரும்பாலான யாழ்ப்பாணவாசிகள் வன்னிக்குப்போகாதுவிட்டாலும் பரவாயில்லை, தீவுப் பகுதிக்கோ வடமராட்சி கிழக்குப் பகுதிக்கோ கூடப் போகமாட்டார்கள்.

வடமராட்சி கல்வி வலயத்தில் மேலதிகமாக கணித பாட ஆசிரியர்கள் உண்டு. ஆனால், அவர்களில் ஒருவர் கூட வடமராட்சி கிழக்குக் கல்விக்கோட்டத்துக்குச் சென்று கற்பிக்கத் தயாரில்லை. இவ்வளவுக்கும் போக்குவரத்து வசதிகள் தாராளமாக உண்டு. விசேட போக்குவரத்துச்சேவையைச் செய்வதற்கு இலங்கைப்போக்குவரத்துச்சபையும் தனியார் போக்குவரத்துச் சேவையினரும் தயாராக உள்ளனர்.

செல்ல விரும்புவதேயில்லை.

இதுதான் துயரந்தரும் நிலை. இதை மாற்றுவதற்கு எத்தனையோ ஆலோசனைக்கூட்டங்கள், அறிவிப்புகள் என்றெல்லாம் நடத்திய பிறகும் நிலைமையில் மாற்றம் பெரிதாக இல்லை.

இதேவேளை "இந்தப்பிரச்சினைக்கு மாற்று ஏற்பாடுகளைக் குறித்து நாம் சிந்திக்க வேணும். ஆசிரியர்களையும் அதிபர்களையும் மாணவர்களையும் பாராட்டி ஊக்கப்படுத்த வேணும். புதிய முறையில் இந்தப் பிரச்சினையை எப்படித் தீர்க்கலாம் என்று சிந்திக்க வேணும். வளங்களைப்பெறுவதைப் பற்றி பல திசைகளிலிருந்தும் முயற்சிக்க வேணும். போருக்குப் பிந்திய சூழலை வளப்படுத்துவதற்கு விசேட பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட்டிருக்க வேண்டும்.

இப்போதிருக்கும் தேசிய ரீதியான பகிர்வு முறைகள், விதி முறைகளின் மூலம் இந்தப் பெரும் பிரச்சினையைத் தீர்ப்பது கடினம்" என்று இந்த

# தேசியம் பேசுதலும் மக்களைத் தேவைகளுடன் வாட விடுதலும்!



இவ்வாறு பல காரணங்கள் சொல்லப் பட்டன. இங்கே கூறப்பட்ட காரணங்கள், கூறப்படாத காரணங்கள், கூறப் படவே முடியாத (உணர்ந்து கொள்ளப்பட வேண்டிய) காரணங்கள் எனப் பல இருக்கலாம். இந்தக் காரணங்களை எதிர்கொள்வதில் வெவ்வேறான உணர்முறைகளும் நிலைப்பாடுகளும் இருக்கலாம்.

ஆனால்,எல்லாவற்றுக்கும் அப்பால், இவை எல்லாமே ஒரு பொது நோக்கின் அடிப்படையில் சிந்திக்கப்பட வேணும். பாதிக்கப்பட்ட பிரதேசத்திலுள்ள இளைய தலைமுறையின்கல்வி மற்றும் அவர்களுடைய எதிர்காலம் குறித்து இந்தச் சிந்தனை அமைய வேணும்.

தமிழர்கள் தங்களுடைய கல்வியை முன்னிலைப்படுத்தும் ஒரு பாரம்பரியத்தை உடையவர்கள் என்று சொல்லப்படுவதுண்டு. தங்களுடைய தேசிய உண்ர்வுக்காகவும் அந்த அடையாளத்துக்காகவுமே தங்களின் வாழ்வில் அதிக விலைகளைக் கொடுத்தவர்கள். இன்னும் அந்த அடையாளத்தையும் உணர்வையும் குறித்து மனதில் பாரங்களோடும் வெம்மையோடும் உள்ளவர்கள். இப்படியெல்லாம் உள்ள தமிழர்கள் இன்று பாதிக்கப்பட்ட பிரதேசத்தைப் பற்றிக் கொண்டுள்ள அக்கறை எத்தகையது?

தமிழ்த் தேசியம், வடக்குக் கிழக்கு இணைப்பு என்று சத்தமிட்டுக் கதைக்கும் பல உத்தியோகத்தர்கள் வன்னிக்குச் சென்று வேலை செய்ய விரும்புவதில்லை. அதைப் போல மட்டக்களப்பு நகரப் பகுதியில் இருப்போர் வாகரைக்கோ படுவான் கரைக்கோ செல்ல முன்வருவதில்லை. மிகக் குறைந்தளவானோரே சேவை மனப்பாங்குடன் பின் தங்கிய பிரதேசங்களுக்குச் செல்கின்றனர்.

ஏனையோர் அரசியற் சுலோகங்களுக்குள் தங்களை சுலபமாக மறைத்துக் கொண்டு, தங்களின் நிலைப்பாட்டுக்கு மாறாகவே செயற்படுகின்றனர்.

ஒருவருடைய தேசிய உணர்வானது மெய்த்தன்மையுடையதாக இருக்குமானால், அவர் நிச்சயமாக அந்த உணர்வின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்களை நேசித்து அவர்களுக்கு உதவ முன்வருவார். பின்தங்கிய பிரதேசத்தை நோக்கி அவருடைய மனமும் கால்களும் முன்னகரும்.

இதைக் கடந்த மாதம் வடமராட்சி கிழக்கு - கட்டைக்காட்டில் நடந்த ஒரு கூட்டத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் குறிப்பிட்ட சபையினர் மக்கள் முன்னிலையில் தெரிவித்திருந்தனர். ஆனால், யாருடைய மனதிலும் மாற்றங்கள் நிகழவில்லை.

தீவுப் பகுதியின் நிலைமையும் இதுதான் என்று சொன்னோம். எனவேதான் வடமாகாணத்தில் மிகப் பின்தங்கிய கல்வி வலயமாக தீவுப் பகுதியும் இன்று மாறியுள்ளது. தீவுப் பகுதியின் கல்விமான்கள் அந்தப் பகுதியைவிட்டு வெளியேறி விட்டனர். அவர்கள் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் இருக்கின்றனர்.ஏனையோர் வெளிநாடுகளில் வாழ்கின்றனர். வெளியேற முடியாதவர்கள் காய்ந்த வெளியில் எல்லாவற்றுக்குமாக மாய்கிறார்கள் என்று குமுறுகிறார் அந்தப் பகுதியைச் சேர்ந்த முதியவர் ஒருவர்.

இதைப்போல வவுனியா வடக்குப்

**ஒருவருடைய தேசிய உணர்வானது மெய்த்தன்மையுடையதாக இருக்குமானால், அவர் நிச்சயமாக அந்த உணர்வின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்களை நேசித்து அவர்களுக்கு உதவ முன்வருவார். பின்தங்கிய பிரதேசத்தை நோக்கி அவருடைய மனமும் கால்களும் முன்னகரும்.**

பாடசாலைகளுக்குச் செல்லத் தயங்கும் பலர் ஏ-9 வீதியை அண்மித்த பாடசாலைகளுடன் தங்களை நிறுத்திக் கொள்கிறார்கள். வவுனியாவில் உள்ள பாடசாலையொன்றில் மாணவர்களை விட ஆசிரியர்களின் தொகை அதிகமாக இருக்கிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு வருவோர் ஒன்றில் பளைக் கோட்டத்தில் தேங்குகிறார்கள்அல்லது பூநகரியின் முன்பகுதியில் இறங்கி விடுகிறார்கள். அதற்கப்பால் அவர்கள்

நிலைமையை எதிர்கொள்வதைப் பற்றிச் சொல்கிறார் கிளிநொச்சி மாவட்ட கல்வி அபிவிருத்தி நிதியத்தின் தலைவரும் வவுனியா மாவட்ட வைத்திய அத்தியட்சகருமான வைத்தியக் கலாநிதி சத்தியமூர்த்தி.

"ஆசிரியர்களுடைய சேவைமனப்பாங்கின் விருத்தியும் அவர்கள் பின்தங்கிய பிரதேசங்களில் தங்கி நின்று சேவையாற்றக் கூடிய வசதிகளின் உருவாக்கமும் இந்தப் பிரச்சினையின் தீர்வுக்குப் பயனளிக்கும்" என்கிறார் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன்.

"போருக்குப் பிந்திய சூழலில் உளத்தாக்கமும் சமூகச் சிதைவு-களும் மிகப் பெரிய அளவில் உள்ளன. கல்விச் செயற்பாடானது, சமூக ஒன்றிணைவையும் கொண்டதால்சமூகத்தின் பாதிப்பு பிள்ளைகளின் கல்வியையும் பாதிக்கும்"என்று விளக்குகிறார் கிளிநொச்சி மாவட்ட உளநல மருத்துவ அதிகாரி ஜெயராஜா.

"கல்வி நிலையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியைச் சீர்ப்படுத்துவதற்கு விசேட அவதானங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட எல்லா விசயங்களிலும் இருக்க வேண்டும்" என்று சாரப்படுத்திச் சொல்கிறார் முன்னாள் வலயக் கல்விப்பணிப்பாளர் த.குருகுலராஜா.

"நெருக்கடிகால நிலைமைகளின் பாடங்களோடு புதிய சூழலின் சவால்களை எதிர்கொண்டு செயற்படவேண்டும். இதற்கு உரிய முறையிலான பொறிமுறை அவசியம்" என்கிறார் முன்னாள் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப. அரியரத்தினம்.

"பாடசாலைகளின்அவதானங்களின் படியும் பொதுவான மதிப்பீட்டின்படியும் பெறப்பட்ட தரவுகளையும் தகவல்களையும் வைத்துப் பார்க்கும் போது கல்விச்சவால்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் பலவாக உள்ளன. இதற்கு பல தரப்பினரின் முழுமையான அவதானமும் பங்களிப்புகளும் விசேட முயற்சிகளும் தேவை"என்று கூறுகிறார் கிளிநொச்சி மாவட்ட கல்வி அபிவிருத்திக் குழுவின் பிரதிச் செயலாளரும் கிளிநொச்சி மகா வித்தியாலய அதிபருமான பங்கயற்செல்வன்.

இப்படிப் பலரும் தெரிவித்திருக்கும் கருத்துகளுக்கு உரியசெயல்வடிவங்கள் தேவை. இதுபோலப் பல சிந்தனைகள் இன்று மேலெழுந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. ஆனால், மன மாற்றம் நிகழாத வரையில் எதுவுமே சாத்தியமில்லை. அப்படிச் சாத்தியப் பட்டாலும் அது முழுவெற்றியாகாது.

# பரீட்சைப் பெறுபேறுகளில் குளறுபடி; ஆராய்ந்து அறிய குழு நியமனம்



(கொழும்பு)

கடந்த ஆண்டு வெளியான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினை குறித்து ஆராய்வதற்கான மற்றுமொரு நிபுணர் குழுவை நியமிக்க தீர்மானித்துள்ளதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸா நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வழங்கிய ஆலோசனைக்கு அமைய எதிர்வரும் தினங்களில் இந்த நிபுணர் குழு நியமிக்கப்படும் என அமைச்சர் குறிப்பிட்டார். இந்தப் பிரச்சினை தொடர்பில் புத்தி ஜீவிகள் மற்றும் நீதிமன்றம் உள்ளிட்ட தரப்பினரின் கருத்துக்களைக் கவனத்திற் கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக உயர்கல்வி அமைச்சர் கூறினார்.

இரண்டு பாடவிதானங்களின் அடிப்படையில் மாணவர்கள் உயர்தரப் பரீட்சையை எதிர்நோக்கியிருந்தமையினால், அவர்களை பல்கலைக்கழகங்களில் இணைத்துக் கொள்வதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு விசேட குழுவொன்றை நியமித்திருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவ்வாறு நியமிக்கப்பட்ட குழுவினால் திட்டமொன்று வகுக்கப்பட்டு தம்மிடம் கையளிக்கப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். இந்தநிலையில் இந்தத் திட்டம் குறித்து பல்வேறு தரப்பிலிருந்து பல விமர்சனங்கள் எழுந்துள்ளதாகவும், இவ்வாறு எழுந்த விமர்சனங்கள் தொடர்பில் தாம் அதிக கவனம் செலுத்தியதாகவும் அமைச்சர் கூறினார்.

இதற்கமைவாகவே மற்றுமொரு நிபுணர் குழுவை நியமித்து இந்த விடயம் குறித்து ஆராயுமாறு ஜனாதிபதி தமக்கு ஆலோசனை வழங்கியதாகவும் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸா நாயக்க குறிப்பிட்டார்.

# கைதிகள் தொடர்பான தகவலை அறிந்து கொள்ள கருமபீடம்

(கொழும்பு)

பயங்கரவாத தடுப்புப் பிரிவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் மற்றும் விடுதலை செய்யப்பட்டவர்கள் தொடர்பிலான தகவல்களை அவர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு வழங்குவதற்கான விசேட வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் பயங்கரவாத தடுப்பு பிரிவின் ஊடாக முன்னெடுக்கப்படும் இந்த வேலைத் [illegible]ட்டத்திற்கு அமைய 24 மணி [illegible]ம் உரிய தகவல்களைப் பெற மு[illegible] எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தகவல்களை நெருங்கிய உறவினர்களான மனைவி, கணவன், பிளளைகள் மற்றும் சகோதரர்கள் ஆகியோர் பெற்றுக் கொள்ள முடியும்.

இவர்கள் வசிக்கும் பொலிஸ் பிரிவில் உள்ள பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அல்லது கிராம சேவகரினால் வழங்கப்படும் அத்தாட்சி கடிதம் இதற்கு அவசியம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு அமைய கொழும்பில் உள்ள புதிய செயலகத்தில் அமைந்துள்ள பயங்கரவாத தடுப்பு பிரிவு வவுனியாவில் அமைந்துள்ள பயங்கரவாத தடுப்பு பிரிவு மற்றும் காலியில் உள்ள பூசா தடுப்பு முகாமில் உள்ளவர்கள் தொடர்பான தகவல்களைப் பெற முடியும்.

# பாடசாலை பஸ்வண்டிகளுக்கு விசேட வர்ணம் பூச ஆலோசனை

(கொழும்பு)

பாடசாலைச் சேவையில் ஈடுபடும் பஸ்வண்டிகளின் தரத்தை உயர்ந்த நிலையில் பேணுவதற்கும் அவற்றுக்கு விசேட வர்ணம் பூசுவதற்கும் ஆலோசிக்கப்பட்டு வருகின்ற[illegible]

பாடசாலை மாண[illegible]வர்களை ஏற்றிச் செல்லும் வா[illegible]னங்களினூடாக சிறந்த [illegible]சேவையை வழங்குவதற்கு மாகாண சபைகளுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தனியார் போக்குவரத்து அமைச்சர் சி. பி. ரத்னாயக்க கூறினார்.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வாகன சேவை தொடர்பாக கண்காணிப்பு செய்வதற்கும் அவற்றுக்கென தனியான நிறமொன்றை வழங்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச்செல்வதற்காக பயன்படுத்தப்படும் சில வாகனங்கள் உகந்த நிலையில் இல்லை. அவற்றினால் மாணவர்களுக்கு பாதுகாப்பற்ற நிலைமை உள்ளது. இவை தொடர்பான பொறுப்பு மாகாண சபைகளுக்கே உள்ளது. இந்த வாகனங்கள் மாகாண சபைகளின் கீழுள்ள வீதிப்போக்குவரத்து அதிகார சபைகளின் கீழே பதியப்படுகின்றன.

பாடசாலை வாகனங்களினூடாக சிறந்த சேவையொன்றை வழங்குவது குறித்து மாகாண முதலமைச்சர்கள் வீதிப் போக்குவரத்து அதிகார சபைகள் என்பவற்றுடன் இணைந்து எமது அமைச்சு நடவடிக்கை எடுக்கும்.

பாடசாலை பஸ்கள் மற்றும் வாகனங்கள் தொடர்பில் எமது அமைச்சு கண்காணிப்பு செய்வது தொடர்பாக சட்ட ஆலோசனை பெற்று வருகிறோம்.

பாடசாலை பஸ்களுக்கான தனியான நிறமொன்றை அறிமுகப்படுத்தவும் வீதிப் போக்குவரத்து சட்டங்களை முன்னெடுப்பது தொடர்பாகவும் கட்டணம் தொடர்பிலும் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் பேசி வருகிறோம் என்றார்.

# அரிசி ஏற்றுமதி ; தடல்புடல் ஏற்பாடு

இந்த வருடம் நிறைவடைவதற்கு முன்னர் இலங்கை வெளிநாடுகளுக்கு 50 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியினை ஏற்றுமதி செய்யும் என மதிப்பிட்டுள்ளது.

இதேவேளை எதிர்வரும் 2016 ஆம் ஆண்டளவில் இந்த ஏற்றுமதி தொகையினை 2 இலட்சம் மெற்றிக் தொன்னாக அதிகரிப்பதற்கான ஏதுநிலை உள்ளதாக விவசாயத் துறை அமைச்சர் மகிந்த யாப்பா அபயவர்தன தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் அரிசி குறித்து நாம் தன்னிறைவு பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தவிர சோயா, பச்சை பயறு, சோளம், பெரிய வெங்காயம் போன்ற உப உற்பத்திப் பொருட்களிலும் இலங்கை தற்போது பாரிய அளவில் மேம்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கமநல அபிவிருத்தி திணைக்கள நிபுணர்களின் ஆய்வின்படி பி.ஜி.352, பி.ஜி.360, ஏ.ரி.362, பி.ஜி 94 இன் கீழ் ஒன்று மற்றும் ஏ.ரி. 360 ரக நெல்கள் மூலம் அதிக அளவிலான விளைச்சலைப் பெற முடியும் என கண்டறியப்பட்டுள்ளது.

# சடலங்கள் கொழும்புக்கு



தென்கொரியாவின் களியாட்ட விடுதியொன்றில் ஏற்பட்ட தீயினால் உயிரிழந்த இலங்கையர்கள் மூவரின் சடலங்கள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு நாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் விமான நிலைய அலுவலகம் குறிப்பிட்டது.

தென்கொரியாவிலுள்ள இலங்கைத் தூதரகம் ஊடாக சடலஙகளை நாட்டிற்குக் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக வெளிநாட்டு வேலை வாய்பபுப் பணியகம் தெரிவிக்கிறது.

கடந்த 5 ஆம் திகதி இரவு ஏற்பட்ட தீயினால் மஹியங்கனை, மொரவக்க மற்றும் பிலியந்தலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மூவர் தென்கொரியாவில் உயிரிழந்தமை தெரிந்ததே.

# கிழக்கில் காணித் தகராறு; மூன்று குழுக்கள் நியமனம்

கிழக்கு மாகாணத்தில் நிலவுகின்ற காணிப் பிரச்சினைகள் குறித்து விசாரணை மேற்கொள்வதற்காக மூன்று விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் மக்கள் எதிர்நோக்கியுள்ள காணிப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வினைப் பெற்றுக்கொடுப்பதே இந்தக் குழுக்கள் நியமிக்கப்பட்டமைக்கான முக்கிய நோக்கமாகும் என்று கிழக்கு மாகாண காணி அமைச்சர் விமலவீர திசாநாயக்க குறிப்பிட்டார்.

காணிப் பிரச்சினைகள் தொடர்பான முறைப்பாடுகளைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளை இந்தக் குழுக்கள் தற்போது ஆரம்பித்துள்ளன. மாகாணத்தில் நிலவுகின்ற காணிப்பிரச்சினை குறித்து இந்தக் குழுக்களிடம் முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும் என்றும் கிழக்கு மாகாண காணி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# மருந்தகங்களில் குளிரூட்டி வேண்டும்

(கொழும்பு)

குளிரூட்டி வசதியற்ற மருந்தகங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வத்தற்கு தேசிய வாசனைத் திரவியங்கள் மற்றும் ஓளடதங்கள் அதிகார சபை தீர்மானித்துள்ளது.

ஒருசில மருந்தகங்களின் உரிமையாளர்கள் குளிரூட்டிகளைச் செயற்படுத்தாமை தெரிய வந்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதன் காரணமாக மருந்துகளின் தரம் குறைவடைவதற்கும் இரசாயன மாற்றங்கள் ஏற்படுவதற்கும் சந்தர்ப்பம் உள்ளதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

பாணந்துறைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பொன்றில் இத்தகைய மூன்று மருந்தகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த மருந்தகங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு தேசிய வாசனைத் திரவியங்கள் மற்றும் ஓளடதங்கள் அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

# ஜோர்தானில் பயிற்சிப்பட்டறை

இலங்கை பணியாளர்களுக்கான இரண்டு நாள் விசேட செயலமர்வு ஒன்று ஜோர்தானில் இடம்பெறவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மேற்கொண்டுள்ளது.

இந்தச் செயலமர்வு எதிர்வரும் 15 ஆம் திகதி வரையில் ஜேர்தானின் அமான் நகரத்தில் இடம் பெறவுள்ளதாக தொழிலமைச்சர் அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

இந்தச் செயலமர்வில் 20 நாடுகளின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது இலங்கை பணியாளர்கள் எதிர்கொள்ளும் தொழில் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட உள்ளதாக அமைச்சர் டிலான் பெரேரா குறிப்பிட்டார்.

# கிழக்கில் வெளிவாரிப் பரீட்சை

(கொழும்பு)

கிழக்குப் பல்கலைக்கழக கலைப்பிரிவின் 03ஆம் வருட வெளிவாரி மாணவர்களுக்கான பரீட்சைகள் ஆரம்பமாகவுள்ளன.

இம்மாதம் 19 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை வந்தாறுமூலை வளாகத்தில் பரீட்சைகள் நடைபெற உள்ளதாக பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டதாகவும் இதுவரை அனுமதி அட்டை கிடைக்காதவர்கள் வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சையின் போது தேசிய அடையாள அட்டை, மாணவர் அடையாள அட்டை, பரீட்சை அனுமதி அட்டை என்பவற்றுடன் சமுகமளிக்குமாறு பல்கலைக்கழக நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.

# போலி வர்த்தகர்கள் மூவர் கைது

மட்டக்களப்பு - செங்கலடி பகுதியில் புதையல் மூலம் கிடைக்கப்பெற்றதாகக் கூறி ஒரு தொகை போலி உலோகத் துண்டுகளை விற்க முற்பட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படை உத்தியோகத்தர்களுக்குக் கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிடுகின்றது.

சந்தேகநபர்களிடம் இருந்து ஆயிரத்து 189 போலி உலோகத் துண்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவற்றை சுமார் 5 இலட்சம் ரூபாவிற்கும் மேற்பட்ட தொகைக்கு சந்தேகநபர்கள் விற்பதற்குத் தயார் நிலையில் வைத்திருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தவிர, சந்தேக நபர்கள் பயன்படுத்தியதாக கூறப்படும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

# படைக்குறைப்பும் பிரிவினைவாதமும்

**- கீர்த்தி இலங்கரத்ன கட்டுரையிலிருந்து.**



2009இல் எல்.ரீ.ரீ.ஈ யினை தோற்கடித்ததுடன் ஆயுதமோதல் முடிவடைந்துவிட்டது, என்றாலும்கூட பிரிவினைவாதம் இன்னமும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. வட அமெரிக்கா, அவுஸ்ரேலியா




மற்றும் மேற்கு நாடுகளில் உள்ள தமிழ் புலம் பெயர்ந்தவர்கள் கோட்பாட்டு பிரசாரங்கள், நிதி சேகரித்தல் என்பனவற்றை மேற்கொள்வதோடு நல்லிணக்க மற்றும் சமாதான நடவடிக்கைகளுக்கு குழிபறிப்பதற்காக சர்வதேசத்தின் ஆதரவையும் நாடி வருகிறார்கள்.

அதற்கும் மேலாக அவர்கள் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் (ரி.ஜி.ரி.ஈ) எனும் அமைப்பையும், ஈழப் போராட்டத்தை மீளமைப்பதற்காக ஒரு மூத்த எல்.ரீ.ரீ.ஈ தலைவரான உருத்திரகுமாரன் என்பவரது தலைமையின்கீழ் அமைத்துள்ளார்கள். இந்த நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் நோக்கம், "தமிழ் மக்களின் சுதந்திரத்தை, அவர்களின் தேசத்தின் அடிப்படை அரசியல் கொள்கைகள், சுதந்தர தாயகம் மற்றும் சுயநிர்ணய உரிமை என்பனவற்றின் மூலம் வென்றெடுப்பதேயாகும்".

பிரிவினைவாதிகள் தங்கள் போராட்டத்தை கைவிடவில்லை, மேலும் இலங்கைக்குள் போராட்டத்தை ஆரம்பிப்பதற்கான தருணத்தை எதிர்பார்த்து அவர்கள் காத்திருக்கிறார்கள்.

தமிழ் நாட்டு அரசியல்வாதிகள் பிரிவினை இயக்கத்துக்கு பகிரங்கமாக ஆதரவு தெரிவிக்கிறார்கள். கரு-ணாநிதி, ஐக்கிய நாடுகள் சபையிடம், கிழக்குத் தீமோர், கொசோவோ மற்றும் மொன்டினீக்ரோ போன்றவற்றின் வரிசையில் தமிழீழத்தையும் அமைப்பதற்கு ஒரு கருத்துக்கணிப்பு நடத்தவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

எனவே உள்நாட்டிலும் மற்றும் சர்வதேச ரீதியாகவும், இரகசியமாகவும் மற்றும் பரகசியமாகவும் பிரிவினைவாதத்துக்கு வழங்கப்படும் ஆதரவு, வடக்கிலுள்ள தமிழ் இளைஞர்களை மீண்டும் ஆயுதம் ஏந்தி வன்முறையை தூண்டிவிட ஊக்குவிக்க முடியும். பிரிவினைவாதத்துக்கான எண்ணம் வெகு தீவிரமாக உள்ளதால் வாய்ப்பான சந்தர்ப்பத்தில் அது வன்முறையாக வெடிக்க முடியும்.

வடக்கிலிருந்து இராணுவத்தை அகற்றுவது, எல்.ரீ.ரீ.ஈ யின் தோல்விக்குப்பின் மறைந்துபோன பிரிவினைவாத குழுக்களை மீண்டும் வலுப்படுத்திவிடும். பாதுகாப்பு தளர்த்தப்பட்டால், பிரிவினைவாத சக்திகள் சுதந்திரமாக வெளியில் வந்து. போரை மீண்டும் ஆரம்பிக்கலாம்.

இராணுவத்தை அகற்றுவது படிப்படியாக செய்யவேண்டிய ஒரு நடவடிக்கை, அது சமரச முயற்சிகளுடன் கைகோர்த்து செல்லவேண்டிய ஒன்று. மூன்று தசாப்தங்களாக வழி நடத்தப்பட்ட பிரச்சினைகளை சில வருடங்களுக்குள்ளேயே தீர்த்துவைப்பது சாத்தியப்படாது. அதற்கு நேரமும், மற்றும் மோதலில் ஈடுபட்ட அனைத்துப் பகுதியினரதும் பொறுப்புமிக்க கடப்பாடும், தேவை.

வடக்கிலிருந்து பாதுகாப்பு படை-களை அகற்றவேண்டும் எனக் கோரிக்கை விடுப்பவர்கள், பிரிவினைவாதிகளின் கரங்களைப் பலப்படுத்துகிறார்கள். எனவே இராணுவ படைக்குறைப்பு என்பது நல்லிணக்கத்துடன் பொருத்தம் ஏற்படும் வகையில் படிப்படியாக செய்யவேண்டிய ஒரு நடவடிக்கை.

# சிறு வயது சிந்தனைகள்

**- பாலா -**

என்னவோ தெரியவில்லை? பொதுவாக, நம்மில் பலருக்கு, நம் பள்ளி/கல்லூரி நாட்களில் நாம் ரசித்துக் கேட்ட திரைப்பாடல்களும், படித்த பாடங்களும், கண்ட காட்சிகளும், அவற்றை நினைவில் கொள்ள நாம் பெருமுயற்சி எடுக்காதபோதும், நம் மனதில் ஆழமாக (உறக்கத்திலிருந்து எழுப்பிக் கேட்டால் கூறுமளவு!) பதிந்து விடுகின்றன.

அதே சமயம், வேலைக்குச் சென்று நான்கைந்து வருடங்களில், இந்த திறமை குறைந்து, போகப்போக காணாமல் போய் விடுகிறது! இதற்கு, வயது கூடும்போது ஏற்படும் ஞாகபக் குறைவு ஓரளவு காரணமாக இருப்பினும், எனக்கென்னவோ, தற்போது நம்மில் பலர் சந்திக்கும் வேலைச்சூழல் தரும் அழுத்தமும், நாம் வாழும் ஒருவித Monotonous வாழ்க்கையும் நம் ரசிப்புத்தன்மையை மங்க வைப்பதால் இந்நிலை உருவாகிறது என்றே எண்ணத் தோன்றுகிறது!!

என் நினைவில் இன்னும் வாழும் சில திரைப்பாடல் வரிகள்!

**1.** காலம் ஒரு நாள் மாறும், நம் கவலைகள் யாவும் தீரும்! சென்றதை எண்ணி அழுகின்றேன், வருவதை எண்ணி சிரிக்கின்றேன்!

**2.** காலடித் தாமரை நாலடி நடந்தால் காதலன் உள்ளம் புண்ணாகும்!

**3.** நான் காதலெனும் கவிதை
சொன்னேன் கட்டிலின் மேலே,
அந்த கவிதைக்கு நான் பரிசு
தந்தேன் தொட்டிலின் மேலே!
நீரோடும் வைகையிலே
நின்றாடும் மீனே, நெய்யூறும்
கானகத்தில் கை காட்டும் மானே,
தாலாட்டும் வானகத்தில் பாலூட்டும் வெண்ணிலவே,
தெம்மாங்கு பூந்தமிழே, தென்னாடன் குலமகளே!

**4.** உன்னிரு கண்பட்டு புண்பட்ட நெஞ்சத்தில் உன் பட்டுக்கை பட பாடுகிறேன் ... பொன்னெழில் பூத்தது புது வானில், வெண்பனி தூவும் நிலவே நில்!

**5.** ஒருவரின் துடிப்பினிலே விளைவது கவிதையடா, இருவரின் துடிப்பினிலே விளைவது மழலையடா!

அது போலவே, நம்மில் பலருக்கு பழைய நினைவு-களை அசை போடுவதும், அதனால் ஏற்படும் அலாதியான மனமகிழ்ச்சியும் அடிக்கடி நிகழ்பவையாக உள்ளன.

தந்தையார் என் சிறு வயதிலேயே தவறி விட்டதால், என் அம்மா வேலைக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை உருவா-னது. அப்போது நான் 3ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த கிறித்துவப் பள்ளியின் (Montessori) தலைமையாசிரியர், மிகுந்த கனிவும் இரக்க குணமும் கொண்ட Johannes அம்மையார்.

சிலேட்டில் "a b c d" சரியாக எழுத வரவில்லையென பலமுறை அழுதிருப்பதாக, என் முதல் வகுப்பு ஆசிரியை, பிற்காலத்தில் கூறி சிரித்திருக்கிறார்கள்! நான் கல்வியார்வத்துடனும், அமைதியான குணமுடனும் காணப்பட்டதால், Johannes அவர்களுக்கு என் மேல் தனிப்பட்ட பிரியம் இருந்தது. கருணையும் கண்டிப்பும் ஒரு சேர அமைந்த அவரிடம் எனக்குப் பிடித்தவை அவரின் முத்து முத்தான கையெழுத்தும், ஆங்கில இலக்கண அறிவும் தான். என் நினைவில் என்றும் வாழும், என் முதல் ஆசான் அவரே ஆவார்.

நான் (ஆறாம் வகுப்பிலிருந்து) இந்து உயர்நிலைப் பள்ளியில் படித்த காலத்திலும், அவரை மரியாதை நிமித்தம் அவ்வப்போது பார்க்கச் செல்வேன். ஒவ்வொரு முறையும் தவறாமல் என் படிப்பைப் பற்றி விசாரிப்பார். அவர் பள்ளிக்கு வரும் பெற்றோர்களிடம் நான் அவர் மாணவன் என்று பெருமிதத்துடன் கூறுவார்.

பரீட்சை சமயங்களில், கிறித்துவ முறைப்படி என்னை மண்டியிட வைத்து ஆசிர்வதித்துத் தான் அனுப்பி வைப்பார்! அவரின் அந்த ஆசிர்வாதம் எனக்கு வெகுவாக உதவியது



என்று திடமாக நம்பினேன்.

ஒன்று மட்டும் நிச்சயம். அக்காலத்தில் நான் சந்தித்த, தங்கள் பணியை சமூகத் தொண்டாக கருதிய, பள்ளி ஆசிரியர்களைப் போல், தற்காலத்து அன்யோன்யமற்ற அவசர உலகில் வாழும் ஆசிரியர்கள் இல்லை என்றே தோன்றுகிறது.

என் பெண்ணும் நான் பாடம் பயின்ற Montessori பள்ளியில் தான் தன் கல்வியைத் தொடங்க வேண்டும் என்ற எனது விருப்பத்தை அப்போது தலைமையாசிரியராக இருந்த Johannes அவர்களின் மகளிடம் கூறியபோது, அவர் பெரு மகிழ்ச்சி அடைந்தார். சிறிது காலம் அங்கு படித்த என் மகள், இப்போது வேறு பள்ளியில் கல்வி கற்கிறாள்.

Johannes அவர்களின் மகளும் சில வருடங்களுக்கு முன் இறந்து போனதால், பள்ளி மூடப்பட்டு, அக்கட்டடமும் இடிக்கப்பட்டு, அங்கே ஒரு கோப்பித்தூள் கடையும், ஒரு சிறு Super Market - உம் தோன்றி விட்டன! என் பள்ளிக்கூடம் இருந்த இடத்தை கடந்து செல்லும் போதெல்லாம், நெஞ்சு சற்று கனத்துத் தான் போகிறது!

நான் படித்த பள்ளி, இலைகளும் மலர்களும் பழங்களும் கூடிய உயிரோட்டமிக்க ஒரு அழகான சிறு மரம் போன்றதென்றால், தற்போதைய கட்டடம் கிளைகள் தவிர வேறெதுவும் இல்லாத உயிரற்ற ஒரு சூனிய மரமாகவே எனக்கு காட்சியளிக்கிறது.

பள்ளி இருந்த காலத்தில், அதன் முகப்பையாவது ஒரு புகைப்படமாக எடுத்து வைத்திருக்கலாம் என்று இப்போது நினைத்து என்ன பயன்? வாழ்வில் மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை என்றாலும் கூட, சில மாற்றங்களை மனதளவில் நம்மால் ஏற்க முடிவதில்லை!

## 18 வகைக் கறிகள்

தமிழர் விருந்துகளில் தலைசிறந்தது திருமண விருந்து. அதில் 18 வகைக் கறியும், பாயாசமும் படைக்கப்படும். 18 வகைக் கறிகள் எவையென்று தெரியுமா? அவியல், கடையல், கும்மாயம், கூட்டு, துவட்டல், புரட்டல், பொரியல், வறுவல், புளிக்கறி, பச்சடி, அப்பளம், துவையல், ஊறு-காய், வற்றல், உளுந்துவடை, காரவடை, தேங்குழல், முக்கனிகளுள் ஒன்று.

**வெ**குஜன / வணிகநோக்[illegible]ான இ
வாசகர்களின் ரசனைமட்டம் என்கிற கற்
ஒன்றை எப்போதும் முன்னிறுத்துகின்றன
மேம்போக்கான விசயங்களை, கொறிப்பு
அனுமதிப்பதாய் இருப்பது வாசகநலனை
அவை எந்தவொரு வாசகரையும் கல
இன்னின்னதை வெளியிடலாமென முடி
வாசகர்களின் பெயரால் பத்திரிகையின்
நிறுத்தப்படுகிறது. எங்கள் வாசகர்கள் இ
டார்கள், ஓவர்டோஸ் என்று சொல்லிக்
நுண்ணடுக்குகளையும் வெவ்வேறு பரிமா
ஆழத்திற்கே சென்று விளங்கப்படுத்துகிற எழுத்துகளை அவை அனுமதிப்பதில்லை.

தமது அரசியல் கரிசனைகளுக்கு பங்கம் விளைவிக்கிற ஒரு வார்த்தையையோ வரியையோ அனுமதிக்காமல் தணிக்கை செய்துவிடுகிற இப்பத்திரிகைகள் கருத்துச்சுதந்திரம் பற்றி பேசுகிற கேலிக்கூத்துக்கும் இங்கே பஞ்சமில்லை.

இப்படியான தணிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டு வெளியாகும் எழுத்துகளைப் பார்த்து இன்னின்ன பத்திரிகைக்கு இப்படியிப்படி எழுதினால் தான் வெளியிடுவார்கள் என்று எழுத்தாளர்களே ஒரு சுயதணிக்கைக்கு தம்மைத்தாமே ஆட்படுத்திக் கொள்கிற கொடுமையும் இங்கு
நடந்துகொண்டிருக்கிறது. அதாவது தன்
என்கிற எழுத்தின் மிக அடிப்படையான
கைவிட்டுவிட்டு பிரசுரமாவதற்குரிய சாத்
உட்பட்டு எழுதுகிறவர்களாக எழுத்தாளர்
ஒடுக்கிக்கொள்கின்ற நிலைக்கு ஆட்படுத்
சாராம்சத்தில், இந்த வெகுஜன / வ
இதழ்களும் அவற்றின்மீது ஒவ்வாமை
வெளியே உருவாகியிருந்த "தீவிர" இல
ஒரே அரசியலைத்தான் பேசின. ஆனால்
பிரிந்திருந்தன.

# சிங்கக் கொடியை இன்னும் தூக்குவேன் அது எனது விருப்பத்திற்குரிய கொடி!

சிங்க கொடியை முன்னரும் பல தடவை ஏற்றியிருக்கிறேன். அது எனது விருப்பத்திற்குரிய கொடி அதனை இனியும் ஏற்றுவேன், அதனை யாரும் தடுக்க முடியாது என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நேற்று கொழும்பில் நடந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழு கூட்டத்தில் தெரிவித்துள்ளார். தமிழ்



தேசியக் கூட்டமைப்பின் குழு கூட்டம் இன்று ஆரம்பமான போது பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு செல்வது தொடர்பாக முதலில் ஆராயப்பட்டது. அந்த விடயம் முடிந்ததும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாக்கியசெல்வம் அரியநேத்திரன் சிங்கக் கொடி பிரச்சினையை எழுப்பினார்.

ஐயா நீங்கள் யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா தேசியக்கொடியை பிடித்தது தமிழினத்திற்கு செய்யும் துரோகம், தமிழின தேசவிரோதம் என காரசாரமாக விடயத்தை தொடங்கினார்.

தம்பி அரியம் நீர் என்ன கதைக்கிறீர்? உமக்கு வரலாறு தெரியாது. என்னை சிங்கக் கொடியை தூக்கக் கூடாது என்று ஒருவராலும் தடுக்கேலாது.

தேசியக் கொடியை நான் தெரியாமல் தூக்கவில்லை. நன்றாகத் தெரிந்து விருப்பத்தோடுதான் தூக்கினேன். என்னிடம் யாரும் அக்கொடியை திணிக்கவில்லை (இச்சமயத்தில் மாவையைப் பார்க்கிறார்). சிங்கக் கொடியை நான் தூக்கினது இதுதான் முதல்தடவையல்ல. நான் தேசியக் கொடிக்கு எதிரானவன் அல்ல. நான் பல தடவை தேசியக் கொடியான சிங்கக் கொடியை திருகோணமலையில் ஏற்றியிருக்கிறேன். நான் நேசிக்கும் ஒரே கொடி சிங்க கொடிதான்.

இந்தக் கொடியை வடிவமைத்த குழுவில் தமிழர்களும் இருந்திருக்கிறார்கள். அந்தக் குழுவில் ஜி.ஜி.பொன்னம்பலம், நடேசன் போன்றவர்கள் இருந்தார்கள். அதில் நடேசன் மட்டுமே இந்தக் கொடியை எதிர்த்தார். ஆனால் ஜி.ஜி.பொன்னம்பலம் இந்தக் கொடியை ஏற்றுக்கொண்டிருந்தார். தமிழரசுக்கட்சி இந்தக் கொடியை எதிர்க்கவில்லை என சம்பந்தன் தெரிவித்தார்.

அதுதவிர இன்னொரு விடயத்தையும் சம்பந்தன் சொன்னார். இந்தக் கொடி என்னுடைய மிக விருப்பத்திற்குரிய கொடி, சிங்கம்தான் பத்திரகாளி அம்மனின் வாகனம், எனவே சிங்கக் கொடிக்கு நான் எதிரானவன் அல்ல என சம்பந்தன் தெரிவித்தார். இதற்கு மாவை சேனாதிராசா, அரியநேத்திரன், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கடும் எதிர்ப்பை தெரிவித்தனர்.

சிறிலங்கா கொடியை நீங்கள் தூக்கி பிடித்ததால் நாங்கள் தமிழ் மக்கள் முகத்தில் முழிக்க முடியாமல் இருக்கிறது. மானம் மரியாதை போகிற விடயம். இதனால் தமிழ் மக்கள் எங்கள் மீது வெறுப்படைந்திருக்கிறார்கள் என அரியநேத்திரன் சொன்னார்.

நீங்கள் அடிக்கடி சொல்வீர்கள் தமிழ் மக்கள்தான் எங்கள் பலம் என்று. ஆனால் இன்று தமிழ் மக்களின் மனங்களையும் உணர்வுகளையும் புரிந்து கொள்ளாது நடந்துள்ளீர்கள் என மாவை சேனாதிராசா கோபத்துடன் தெரிவித்தார். அப்போது குறுக்கிட்ட சுமந்திரன் தேசியக் கொடியை ஏற்றுவதோ, பிடித்திருப்பதோ என்ன பிழை, ஏன் இதை பெரிதாக எடுக்கிறீர்கள் என சொன்னார்.

கொழும்பில் இருக்கும் உங்களுக்குத் தெரியாது. இந்தப் பிரச்சினையின் தாக்கத்தை யாழ்ப்பாணத்திற்கும் மட்டக்களப்புக்கும் வந்து பாருங்கள் அப்போது தெரியும் என உறுப்பினர் ஒருவர் சுமந்திரனைப் பார்த்துக் கூறினார்.

**- நன்றி: இனியொரு**

# அவர்கள் உள்ளே இருக்கிறார்கள்!



பிரபல நடிகர்கள் வீட்டில்தான் இருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்வது எப்படி? ஒரு முன்னாள் சினிமா நிருபரின் அனுபவப்பகிர்வு இது:

சிவாஜி கணேசன் வீட்டில் தான் இருக்கிறார் என்பதை எப்படித் தெரிந்து கொள்ளலாம் என்றால்... அவரது வீட்டுக்கு முன் இருக்கும் கூர்க்கா, நாற்காலியை விட்டு எழுந்து சுறுசுறுப்புடன் அவனுடைய பாஷையில் ஏதாவது பேசிக் கொண்டிருப்பான்.

சிவாஜி கணேசனின் சகோதரர் தங்கவேலு மீசையைத் திருகி விட்டபடி உள்ளேயும், வெளியேயும் போய் வந்து கொண்டிருப்பார். வாசலுக்கு முன், ஜீப் நின்று கொண்டிருக்கும். "தம்பிக்கு இன்று ரெஸ்ட் தூங்கப் போய் விட்டான்..." என்று உற்சாகக் குரலில் பேசிய படி காரை ஓட்டிக் கொண்டு தங்கவேலு கிளம்புவார்.

அந்த ஓய்வு நேரங்களில், தலைமுடியை சரியாக வாராமல், பொத்தான்களில்லாத வெள்ளைச் சட்டையுடன் காணப்படுவார் சிவாஜி கணேசன்.

************************

எம்.ஜி.ஆர். வீட்டில் இருப்பதை வாசலிலே நின்று கொண்டிருக்கும் எம்.ஜி.ஆர். ரசிகர்கள் கூட்டம் மூலம், கண்டுபிடித்து விட முடியாது! ஏனெனில், அவர் வீட்டில் இருந்தாலும், இல்லா விட்டாலும், ஒரு கூட்டம் எப்பொழுதும் நின்று கொண்டு தான் இருக்கும். ஆனால், வீட்டைச் சுற்றியும், காரைச் சுற்றியும் நின்று கொண்டிருக்கும் எம்.ஜி.ஆர். அலுவலர்கள் தங்களுடைய அட்டகாசப் பேச்சை ஒடுக்கி, அடக்க ஒடுக்கமாகக் காணப்படுவர். குறுக்கும், நெடுக்குமாக ஓடிக் கொண்டிருப்பார் எம்.ஜி.ஆரின் செயலாளர் வீரப்பன்.



இவை எல்லாம் எம்.ஜி.ஆர். அவரது காதம்பரி இல்லத்தில் இருக்கிறார் என்பதை எடுத்துக் காட்டும் அடையாளங்கள்.

எம்.ஜி.ஆர். வீட்டுக்குள்ளிருந்து வந்து அலுவலக அறைக்குள் புகுந்து கொண்டவுடன் டெலிபோனில் பேசுவார். வருகிற போன்களுக்கு, "நான் தான் எம்.ஜி.ஆர். பேசுகிறேன்..." என்று பதில் அளித்துப் பேசுவார். காரியதரிசியை விட்டு போனை எடுத்து முதலில் பேசச் சொல்லி, அவசியமானால், தான் வாங்கிப் பேசுவது என்ற, "பிசினஸ்" முறை எல்லாம் எம்.ஜி.ஆருக்குப் பழக்கம் கிடையாது.

************************

வீட்டில் ஜெமினி கணேசன் இருக்கும் போது, "குளித்துக் கொண்டிருக்கிறார்... உடற்பயிற்சி செய்து கொண்டிருக்கிறார்... டென்னிஸ் ஆடிக் கொண்டிருக்கிறார்..." என்றும், "வருகிற சமயம்" என்றும் அவரது செயலாளர் ஏதாவது ஒன்று சொல்வது வழக்கம். ஜெமினி கணேசனின் மகள்களில் ஒருத்தி, நன்றாக உடை உடுத்தி காரில் ஏறிச் செல்வாள். வீணைப் பயிற்சிக்கு, மாம்பலத்தில் ஒரு வீட்டுக்கு கார்ச் சாரதி கொண்டு சென்று விடுவார்.



வீட்டின் இன்னொரு வழியாக, இன்னொரு காரில் ஏறி, ஸ்டுடியோவுக்கோ, சாவித்திரி வீட்டுக்கோ கிளம்பிப் போவார் ஜெமினி கணேசன்.

************************

வில்லன் நடிகர் டி.எஸ்.பாலையா வீட்டில் இருக்கிறாரா என்று அறிந்து கொள்ள, ஒரு நாற்காலியும், வெள்ளி வெற்றிலைப் பெட்டியுமே சான்று. ஒரு மாமரத்துத் தாழ்ந்த கிளைக்கு அருகில் அவை இரண்டும் காணப்படுமானால், வீட்டில் பாலையா இருக்கிறார் என்று சொல்லி விடலாம். அவர், சட்டை கூடப் போடாமல், நாற்காலியில் அமர்ந்து வெற்றிலைப் பெட்டியில் வெற்றிகரமாக கை வைப்பதை வீதியில் இருந்தபடியே காணலாம்.



சில சமயங்களில், வேடிக்கை பார்க்கும் கூட்டம் அதிகமாகி விடுமேயானால், அவர்களை காவல்காரன், விரட்டி அடிக்க முயல்வது உண்டு. அப்போது காவல்காரனை தன் அருகே அழைத்து, "அவர்கள் நின்றால் நின்று விட்டுப் போகட்டும் நீ, உன் இடத்திலேயே நில்லு..." என்று சொல்வார் பாலையா. சில சமயங்களில் பாலையாவுக்கும், அவரது மனைவிக்கும், அந்த மரத்தடியிலேயே முக்கியமான குடும்பப் பேச்சு கூட் நடைபெறும்...

# கோபக்கார பிள்ளைகளும் வெகுஜனப் பத்திரிகைகளும்

...ான இ...கள் தங்களது
...ன்கிற கற்பிதமான அளவீடு
...த்துகின்றன. அந்த ரசனைமட்டம்
... கொறிப்புத்தீனிகளை மட்டுமே
...சகநலனை முன்னிட்டல்ல.
...ரையும் கலந்தாலோசித்து
...மன முடிவெடுப்பதில்லை.
...ிகையின் அதிகாரம்தான் நிலை
...சகர்கள் இதையெல்லாம் தாங்கமாட்
...சால்லிக்கொண்டு வாழ்வின்
...வறு பரிமாணங்களையும் அதனதன்
...படுத்
...ளுக்கு
...ர்த்
...மதிக்
...ிற
...திரம்
...ும்
...க்கு
...ன



...வது தன்னை வெளிப்படுத்துதல்
...டையான நோக்கத்தைக்
...ரிய சாத்தியங்களுக்கு
...ழுத்தாளர்கள் தம்மைத்தாமே
... ஆட்படுத்தப்பட்டுள்ளனர்.
...ன / வணிக நோக்கிலான
...பாமை கொண்டு அவற்றுக்கு
...விர" இலக்கியப் பத்திரிகைகளும்
... ஆனால் இருவேறு முகாம்களாக

ஒரே அரசியலை நிலைநிறுத்த விரும்பும் சக்திகள் இருவேறு முகாம்களாக பிரிந்திருக்க வேண்டியதில்லை என்கிற பரஸ்பர புரிதலினூடாகத்தான் "தீவிர எழுத்தாளர்கள்" என அறியப்பட்ட சிலர் வெகுஜன இதழ்களில் பணியாற்றச் சென்றார்கள்.

வெகுஜன இதழ்களை தீவிர இலக்கிய இதழ்களாக மாற்றிவிடும் நோக்கத்தில் நடந்த ஊடுருவல் என்றோ, இலக்கியத்தை வளப் படுத்தும் வகையில் வெகுஜனப்பத்திரிகைகளுக்கு ஏற்பட்ட மனமாற்றம் என்றோ இந்தப்போக்கினை மிகைப்படுத்தி புரிந்து கொள்ளாத பட்சத்தில் நாம் இதுதொடர்பில் இன்னும் கொஞ்சம் பேசமுடியும்.

இவர்கள்தான், வெவ்வேறு காரணங்களுக்காக வெகுஜன இதழ்களில் எழுதாமல் இருந்தவர்களை அவை உள்ளிழுத்துக் கொள்வதற்கான உத்திகளை தற்செயலாகவோ திட்டமிட்டோ வகுத்தவர்கள். ஒருவகையில் கும்கி யானை போன்றவர்கள். தத்தமது நிலைப்பாடுகளை தளர்த்திக்கொள்ளாமலே இயங்குவதற்கான சுதந்திர வெளிகளாக வெகுஜனப் பத்திரிகைகள் மாறிக்கொண்டிருப்பதைப் போன்ற தோற்றத்தை உருவாக்கியவர்கள் இவர்கள்தான். இவர்களது பங்களிப்பில் வெளியான இந்தியா டுடே, விகடன் போன்றவற்றின் இலக்கிய மலர்களிலும் குமுதம் ஸ்பெஷல்களிலும் தீராநதிகளிலும் தீவிர மற்றும் அதிதீவிர எழுத்தாளர்கள் என்று நம்பப்பட்டவர்கள் பெரிதாக நிர்ப்பந்தங்கள் இன்றி எழுதிக்கொள்ள அனுமதிக்கப்பட்டார்கள். குடும்பத்திற்கு அடங்கிய பிள்ளைகளுக்கு கிடைப்பதைக் காட்டிலும் கோபக்கார பிள்ளைகளுக்கு சில கூடுதல் உரிமைகள் கிடைப்பது இயல்புதானே?

இந்த கோபக்கார பிள்ளைகளுக்கு வெகுஜனப் பத்திரிகைகளில் கிடைக்கத் தொடங்கிய இந்த அறிமுகம் இவர்களின் புத்தகங்களை பதிப்பித்த பதிப்பகங்களின் வியாபாரத்திற்கு உதவிகரமாக அமைந்தன. மட்டுமல்ல, வெகுஜனப் பத்திரிகைகளின் பரந்துவிரிந்த வாசகர்களிலிருந்து சிறுவீதத்தையாவது ஈர்த்துக்கொள்வதற்காக தீவிர இதழ்கள் என அறியப்பட்டவை ஒரு நடுவாந்திரத்தன்மைக்கு மாறியதையும் இங்கு ஒரு உடன் விளைவாக காணமுடிந்தது.

வெகுஜன இதழ்களால் கிடைக்கும் பிரபல்யம், சன்மானம் போன்றவற்றுக்கு இரையாகிவிடாமல் விரிந்துபரந்த வாசகத் தளத்தையும் வீச்செல்லையையும் தமது மாற்று அரசியலையும் அதனை உட்செரித்த எழுத்துகளையும் முன்வைப்பதற்கான ஒரு களமாக பயன்படுத்திக் கொள்கிறவர்கள் எத்தனை பேர் என்கிற விவரம் என்னிடமில்லை.

**- ஆதவன் தீட்சண்யா.**

# ஆசிரியர் கலாசாலை மூடுவிழா தமிழர் ஆசிரியர் சங்கம் கொதிப்பு

## போராட்டத்தில் குதிக்க முடிவு

(திருநெல்வேலி)

பலாலி ஆசிரிய கலாசாலையை மூடுவதற்கு கல்வி அமைச்சு மேற்கொண்ட முடிவை எதிர்த்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் போராட்டம் நடாத்த முடிவு செய்துள்ளது.

பாதி நூற்றாண்டைக் கடந்து பல ஆயிரக்கணக்கான ஆசிரியர்களையும், கல்வியாளர்களையும உருவாக்கிய பலாலி ஆசிரிய கலாசாலையை மூடுவதற்கு கல்வி அமைச்சு எடுத்த நடவடிக்கையைக் கண்டித்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அனைத்து ஆசிரியர்களையும் ஒன்றிணைத்து போராட்டம் நடாத்தத் தீர்மானித்துள்ளது.

கல்வி அமைச்சின் இந்த முடிவில் மாற்றம் ஏற்படாவிட்டால் போராட்டத்தைத் தவிர எமக்கு வேறு வழியில்லை என்றும் கூறியுள்ளது.

இது குறித்து சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா. புவனேஸ்வரன் விரிவான அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் உள்நாட்டுப் போர் தொடங்கிய பின்னர் இடம பெயர்ந்த பலாலி ஆசிரிய கலாசாலை இன்றும் இடம்பெயர்ந்த நிலையிலேயே இயங்கி வருகின்றது.

காலம் காலமாக இதனை நிர்வகித்த அதிபர்கள் இதற்கான நிரந்தரமான இடமொன்றைத் தெரிவுசெய்து கலாசாலையின் வளத்தைப் பெருக்குவதற்கான எந்த முயற்சிகளும் எடுக்கவில்லை.

அதிபர் பதவிகள் காலத்துக்குக் காலம் விருப்பு, வெறுப்பிற்கும், நன்மை தீமைக்குமேற்ப கைமாறப்பட்டதே தவிர கலாசாலையை மிளிரச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் எவருக்கும் வந்ததில்லை. தற்போதுள்ள அதிபர் கூட, தான் அதிபராக இருக்கவேண்டுமென்று எண்ணுகின்றாரே தவிர கலாசாலையின் இருப்பைப் பற்றிச் சிந்திப்பதாக இல்லை.

அதிபருக்கும் அங்குள்ள விரிவுரையாளருக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் காவல்நிலையம் தாண்டி, நீதிமன்றம் வரை சென்று இப்போது கலாசாலை மூடவேண்டுமென்ற நிலை உருவாகியிருக்கின்றது.

ஆசிரியர்களைப் பயிற்றுவித்து தமிழ்பேசும் மாணவர்களுக்கான ஆளுமையுள்ள கல்வியாளர்களை உருவாக்கிய ஓர் கல்விக்கூடத்தை மூடிவிடுவதென்பது ஏற்றுக்கொள்ள முடியாதவொன்றாகும்.

பலாலி ஆசிரிய கலாசாலையில் கற்ற ஆசிரியர்கள் கண்ணீர் விடும் அளவிற்கு மூடிவிடலாம் என்று சாதாரணமாகச் சொல்வது எந்த வகையில் பொருத்தமானது.

இது தொடர்பில் அரசாங்கமும், கல்வி அமைச்சும் பிழையானதொரு முடிவினை எடுத்திருப்பதாக நாம் வெளிப்படுத்த விரும்புகின்றோம் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (137)

# ஆசிரியர் கற்கை நெறிகள் வேறு கலாசாலைகளுக்கு மாற்றம்

(யாழ்ப்பாணம்)



பலாலி ஆசிரியர் கலாசாலையின் கற்கை நெறிகள் வேறு கலாசாலைகளுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

பலாலி ஆசியர் கலாசாலையின் நடவடிக்கைகள் அனைத்தும் வெவ்வேறு ஆசியர் கலாசாலைகளுக்கு மாற்றப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஆசிரியர் கலாசாலைகளில் புதிய கல்வியாண்டுக்கான பாடநெறி தொடர்வதற்கான பதிவுகள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்ட நிலையில் இந்த திடீர் இடமாற்றம் அறிவிக்கப்பட்டுள்ளது.

பலாலி ஆசிரியர் கலாசாலையில் ஆங்கிலம், கிறிஸ்தவம் ஆகிய இரண்டு பாடநெறிகள் இடம்பெறவுள்ளதாகவும் இதற்கான பதிவு நடவடிக்கைகள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடைபெறும் எனவும் தற்போது அறிவிக்கப்பட்டிருந்தது.

இடமாற்றம் குறித்து கல்வி அமைச்சு கலாசாலை அதிபர்கள் ஊடாக ஆங்கில பாட நெறிக்குரிய மாணவர்களுக்கு அறிவித்தலை வழங்கியுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை, பலாலி ஆசிரியர் கலாசாலையில் இடம்பெறவிருந்த கிறிஸ்தவ பாடமும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

மேற்படி சம்பவங்கள் தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்துடன் தொடர்பு கொண்டுகேட்ட போது, பலாலி ஆசிரியர் கலாசாலையை மூடுவதற்காகவே பாடநெறிகள் வேறு கலர்சாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ள பலாலி ஆசிரியர் கலாசாலைக்குரிய காணியை பாதுகாப்பு அமைச்சுக்கு கல்வி அமைச்சு வழங்கியது தொடக்கம் அந்தக் கலாசாலையை மூடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து நாம் பலதடவை உரியவர்களிடம் பேசியுள்ளோம் எனவும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் யோசப் ஸ்ராலின் குற்றம்சாட்டினார்.

# மன்னாரில் பரவும் வயிற்றோட்டம்

(கொழும்பு)

மன்னார் நகரில் தீவிரமாக பரவிவரும் வயிற்றோட்டம் காரணமாக 7 சிறுவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறறுவருவதுடன், இதுவரையில் 80 இற்கும் அதிகமானோர் சிகிச்சை பெற்றுள்ளதாக மன்னார் பொதுவைத்தியசாலையின் வைத்திய அதிகாரி டாக்டர் ஜி.குணசீலன் தெரிவித்தார்.

மன்னார் நகரின் மூர்வீதி, சின்னக்கடை, உப்புக்குளம் ஆகிய பகுதிகளில் கடந்த வியாழக்கிழமை முதல் வயிற்றோட்டம் பரவி வருகின்றது.

வயிற்றோட்டம் குறித்து பொதுமக்களை விழிப்புடன் இருக்குமாறும் கொதித்தாறிய நீரைப் பருகுமாறும் விடுதி மற்றும் உணவு விடுதிகளில் வாங்கும் உணவு வகைகள் குறித்து கவனத்தைச் செலுத்துமாறும் பொதுமக்களிடம், வைத்திய அதிகாரி டாக்டர் ஜி.குணசீலன் கேட்டுக்கொண்டுள்ளார்.

# கடற்புலிகளின் ஆயுத தொழிற்சாலை மக்கள் பார்வைக்கு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் நீர்மூழ்கிகள் உட்பட்ட கடற் போரியல் தளபாடங்களை உற்பத்தி செய்த இடங்களை மக்கள் பார்வைக்காக இராணுவத்தினர் திறந்துவிட்டிருக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டம் இரட்டைவாய்க்காலுக்கும் வலைஞர் மடத்திற்கும் இடைப்பட்ட வீதியில் நீர்மூழ்கி மற்றும் ஆயுத தளபாட உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக இராணுவத்தினர் அவற்றின் எச்சங்களை மக்களுக்கு காட்சிப்படுத்தியிருக்கின்றனர்.

சிறிய அளவிலான நீர்மூழ்கிப்படகுகளைத் தயாரிப்பதற்காக குறித்த பகுதிகள் பயன்படுத்தப்பட்டதாகவும், அங்கு காணப்படும் நீர்த்தாங்கி நீர்மூழ்கிகளை இயக்கிப் பரிசீலிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டு வந்திருப்பதாகவும் இராணுவத்தினர் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் மந்துவில் குளம் அமைந்திக்கின்ற பகுதியில் விடுதலைப்புலிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட நீர்மூழ்கி மற்றும் சிறிய வகையான பல்வேறு படகுகளும் ஆயுத தளபாடங்களும் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கின்றன.

தென்பகுதியில் இருந்து வன்னியினைப் பார்வையிடுவதற்கு வருகின்ற பெருமளவான சிங்கள மக்கள் அவற்றினைப் பார்வையிட்டு செல்கின்றனர்.

# காணாமல் போனோர் விபரம் உங்களுக்கு எப்படிக் கிடைத்தது

## மன்னார் ஆயரிடம் துருவித்துருவி விசாரணை



(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன் நான் சாட்சியமளித்த விடயம் தொடர்பாகவே குற்றப் புலனாய்வுப் பொலிஸார் என்னிடம் விசாரணை நடத்தினர் என மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் தெரிவித்தார்.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 679 பேர் காணாமற் போயுள்ளமை தொடர்பாக, நான் ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்துள்ளேன். இது தொடர்பாகவே குற்றப் புலனாய்வு பிரிவினர் என்னிடம் விசாரணை மேற்கொண்டனர்.

அந்தப் புள்ளி விவரங்கள் எவ்வாறு எனக்கு கிடைத்ததென்பதை நான் அவர்களுக்கு விளக்கமாக கூறியுள்ளேன்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் நிரந்தரமாகக் குடியிருந்தோர் மற்றும் வன்முறைகள் யுத்தம் காரணமாக வெளி மாவட்டங்களில் இருந்து வந்து குடியிருந்தோர் எண்ணிக்கையை 2008 ஒக்டோபர் நிலைவரத்தின்படி அரசாங்க அதிபர்களிடமிருந்து பெற்றிருந்தேன்.

இறுதிக் கட்ட யுத்தத்தின் பின்னர் ஐக்கிய நாடுகள் அமைப்பின் "ஒச்சா" OCHA என்ற அமைப்பு இந்த மாவட்டத்திலிருந்து அகதிகளாக வந்தோர் மற்றும் முகாம்களில் தங்க வைக்கப்பட்டோர் தொடர்பான புள்ளி விபரங்களை அந்த அமைப்பிடமிருந்து பெற்றேன்.

நான் இரு தரப்பினரிடமுமிருந்து பெற்றுக் கொண்ட புள்ளி விபரங்களை வைத்தே இறுதிக்கட்ட யுத்தத்தில் இத்தனை பேர் காணாமற் போயுள்ளதாகத் தெரிவித்தேன்.

இதே விடயத்தை குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் விசாரணையின் போது குறிப்பிட்டதாக மன்னார் ஆயர் தெரிவித்துள்ளார்.

# புலிக்கொடியை ஏந்தியவர் சுதந்திரக்கட்சி உறுப்பினரே

## கண்டுபிடித்தார் சுரேஸ்

(கொழும்பு)

யாழ்ப்பாண மே நாள் பேரணியில் விடுதலைப் புலிகளின் கொடி கொண்டு செல்லப்பட்டதாக கூறியுள்ளதன் மூலம் அரசாங்கம் சிங்கள இனத்தைக் கேலி செய்வதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஸ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தீவிரவாதத்தை முற்றாக அழித்து விட்டதாக அரசாங்கம் அனைத்துலக சமூகத்திடம் கூறியது.

இப்போது விடுதலைப் புலிகள் இருப்பதாகக் கூறுகிறது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் முடிந்து விட்டதாக அரசாங்கமே அறிவித்தது.

போரின் பின்னர் ஆயிரக் கணக்கான புலிகள் கைது செய்யப்பட்டனர். இப்போது அரசாங்கம் வேறு எதையோ சொல்கிறது. இது சிங்கள இனத்தைக் கேலி செய்யும் செயல்.

பேரணியின் போது புலிக்கொடியுடன் ஓடிய நபர் யாழ்ப்பாணத்தில் உள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி அலுவலகத்தில் இருப்பவர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தகவல் கிடைத்துள்ளது.

அவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சிப் பணியகத்தில் இருந்து வெளியே வந்து, பேரணி அந்த வீதியால் சென்று கொண்டிருந்த போது புலிக்கொடியைக் காண்பித்தபடியே சென்றிருக்கிறார்.

இது அரசினாலும் படையினராலும் அரங்கேற்றப்பட்ட அவசியமற்றதொரு நாடகம். இராணுவம் இதனை ஒளிப்பதிவு செயதுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

# புலிகளுக்கு நிதி சேகரித்த அமெரிக்கத் தமிழர் விடுதலை




(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு அமெரிக்காவில் நிதி சேகரித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த கருணாகரன் கந்தசாமி என்ற ஈழத்தமிழரை நியுயோர்க் நகர நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.


விடுதலைப் புலிகளுக்கு நிதி சேகரித்த குற்றச்சாட்டின் பேரில் கடந்த ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் கைது செய்யப்பட்ட 55 வயதான கருணாகரன் கந்தசாமிக்கு எதிராக தீவிரவாத வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்கில் இவருக்கு 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்று அரச சட்டவாளர்கள் கோரியிருந்தனர்.


ஆனால் கடந்த வெள்ளிக்கிழமை இந்த வழக்கின் தீர்ப்பை அறிவித்த நீதிபதி, 5 ஆண்டுகள் சிறையில் இருந்தது போதுமானது என்று தீர்ப்பளித்து, கருணாகரன் கந்தசாமியை விடுதலை செய்ய உத்தரவிட்டுள்ளார். முன்னாள் வாகனச் சாரதியான இவர் இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு இராணுவம் சாராத - மனிதாபிமான உதவிகளை வழங்குவதிலேயே தொடர்புபட்டிருந்தார் என்று நம்புவதாகவும் நீதிபதி தனது தீர்ப்பில் கூறியுளளார்.

34) 


(1) (2) (3) (4)

35) 

(1) (2) (3) (4)

36) 

(1) (2) (3) (4)

37) 

(1) (2) (3) (4)

**கீழ்க் காணும் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை வெற்றிடத்தில் எழுதுக.**

38) 3 kg 250 g ஐ கிராமில் எழுதினால்
1) 325 g    2) 3025 g    3) 30250 g    4) 3250 g

39) 8 m 72 cm ஐ சென்ரிமீற்றரில் எழுதினால்,
1) 8072 cm    2) 80072cm    3) 872 cm    4) 8720 cm

40) கனவுரு ஒன்றின் விளிம்புகளின் எண்ணிக்கை?
1) 8    2) 10    3) 12    4) 6

**பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் (√) எனவும், பிழையாயின் (X) எனவும் வெற்றுக் கூட்டில் எழுதுக.**

41) ஒருவரின் மரண அறிவித்தலை வானொலி மூலம் அறிவிப்பவர் இறந்தவர் ஆவார். (.................)
42) நாம் உண்ணும் உணவு சுவாசப்பையில் நன்றாக அரைக்கப்படுகிறது. (.................)
43) சூரியன் உதிக்கையில், மக்கள் உறக்கம் விட்டு எழுகின்றனர். (.................)
44) எல்லா மதங்களும் அன்பு, அருள், சகிப்புத் தன்மை போன்றவற்றை எதிர்க்கின்றன. (.................)
45) மலை நாடுகளில் தேயிலை, இறப்பர் பயிரிடப்படுகின்றன. (.................)

46) கீழே தரப்பட்டவற்றைக் குறியீடுகளில் தருக.
1. சென்ரிமீற்றர் ..............................
2) லீற்றர் ..............................
3) மில்லிலீற்றர் ..............................
4) மில்லிமீற்றர் ..............................
5) கிராம் ..............................





T.S. கஜன்

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

# கல்வி முரசு

வெளியீடு 66



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

**கீழேயுள்ள கவிதையினை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடைதருக.**

"பாலரே பாலரே கேளும்,
பழகும் பாலருடன் பணிவு காட்டும்
உமது எமது என்று
எதையும் பிரித்துப் பார்க்க வேண்டாம்
பிரித்துப் பார்த்தே பாரினை பிரிக்க வைத்தது"

**சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

01) இக் கவிதைக்கு ஏற்ற தலைப்பினைத் தருக.
(தாலாட்டுப் பாட்டு / பாப்பா பாட்டு)

02) ஞாலத்தினை என்பதற்கு ஒத்ததாக கவிதையில் அமைவது எது?
(பாரினை / அறிவினை)

03) பெட்டியிலிடப்பட்ட சொல் - வட்டமிடப்பட்ட சொல்லுக்கு,
(ஒத்தசொல் / எதிர்ச்சொல்)

04) இன்று பூமி பல நாடுகளாகப் பிரிந்ததுக்குக் ாணம் எதுவென்று இக்கவிதையில் கூறப்படுகிறது?
(உமது எமது எனப் பிரித்துப் பார்ப்பது / பலருடன் பணிவு காட்டுதல்)

05) அடக்கம் என்பதன் ஒத்தகருத்துச் சொல் இக்கவிதையில் இருக்கின்றது. அதனைச் சுற்றி வட்டமிடுக.

**பின்வரும் உருக்களில் உள்ள எழுத்துக்களின் ஒழுங்கைச் சரியாகக் காட்டுவதற்கு 1, 2, 3, 4, 5 எனும் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் இடுக.**

06)

| | | | | |
|---|---|---|---|---|
| மின் | ம் | மின் கம்பம் | க | பம் |
| (..................) | (..................) | (..................) | (..................) | (..................) |

07)

| | | | | |
|---|---|---|---|---|
| PI | APPLE | E | P | A |
| (..................) | (..................) | (..................) | (..................) | (..................) |


08)

| | | | | |
|---|---|---|---|---|
| பூ | செடி | சமைத்தல் | உண்ணுதல் | காய் |
| (..................) | (..................) | (..................) | (..................) | (..................) |

09)

| விளையாடுதல் | உறங்குதல் | பாடசாலை செல்லுதல் | சூரியன் மறைதல் | நித்திரை விட்டெழுதல் |
|---|---|---|---|---|
| (....................) | (....................) | (....................) | (....................) | (....................) |

**அருகில் உள்ள உருவில் இருந்து கீழ்வரும் வினாக்களுக்கு விடைதருக.**



10) இவ்வுருவின் வட்ட முகங்களுக்கு நிறம் தீட்டுக.

11) உருவின் மொத்தப் பரப்பு $80cm^2$ ஆகவும் வளைபரப்பு $50cm^2$ ஆகவும் இருப்பின் ஒருவட்ட பரப்பு எவ்வளவு பரப்பளவைக் கொண்டுள்ளது? .........சதுர சென்ரிமீற்றர்

**பின்வரும் வினாக்களுக்கான விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

12) ரூபா 200 இற்கு 100 தீப்பெட்டிகளை வாங்கிய ஒருவன் ஒரு தீப்பெட்டிக்கு 50 சதம் இலாபம் வைத்து விற்பானாயின் அவன் பெற்ற மொத்த இலாபம் எவ்வளவு?
(..........................................................................)

13) ஒரு விமானத்தின் நிறை 1500 kg ஆகும். அதன் இரண்டு செட்டைகளும் சமநிறை உடையவை. ஒரு செட்டையின் நிறை 400 g ஆகும். ஆகவே செட்டைகள் தவிர்ந்த பகுதிகளின் நிறை எத்தனை கிலோகிராம்?
(..........................................................................)

14) 10 நாட்களில் எத்தனை மணித்தியாலங்கள் உள்ளன?
(..........................................................................)

15) அமலனின் மணிக்கூடு சாதாரண நேரத்தைக் காட்டிலும் 10 நிமிடங்கள் பிந்தியே காட்டியது. பாடசாலையில் உள்ள கடிகாரம் 10.30 காட்டியபோது அமலனின் கடிகாரத்தில் காட்டும் நேரம் என்ன?
(..........................................................................)

**பின்வரும் வாக்கியங்களில் ஒரு வாக்கியம் மட்டும் எழுத்துப் பிழையின்றிக் காணப்படுகிறது. எழுத்தப் பிழையற்ற அந்த வாக்கியத்தைத் தெரிவுசெய்க. அதன் கீழ்க் கோடிடுக.**

16) அ) சேகர் பிரபுடன் சண்டை பிடித்தான்.
ஆ) மல்லிகைப் பூவின் மனம் எங்கும் பரவியது.
இ) மயிலின் அளகு மனதைக் கவர்ந்தது.
ஈ) வெடிச்சத்தம் கேட்டதும் மக்கள் ஓடினோம்.

17) அ) ஆலயத்தின் பக்கத்தின் பாடசாலை இருக்கின்றது.
ஆ) நான் எனது நண்பனுக்குக் கடிதம் எழுதினேன்
இ) உழவுத் தொழில் மிகவும் சிரந்தது.
ஈ) நல்ல நெறிமுறையில் வாள்தல் வேண்டும்.

**கீழே தரப்பட்டுள்ள வினாவுக்கான சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கீறிடுக.**

18) புகைவண்டியிற் காணப்படும் சில்லுகள்.
1) மரத்தாலானவை 2) இரும்பாலானவை 3) இறப்பராலானவை


19) நீதிமன்றத்தில் தீர்ப்புக் கூறுபவர்,
1) பொலிஸ் 2) குற்றவாளி 3) நீதிபதி

20) சீனி தயாரிக்க உதவும் மூலப்பொருள்,
1) கரும்பு 2) நெல் 3) தேன்

**கீழுள்ள சுழலக்கூடிய வட்ட சுற்று மேடையில் A, B, C, D எனும் நால்வர் பிரதான திசைகளிலும் E, F, G, H எனும் நால்வர் உப தி-சைகளிலும் மையத்தை நோக்கியபடி அமர்ந்திருக்கின்றனர்.**

**இவ்வட்ட மேடையை வலஞ்சுழியாக அரைச்சுற்றிய போது Aஎன்பவர் முதலாம் இடத்திலிருந்து 5ஆம் இடத்தை அடைந்தார்.**






21) தற்பொழுது கிழக்குத் திசையில் அமர்ந்திருப்பவர் யார்?
(..........................................................................)

22) சுற்றுவதற்கு முன் அக்கினி மூலத் திசையில் இருந்தவர் சுற்றிய பின் எத்திசையில் இருப்பார்?
(..........................................................................)

23) D என்பவருக்கு வலது கைப்பக்கம் இருப்பவர் யார்?
(..........................................................................)

24) C இற்கு எதிரே அமர்ந்திருப்பர் யார்? (..........................................................................)

**“அவன் மேட்டில் சென்றான்” எனும் வாக்கியத்தில் தடித்த எழுத்தில் உள்ள சொற்களுக்குப் பொருத்தமான எதிர்க் கருத்துச் சொல், எதிர்ப்பாற்சொல் எதிர்மறைச் சொல் இட்டு வாக்கியங்களை மீள எழுதுக.**

25) எதிர்க்கருத்துச் சொல் - அவன் மேட்டில் சென்றான்.
(..........................................................................)

26) எதிர்ப்பாற் சொல் - அவன் மேட்டில் சென்றான்.
(..........................................................................)

27) எதிர்மறைச் சொல் - அவன் மேட்டில் சென்றான்.
(..........................................................................)

**தடித்த எழுத்தில் உள்ள சொல்லுக்குப் பொருத்தமான சொல்லின் கீழ் கீறிடுக.**

28) அன்றைய தினம் அவலக் குரல் கேட்டது.
1) அன்று 2) தினசரி 3) நாள் 4) நாளாந்தம்

29) அவனுடைய சொத்துக்கள் எல்லாம் பறிக்கப் பட்டுவிட்டது.
1) இழக்க 2) பிடுங்க 3) எடுக்க 4) கொடுக்க

30) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
1) பொருமினால் 2) சேர்ந்தால் 3) பிரிந்தால் 4) பலமானால்

31) குற்றம பார்க்கில், சுற்றம இல்லை.
1) நட்டம், உற்றார் 2) தவறு, உறவினர்
3) குறை, நண்பர் 4) பாவம், சுற்றாடல்

**இடைவெளிகளைப் பொருத்தமான சொற்களால் நிரப்புக.**

32) 1) இருளுக்கு வெளிச்சம் போல் ..........................................................கோடை
2) நிலம் பரப்பு, காலம் ..........................................................
3) பாலைவனம் ஒட்டகம், சமுத்திரம்..........................................................
4) நாய் குரைக்கும், பல்லி..........................................................

**இடைவெளிகளைப் பொருத்தமான சொற்களால் நிரப்புக.**

33) 1) இலங்கை..........................................................
2) கட்டடம் ..........................................................
3) குடுத்து..........................................................
4) தெண்டம்..........................................................

# திருமணத்துக்கு அப்பாலான உறவுகள், யாழில் பாதிக்கப்படும் இளம் பெண்கள்

## – பொலிஸ் நிலையத்தில் அதிக முறைப்பாடுகள்

(சிகரம்)

குடும்பங்களில் கணவன், மனைவியரிடையே அதிகரித்துவரும் திருமணத்துக்கு அப்பாலான தகாத உறவுகள், பாலியல் பிறழ்வு நடவடிக்கைகள், திருமணம் முடித்த ஆண்களால் ஏமாற்றப்படும் இளம் பெண்கள் என ஏராளமான பிறழ்வு நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்கள் யாழ் பொலிஸ் நிலையத்தின் மகளிர் மற்றும் சிறுவர் பிரிவில் கண்ணீர் மல்க முறைப்பாடுகளைத் தெரிவித்து வருகின்றனர்.

திருமணம் முடித்து பல ஆண்டுகளாக கணவன் மனைவியராக வாழ்ந்து வந்த சிலர், இடையில் திருமணத்துக்கு அப்பாலான உறவுகளில் ஈடுபட்டு வருவது தொடர்பாக இரண்டு தரப்புக்களிடமிருந்தும் ஏராளமான முறைப்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. தமது கணவன்மார் வேறு பெண்களுடன் தொடர்பு வைத்திருப்பதாக சில பெண்களால் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று, தமது மனைவி வேறு ஆண்களுடன் தொடர்பு வைத்திருப்பதாக ஆண்களாலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கைத்தொலைபேசி வாயிலான தொடர்புகள் மூலமே இவ்வாறான திருமணத்துக்கு அப்பாலான உறவுகள் பேணப்படுவதாக இரண்டு தரப்பு முறைப்பாடுகளிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒருவரையொருவர் அறியாத வகையில் இரகசியமாக கைத்தொலைபேசி மூலமாக இவ்வாறான திருமணத்துக்கு அப்பாலான உறவு பேணப்படுவதாக முறைப்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, திருமணம் முடித்து பிள்ளைகளையும் கொண்டிருக்கும் 35-40 வயது மதிக்கத்தக்க ஆண்களால் 16-18 வயது பெண்கள் காதல் என்ற பெயரில் ஏமாற்றப்பட்ட சம்பவங்கள் தொடரபாகவும் ஏராளமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருப்பதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறான சம்பவங்களால் பாதிக்கப்பட்ட பல பெண்கள் கண்ணீருடன் பொலிஸ் நிலையத்தின் மகளிர் மற்றும் சிறுவர் விவகாரப் பிரிவில் முறைப்பாடு தெரிவிப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

18 வயதுக்குக் குறைந்த பெண்கள் இவ்வாறு காதல் என்ற பெயரில் ஏமாற்றப்பட்டால் அதற்கெதிராக ஆட்கடத்தல் மற்றும் பாலியல் பலாத்காரம் ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியும் என்று குறிப்பிடும் பொலிஸ் தரப்பு, மற்றபடி வயது வந்த பெண்கள் தொடர்புபடும் சம்பவங்கள் தொடர்பாக தம்மால் எதுவும் செய்ய முடியாது என்று கூறுகிறது.

திருமணத்துக்கு அப்பாலான உறவு தொடர்பாக பொலிஸாரிடம் செய்யப்பட்டுள்ள இவ்வாறான முறைப்பாடுகளில், 67 வயதுடைய பெண்மணி ஒருவருடைய முறைப்பாடு அதிர்ச்சியூட்டுவதாக உள்ளது. தன்னுடைய கணவர் வேறொரு இளம் பெண்ணுடன் தொடர்பு வைத்திருப்பதாக இவர் கண்ணீருடன் பொலிஸாரிடம் முறையிட்டுள்ளார்.

எனினும், திருமணத்துக்கு அப்பாலான [illegible]புகள், பாலியல் பிறழ்வு நடவடிக்கைகள் [illegible]றவை தொடர்பாக நடவடிக்கை எடுப்ப[illegible] சட்டத்தில் எந்த இடமும் கிடையாது என்றும் பொலிஸ் தரப்பில் சுட்டிக்காட்டப்படுகிறது. இவ்வாறான தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து[illegible]லோசனை கூறுவது அல்லது அவர்களுக்கு எ[illegible]க்கை விடுப்பதற்கு அப்பால் வேறெதுவும் செ[illegible]தற்கு சட்டத்தில் இடமில்லை என்கிறார்கள் பொ[illegible]ஸார்.

காதலித்து ஏமாற்றப்பட்டது தொடர்பான பெரும்பாலான முறைப்பாடுகளில் இளைஞர்கள் சம்பந்தப்படவில்லை என்றும், பெரும்பாலும் திருமணம் முடித்து, பிள்ளைகளையும் கொண்டிருக்கும் வயது வந்த ஆண்கள் தொடர்பாகவே இவ்வாறான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. சுயவிருப்பத்தின் பேரால் நடைபெற்றிருக்கக்கூடிய இவ்வறான சம்பவங்கள் குறித்து பொலிஸார் சட்ட நடவடிக்கை எதுவும் எடுக்க முடியாது என்று அவர்கள் சுட்டிக்காட்டு[illegible]கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இவ்வாறு திரு[illegible]ணத்துக்கு அப்பாலான உறவு, பாலியல் பிறழ்வு நடவடிக்கைகள், வயது வந்த ஆண்களால் இளம் பெண்கள் ஏமாற்றப்படுவது போன்ற நடவடிக்கைகள் இவ்வளவுக்கு நடைபெற்று வருவது தமக்கு அதிர்ச்சியளிப்பதாக பொலிஸ் தரப்பில் கூறப்படுகிறது. இது குறித்து பொலிஸார் அன்றி, சமூக அளவிலேயே கவனம் செலுத்தப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படவேண்டும் என்று பொலிஸ் தரப்பில் கூறப்படுகிறது.

பாலியல் கல்வி, சட்டம் பற்றிய தெளிவு, விழிப்புணர்வுச் செயற்பாடுகள் போன்ற மூலமும், ஊடகங்களில் பொறுப்பு வாய்ந்த செயற்பாடுகள் மூலமுமே இவ்வாறான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியும் என்றும், ஊடகங்கள் இந்த விடயத்தில் அதிகளவு பங்களிப்புச் செலுத்த முடியும் என்றும் பொலிஸ் தரப்பில் வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.

# குப்பைகள் அதற்குரிய இடத்தில் கொட்டப்படவேண்டும்

## – யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்



(சிகரம்)

பொதுமக்கள் குப்பைகளை அதற்கென ஒதுக்கப்பட்ட இடங்கள் தவிர பொது இடங்கள் மற்றும் வீதிகளில் கொட்டுவது தண்டனைக்குரிய குற்றமாகும் என யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில்,

பொது இடங்களில் குப்பை கொட்டுபவர்களுக்கு எதிராக சூழல் மாசடைதல் சட்டத்தின் கீழ் சிவில் வழக்குத் தொடரப்பட்டு 3,000 வரையிலான குற்றப் பணமும் ஒருவருட கடூழிய சிறைத தண்டனையும் வழங்கப்படும்.

பொது இடங்களில் குப்பை கொட்டப்படுவது தொடர்பாக மக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் அத்துடன் அவ்வாறு குப்பை கொட்டப்படுவது தொடர்பாக உடனடியாக பொலிஸாருக்கு அறியதர வேண்டும் என்றார்.

வல்வெட்டித்துறைப் பகுதியில் இவ்வாறு பொது இடத்தில் குப்பை கொட்டுவது தொடர்பான வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டிருப்பதாக, இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட காங்கேசன்துறை பிரதேச தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி காமினி பெரேரா தகவல் தெரிவித்தார்.

பொதுமக்களுடைய ஒத்துழைப்பு இருந்தாலே இவ்வாறு சூழலை மாசடையச்செய்யும் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த முடியும் என்றும் பொலிஸ் தரப்பினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.



யாழ். போதனாவைத்தியசாலைக்கு முன்பாக உள்ள காந்தி வீதியும் காப்பெற் வீதியாக மாற்றப்பட்டுள்ளதைக் காணலாம். (பசீ)



# வேலை வாய்ப்புச் செய்திகள்

கொழும்பில் உள்ள இலத்திரனியல் வியாபாரம் செய்யும் நிறுவனத்திற்கு விற்பனையாளர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் கிங்ஸ் எலெற்றோனிக்ஸ் 11A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். மேலதிக விபரங்களுக்கு 021 2223 857 ஐ தொடர்பு கொள்ளவும்.

---

நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய திருமண மண்டப மேற்பார்வையாளர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 021 222 3003 077 038 8421 இற்கு தொடர்பு கொள்ளவும்.

---

வீடியோ எடிட்டிங் கணினியில் வடிவமைப்பு செய்யக்கூடியவர்கள் உடன்தேவை. ஆற்றலும் ஆர்வமுள்ளவர்கள் 075 0424 360 இற்கு தொடர்பு கொள்ளவும்.

---

பருத்தித்துறையில் உள்ள வியாபார நிறுவனத்திற்கு கணக்காளர் தேவை. ஆற்றலும் ஆர்வமும் உள்ளவர்கள் சுயவிபரங்களை எதிர்வரும் 5 நாட்களுக்குள் Tsenthan@yahoo.com அல்லது Chief Exeative officer, Jayantha Industrial Park (pvt) Ltd, 16, School Road, Katcovalam, point pedro என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

---

யாழில் உள்ள கைத்தொலைபேசி விற்பனை நிலையத்திற்கு விற்பனையாளர், சிட்டை எழுதுநர், கணக்காளர், மேற்பார்வையாளர், தொலைபேசி திருத்துனர், கணினி இயக்குபவர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் நொக்கியா விற்பனை நிலையம், இல. 09, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் அல்லது 077 3611 282 இற்கு தொடர்பு கொள்ளவும்.

---

யாழ்ப்பாணத்தில் இயங்கும் ரெலிக்கொம் வேலைத் திட்ட அலுவலத்திற்கு அனுவபமும் ஆர்வமும் கொண்ட தொழில்நுட்ப அலுவலர், தொழில்நுட்ப உதவியாளர் தேவை. விண்ணப்பங்களை எதிர்வரும் 8 நாட்களுக்குள் Grovp Manager (Hrd and Admin) Luminex (pvt) Ltd,No.24, New Galle Road, Maratuwa அல்லது Wminex@slf.lk அல்லது 011 2644 299 என்ற தொலை நகலுக்கு அனுப்பி வைக்கவும்.

---

சேட், டவுசர் தைக்கக்கூடிய ஆண்கள் தேவை. New Star Textiles $ Tailors 126, St Anotony's Mawatha.col-13 tel 0115 835586, 0779770727 இற்கு தொடர்பு கொள்ளவும். ஆர்வமுடன் பயிற்சி பெற விரும்பும் தாதியர்கள் தேவை. தங்குமிடம், உணவு, சீருடை என்பவற்றுடன் 8 ஆயிரம் சம்பளம் வழங்கப்படும்.

---

ஆர்வமுள்ளவர்கள் இல. 311, ஜெம்பட்டா வீதி, கொழும்பு 13 அல்லது 011 2421 882 இற்கு தொடர்பு கொள்ளவும்.

---

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, நெல்லியடி, மன்னார் ஆசிய இடங்களில் கிளைகளைக் கொண்டுள்ள பிரபல தொலைத்தொடர்பு நிறுவனத்திற்கு (customer care, cashier ஆக பணியாற்றுவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் 011 4373 411, 0777221800 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

---

வெள்ளவத்தையில் வசிக்கும் தமிழ் குடும்பத்திற்கு சமையல் வேலை தெரிந்த பெண்பிள்ளைதேவை. 8000 ரூபா சம்பளம் வழங்கப்படும். கொழும்பு வரவிரும்புவோர் 0715350914, 0773470788 ஆகிய தொலைபேசி இலக்கங் களுடன் தொடர்பு கொள்ளவும்.

---

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் இயங்கிவரும் கையடக்கத்தொலைபேசி விற்பனை நிலையத்தில் கடமையாற்ற ஆட்கள்தேவை. ஆண்களுக்கு 12,000 ரூபாவும், பெண்களுக்கு 8000 ரூபாவும் சம்பளமாக வழங்கப்படும் 077 3611 282, 021 2223 817 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

---

யாழ். நகரில் இயங்கும் பெண்கள் ஆடையகத்திற்கு பெண் உதவியாளர் தேவை. மேலதிக விபரங்களுக்கு 0212219102 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

---

பல்தேசிய நிறுவனத்திற்கு Education technologies கீழ் காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (1) Trainee Marketing Executive (2) Marketing Executive lwith oneyear Experience) நேர்முகப்பரீட்சை மே 14முதல் மே 18 வரை நடைபெறும் மேலதிக தொடர்புகளுக்கு 077 3434 823.

---

வீட்டுவேலைக்கு பணிப்பெண் தேவை. சிறந்த சூழலில் மூன்றுபேர் அடங்கிய சிறிய குடும்பமொன்றுக்கு வீட்டு வேலைக்கு பணிப்பெண்தேவை. சம்பளம் 8.500 உணவு தங்குமிட வசதிகளும் உண்டு 658.'.40யு மஹவில கபடன்ஸ், பேஸ்லைன் றோட், தெமட்டக்கொடை, கொழும்பு -09 தொடர்புகொள்ளவும் 075 509670

# பிரதமர் வேட்பாளராக ஜெயலலிதா ; ஒரிசா முதல்வர் ஆலோசனை



(சென்னை)

முதல்வர் ஜெயலலிதாவை பிரதமர் வேட்பாளராக நிறுத்துவது குறித்து ஒரிசா முதல்வர் நவீன் பட்நாயக் ஆலோசனை நடத்தியுள்ளார். லோக்சபா தேர்தலில் காங்கிரஸ், பா.ஜ. அல்லாத மாநில கட்சிகளின் ஆதரவுடன் மத்தியில ஆட்சி அமைப்பது குறித்து போயஸ் கார்டன் இல்லத்தில் இரு முதல்வர்களும் ஆலோசித்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய நிலவரப்படி தமிழகம், ஆந்திரா, கர்நாடகா, உ.பி., பீகார், ஒரிசா, மகாராஷ்டிரா, பஞ்சாப், மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களில் தான் அதிக எம்.பி.க்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

லோக்சபா தேர்தலுக்குப் பின் பெரும்பான்மையான எம்.பி.க்களை கைப்பற்றும் மாநிலக் கட்சிகள் தான் “புதிய அணி” அமைத்து மத்திய அமைச்சரவை உருவாக்கும் நிலை ஏற்படும்.

குறைந்தபட்சம் 30 முதல் 40 எம்.பி.க்களை கையில் வைத்திருக்கும் கட்சிதான் பிரதமரை தேர்வு செய்யும் நிலை உருவாகும். காங்கிரஸ் அல்லது பா.ஜ. ஆட்சி அமைக்க முடியாத பட்சத்தில் மாநிலக் கட்சிகளின் தலைவர்களில் ஒருவரை பிரதமராக்க, காங்கிரஸ் அல்லது பா.ஜ. முன்வரும்.

அப்போது பிரதமர் பதவிக்கு ஜெயலலிதா, முலாயம் சிங், சரத்பவார், மம்தா, பிரகாஷ் சிங் பாதல், தேவகவுடா, ஓம்பிர காஷ் சவுதாலா போன்ற தலைவர்களின் பெயர்கள் அடிபடும்.




பிரதமர் வேட்பாளராக ஜெயலலிதாவை நிறுத்த ஒரிசா முதல்வர் நவீன் பட்நாயக் மற்றும் பா.ஜ. தலைவர்களில் சிலர் முன்மொழிய தயாராகவுள்ளனர்.

# நித்தியானந்தாவை வெளியேற்றுக; மதுரை ஆதீன மீட்புக்குழு தீர்மானம்



(புதுடில்லி)

நித்தியானந்தாவை உடனடியாக வெளியேற்ற வேண்டும் என மதுரை ஆதீன மீட்புக் குழு மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

மதுரை ஆதீனம் மட்புக் குழு மாநாடு நேற்று மதுரையில் நடைபெற்றது. இதில் வேளக்குறிச்சி ஆதீனம், நெல்லை கண்ணன், இந்து மக்கள் கட்சித் தலைவர் அர்ஜுன் சம்பத் மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து சைவ சமயத் துறவிகள் கலந்துகொண்டனர்.

மதுரை ஆதீனத்திலிருந்து நித்தியானந்தாவை உடனடியாக வெளியேற்ற வேண்டும். புதிய ஆதீனத்தை தமிழகத்தின் மற்ற ஆதீன மடங்களை கலந்தாலோசித்து நியமிக்க வேண்டும்.

புதிய ஆதீனத்துக்கு தமிழக அரசு ஒத்துழைப்பு தர வேண்டும் என்று தீர்மானங்கள் இயற்றப்பட்டன.

# அ.தி.மு.க. ஆட்சியை வீரத்தோடு சமாளிப்போம்

(சென்னை)


அ.தி.மு.க. ஆட்சியை தீரத்தோடு, வீரத்தோடு விவேகத்தோடு சமாளிப்போம் என்று தி.மு.க வழக்கறிஞர் கூட்டத்தில் கருணாநிதி தெரிவித்தார்.

தி.மு.க. வழக்கறிஞர்கள் ஆலோசனை கூட்டம் சென்னையில் நடந்தது. அதில் கருணாநிதி பேசியதாவது,

இந்த நிகழ்ச்சிக்கு தி.மு.க வழக்கறிஞர்கள் அத்தனை பேரும் வந்திருக்கிறீர்கள் என்றால், தி.மு.க.விற்கு ஒரு சிறு ஊனம் ஏற்பட்டாலும், அதை சகித்துக் கொள்ள முடியாமல் அதை சரி செய்வதற்கு இருக்கிற எல்லா அணிகளையும் விட சிறந்த அணி வழக்கறிஞரணி தான்.

இன்னமும் சொலைகள், கொள்ளைகள், சட்டம் ஒழுங்கு இல்லாத நிலை இவை தமிழ் நாட்டில் இருக்கிறதா இல்லையா என்று நாம் கூட கேட்கவில்லை. நம்மைவிட அதிகமாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினரே கவலைப்படக்கூடிய அளவிற்கு சட்டம் ஒழுங்கு இல்லாத ஒரு சூழ்நிலை தமிழகத்திலே ஏற்பட்டிருக்கின்றது.

இரண்டு மாதங்களுக்கு முன்பு நேரு சகோதரர் ராம ஜெயம் கோரமாக கொல்லப்பட்டு அப்படி கொல்லப்பட்டவருடைய உடல் இந்த இடத்திலே கிடக்கிறது என்று அடையாளம் காட்டிய வரும் ஒரு பொலிஸ்காரர் தான். இன்னமும் அந்த கொலை யாரால் எப்படி திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டது என்ற செய்தி உலகத்திற்கு தெரியவில்லை என்றார்.



# பரபரப்பு தணியாத கூடங்குளம்

(சென்னை)

கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு எதிராக இடிந்தகரையில் நடக்கும் நான்காவது கட்ட காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டம் நேற்று 13 ஆவது நாளாக நடந்தது.

நேற்று உண்ணாவிரத போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து திரைப்பட இயக்குனர் புகழேந்தி தங்கராஜா, மராட்டிய மாநில இயற்பியல் விஞ்ஞானி விவேக் மந்தாரியா ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

இதற்கிடையே மாவட்ட பொலிஸ் அதிகாரி விஜயேந்திரபிதரி இடிந்தகரை அருகே உள்ள சுனாமி கொலனிக்கு வந்தார். அவர் எந்நேரமும் இடிந்தகரைக்கு வரலாம். உதயகுமார் உள்ளிட்ட போராட்டக்காரர்களை கைது செய்யலாம் என்று தகவல் பரவியது.

இதையடுத்து கோவில் மணி அடிக்கப்பட்டது. பொது மக்கள் புனித லூர்து அன்னை ஆலய வளாகத்தில் திரண்டனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

இதையடுத்து தமிழக அரசு மனம் மாற வேண்டி மாலை 6 மணிக்கு இடிந்தகரையில் இருந்து கிராம மக்கள் ஊர்வலம் சென்றனர். புனித லூர்து அன்னை சொரூபத்தை கையில் ஏந்தியபடி ஊர்வலமாக சென்றனர்.

ஊர்வலம் முக்கிய வீதிகள் வழியாக சென்று மீண்டும் கோவிலை வந்தடைந்தது. ஊர்வலத்தில் உதயகுமார், புஷ்பராயன் உட்பட 1,500 க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

# நாம் போட்ட பிச்சையே ஜெயலலிதாவின் ஆட்சி

(சென்னை)

தே.மு.தி.க தயவால்தான் அ.தி.மு.க ஆட்சியைப் பிடித்தது. எங்கள் பலத்தை நாடாளுமன்ற தேர்தலில் நிரூபித்துக் காட்டுவோம் என்று விஜயகாந்த் தெரிவித்தார். தே.மு.தி.க தலைவரும் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான விஜயகாந்த் அளித்த பேட்டியில், 2011 ஆம் ஆண்டு சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் அப்போதைய ஆளும் கட்சியை தோற்கடிக்க வேண்டும் என்று அதிமுகவுடன் கூட்டணி வைக்க கண்மூடித்தனமாக ஒப்புக்கொண்டேன்.

அ.தி.மு.க தலைமை, ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்தி என்னை கூட்டணியில் சேர்க்க முயற்சித்தது. எனக்கு எத்தனை தடவை தொலைபேசியில் அழைப்பு விடுத்து சந்திக்க வைத்தார்கள் என்பது அவர்களுக்கே தெரியும். தேர்தலின் போது என்னை ஒரு வினாடி கூட ஓய்வெடுக்க விடவில்லை என்றார்.

# இந்த ஆண்டு இறுதியில் சந்தையில் பஜாஜ் குட்டிக்கார்



(சென்னை)

இந்த ஆண்டு இறுதியில் தனது குட்டிக் காரை பஜாஜ் ஆட்டோ விற்பனைக்கு கொண்டு வர திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன. மேலும், இந்த குட்டிக் கார் லீற்றருக்கு 35 கி.மீ முதல் 40 கி.மீ வரை செல்லும் என்றும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாட்டின் மிகப்பெரிய இருசக்கர வாகன தயாரிப்பாளரான பஜாஜ் ஆட்டோ முதன்முறையாக 4 சக்கர வாகனத்தை வடிவமைத்துள்ளது.

ஆர்இ60 என்ற குறியீட்டு பெயரில் இந்த குட்டிக் கார் டில்லி ஆட்டோ ஷோவில் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது.

ரினால்ட்- நிசான் கூட்டணியில் இந்த வாகனத்தை விற்க பஜாஜ் முதலில் முயற்சி எடுத்தது. ஆனால், வடிவமைப்பு, தரத்தில் எதிர்பார்த்த அளவு இல்லை என்று கூறி ரினால்ட், நிசான் ஆர்இ60 விற்பனை செய்யும் திட்டத்திலிருந்து கழன்றுகொண்டன.

இந்த நிலையில், ஆட்டோரிக்ஷாவுக்கு மாற்றாக இந்தக் குட்டிக்காரை விற்பனை செய்ய பஜாஜ் முடிவு செய்துள்ளது. இந்த ஆண்டு இறுதியில் ஆர்இ60ஐ விற்பனைக்கு கொண்டு வர பஜாஜ் ஆட்டோ திட்டமிட்டுள்ளதாம்.


ஆட்டோ ரிக்ஷாவை விட அதிக பாதுகாப்பு, மைலேஜ், விலை ஆகியவை ஆர்இ60க்கு புதிய மார்க்கெட்டை ஏற்படுத்திக்கொடுக்கும் என்று பஜாஜ் நம்புகிறது. மேலும், பைக்கிலிருந்து கார் வாங்க நினைக்கும் நடுத்தர வர்க்கத்திற்கு ஏற்றதாக இந்த வாகனம் இருக்கும் என்று பஜாஜ் ஆட்டோ நம்புகிறது.

இந்த புதிய பயணிகள் வாகனத்தில் 20 பிஎஸ் திறனை வெளிப்படுத்தும் 200 சிசி எஞ்சின் பொருத்தப்பட்டிருக்கும். 4 பேர் பயணம் செய்யும் வசதிகொண்டதாக இருக்கும் என்றும் தெரியவருகின்றது.



ஊட்டி ரோஜா பூங்கா அழகு நிலையத்தில் இடம்பெற்ற ரோஜா கண்காட்சியில் மலர்களால் உருவான தற்காலிக விலங்கு

# பாகிஸ்தானில் ஒரு அமெரிக்கர் இருந்தால் ஐந்து கோடி டொலர் நிதியுதவி குறையும்



## – அமெரிக்காவின் புதிய சட்டம் அமுல்

(வொஷிங்டன்)

தீவிரவாதத்தை ஒழிப்பதற்காக பாகிஸதானுக்கு அளிக்கப்படும் நிதியுதவியை குறைப்பதற்கு அமெரிக்க நாடாளுமன்றத்தில் புதிய சட்ட மசோதா தாக்கல் செய்யப்பட்டது. இதன்படி, பாகிஸ்தான் தீவிரவாதிகளால் ஒரு அமெரிக்கர் கொல்லப்பட்டால், நிதியுதவியில் 5 கோடி டொலர் குறைக்கப்படும். தீவிரவாதிகளை ஒடுக்குவதற்காக பாகிஸ்தானுக்கு ஆயுதங்கள் மற்றும் நிதியுதவியை அமெரிக்கா அளித்து வருகிறது. இந்நிலையில்

'பாகிஸ்தான் தீவிரவாதத்தை கட்டுப்படுத்தும் சட்டம்,2012' என்ற பெயரில் ஒரு புதிய சட்ட மசோதாவை அமெரிக்க அரசு கொண்டு வந்துள்ளது. நாடாளுமன்றக் குழுவில் அமோக ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட இந்த மசோதா, நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. வெளிவிவகாரத் துறை நாடாளுமன்றக் குழுத் தலைவர் டானா ரோக்ரபாச்சேர் இந்த மசோதாவை தாக்கல் செய்து பேசுகையில் தீவிரவாதிகளை ஒழிக்க அமெரிக்கா நீண்ட காலமாக பாகிஸதானுக்கு இலவசமாக நிதியுதவி அளிக்கிறது.

ஆனாலும், பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ மற்றும் அந்நாட்டு இராணுவத்தில் உள்ள சிலரின ஆதரவுடன் தீவிரவாதக் கும்பல்கள் செயல்படுகின்றன. ஒசாமாவை பல ஆண்டுகளாக அமெரிக்கா கண்ணில் சிக்காமல் இருக்க ஐ.எஸ்.ஐ உதவியிருக்கிறது. எனவே, பாகிஸ்தானுக்கு அளிக்கப்படும் நிதியுதவியைக்குறைக்க இந்த சட்டம் கொண்டு வரப்படுகிறது. இதன்படி, பாகிஸ்தான் அரசில் உள்ள சிலரின் ஆதரவால் செயலபடும் தீவிரவாதிகளால் அமெரிக்கர்கள் கொல்லப்பட்டால், அதற்கேற்ப நிதியுதவி குறைக்கப்படும். அதாவது, ஒவ்வொரு அமெரிக்கரின் இறப்புக்கும் 5 கோடி டொலர் குறைக்கப்படும். மொத்த உதவியான 220 கோடி டொலரில் இந்த கணக்குப்படி நிதியுதவி குறைக்கப்படும். அந்தத் தொகை இறந்தவரின் குடும்பத்திற்கு நஷ்டஈடாக தரப்படும் என்றார்.

உலகச் செய்திகள்

## ஆளில்லா விமான தாக்குதல்

(சனா)

யேமனில் அமெரிக்க ஆளில்லா விமானத் தாக்குதலில் 11 தீவிரவாதிகள் பலியாயினர். தெற்கு யேமனில் இரு முறை ஆளில்லா விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 11 அல்கொய்தா தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக யேமன் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.இதில் முதல் தாக்குதல், சானாவிலிருந்து தென்கிழக்கு மரிப் மற்றும் சப்வா ஆகிய இருஇடங்களில் நடந்ததாக தெரிவித்தனர்.



பிரான்ஸ் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரான்கோஸ் ஹோலன்ட்(இடது) வாழ்த்துத் தெரிவிக்கும் பொதுமக்கள்.

# போருக்கு தயாராகவில்லை – சீனா

(பீஜிங்)

தென் சீனக் கடல் பகுதியில் தங்களுடைய ஆதிக்கத்தை நிலைநாட்டப் போருக்குத் தயாராக வில்லை என்று சீனா கூறியுள்ளது.

தென் சீனக் கடல் பரப்பில் பாரம்பரியமாக தங்களுக்கு மட்டும்தான் உரிமை உள்ளது என்றும் பிற நாடுகள் அங்கு வருவதும் எண்ணெய் துரப்பணப் பணிகள்,ஆய்வுகள் போன்றவற்றைத் தங்களிடம் அனுமதி பெறாமல் மேற்கொள்வதும்கடும் விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் சீனா எச்சரித்து வருகிறது.

இந்த நிலையில் பிலிப்பைன்ஸ் நாடு தென் சீனக் கடலில் உள்ள "ஹவாங்யான் தீவு தங்களுக்கே உரியது என்றும் அதன் பெயர் பனடாக் ஹால் என்றும் கூறி வருகிறது.

இந்த இடம் எங்களுடையதுதான், உங்களுக்கு ஏதாவது நேருவதற்கு முன்னால் இந் இடத்தை விட்டுப் போங்கள் என்று சீனா நேரடியாகவும் மறைமுகமாகவும் பிலிப்பைன்ஸ் எச்சரித்து வருகிறது. சீனாவுடன் ஒப்பிடுகையில் பிலிப்பைன்ஸ் மிகப்பெரிய நாடு அல்ல ஆனால் அது அமெரிக்காவுக்கு நெருங்கிய நட்பு நாடாக இருப்பதால் சீனாவுக்குச் சவால் விட முடிகிறது. அமெரிக்காவும் பிலிப்பைன்ஸ் இராணுவத்துடன் கூட்டு இராணுவப் பயிற்சி மேற்கொண்டு மறைமுகமாக சீனாவை எச்சரித்து வருகிறது.

சர்ச்சைக்குரிய இடம் தங்களுடையதே என்று காட்ட இரு நாடுகளுமே போருக்குப் பயன் படாத சரக்குக் கப்பல்களையும் இதர கப்பல்களையும் அங்கே கொண்டுபோய் நிறுத்தி உரிமை கொண்டாடிவருகின்றன.

இந்த நிலையில்தான் போருககுத் தயாராவதாக தங்களைப் பற்றி வரும் தகவல்கள் எல்லாம் உண்மைக்குப் புறம்பானவை என்று சீனா மறுத்துள்ளது.


# வாரத்தில் 40 மணிநேரத்திற்கு மேல் வேலைசெய்தால் மூளை பாதிக்கும்

## – ஆய்வில் எச்சரிக்கை

வாரத்தில் 40 மணி நேரத்திற்கு மேல் உழைத்தால் மூளை பாதிக்கும் என ஆய்வு ஒன்று எச்சரித்துள்ளது.

ஒரு வாரத்திற்கு 40 மணி நேரம்தான் உழைப்புக்கு செலவிட வேண்டும். உடல் உழைப்பை வெளிப்படுத்தி செய்யும் வேலையாக இருந்தாலும், சிந்தித்து செய்யும் வேலையாக இருந்தாலும் இந்த கால அளவை தாண்டி ஒருவர் வேலை செய்வது அவருக்கு நல்லதல்ல என்கிறது இந்த ஆய்வு.

வாரத்திற்கு 40 மணி நேரத்தையும் தாண்டி வேலை செய்தால், அதனால் ஏற்படும் பாதிப்பு உடனே தெரியாது என்றும், நடுத்தர வயதை கடந்த பின்பு தான் இந்த பாதிப்பு தெரிய வரும் என்றும், குறிப்பாக, முளையின் சுறுசுறுப்பு குறைய ஆரம்பிக்கும் என்றும் எச்சரிக்கிறார்கள் ஆராய்சியாளர்கள். இதுகுறித்து மேலும் கூறிய ஆய்வாளர்கள், சாப்ட்வேர் நிறுவனங்களில் வாரத திற்கு 5 நாட்கள் வேலை செய்பவர்கள் தினமும் 10 மணி நேரத்துக்கு குறையாமல் வேலை செய்கின்றனர். இதனால் தான் இவர்கள் எளிதில் சோர்வடைகின்றனர், மன அழுத்தத்துக்கும் ஆளாகின்றனர். அதில் இருந்து விடுபடத்தான் விடுமுறை நாட்களை ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம் என்று கழிக்கின்றனர் என்றனர். யாராக



இருந்தாலும் 40 மணி நேரத்தையும் தாண்டி, அலுவலகத்தையே கட்டி அழுபவர் என்றால் இப்போதே உஷாராகிவிடுங்கள். இல்லையென்றால் பிரச்சினை உங்களுக்குத்தான்!




ஆஸ்திரியாவின் மாட்ரின் பகுதியிலுள்ள இராணுவ பயிற்சி மையத்தைபடத்தில் காணலாம்.

# ஈரானின் நவீன ஆயுதத் திட்டம்

## – கிளம்புகிறது புதிய சர்ச்சை

ஈரான் நவீன அணு ஆயுதத்திட்டங்களை செயற்படுத்தியுள்ளதாக அந்த நாட்டில் இருந்து வெளியேற்றப்பட்ட அரச எதிர்தரப்புக் குழுவொன்று கூறியுள்ளது.

பாதுகாப்பு அமைசசின் ஆதரவுடன் சுமார் 60 விஞ் ஞானிகள் மற்றும் பொறியிலாளர்கள் இந்த செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதாக



இந்தக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்த குழுவினர் இதற்கு முன்னரும் இவ்வாறான குற்றச்சாட்டுக்களை தெரிவித்துள்ளதாக அமெரிக்காவின் உயர் மட்ட அணு நிபுணரை மேற்கோள்காட்டி ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தக் குழுவினரின் புதிய அறிக்கை குறித்து ஆய்வாளர்களும், இராஜதந்திரிகளும் சந்தேகம் வெளியிட்டுள்ளது.


சர்வதேச அணுசக்தி முகவர் அமைப்பிற்கும், ஈரானுக்கும் இடை யில் வியட்னாவில் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ள நிலையில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அத்துடன் உலகில் பலம் மிக்க ஆறு நாடுகளுடன் எதிர்வரும் 23 ஆம் திகதி ஈராக் தலைநகர் பாகத்தாத்தில் ஈரான பேச்சுவார்த்தையை நடத்தவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# வெள்ளிக் கிரகம் இடை நகர்வு

வெள்ளிக்கிரகம், வரும் ஜூன் 6 ஆம் திகதி சூரியத்தட்டு வழியே கடக்கும் அபூர்வ நிகழ்வு நடக்கிறது. அப்போது யாரும் வெறும் கண்ணால் சூரியனைப் பார்க்க கூடாது என விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

வெள்ளி கோளானது சூரியத் தட்டின் வழியே ஒரு புள்ளி போன்று நகர்ந்து செல்லும் 'வெள்ளி இடைநகர்தல் நிகழ்வு' (Transit of Venus) வரும் ஜூன் 6ஆம் திகதி வானில நிகழ்



கிறது. சுமார் 7 மணி நேரம் இந்நிகழ்வு நடைபெறும்.

இதனை இலங்கை நேரப்படி காலை 5.30 மணி முதல் 10 மணி வரை தொலைநோக்கி மூலம் காணலாம்.



ஜூன் 6 ஆம் திகதி வெள்ளி கோள் சூரிய தட்டு வழியே ஒரு புள்ளி போன்று கடந்து செல்கிறது. இது ஒரு அற்புத நிகழ்வு. வெறும் கண்ணால் பார்க்க கூடாது. பாதுகாப்பான முறையில் இந்த அரிய நிகழ்வை அனைவரும் காண வேண்டும்.

இதுபோல் 1641 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரை 7 முறை மட்டுமே தெரிந்துள்ளது. இதன் பிறகு 2017 டிசம்பர் இல்தான் இது நிகழும் என தெரிவிக்கப்படுகிறது.

# குருப் பெயர்ச்சி பலன்கள்

**17-05-2012 முதல் 28-05-2013 வரை**

## கடகம்



புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயில்யம் முடிய

(பெயரின் முதல் எழுத்துக்கள்: ஹி, ஹீ, ஹே, ட, டி, டே, டோ உள்ளவர்களுக்கும்)

எதற்கும் கலங்காத மனமும், எதிர்ப்பைக் கண்டு அஞ்சாத குணமும் பெற்ற கடக இராசி நேயர்களே!

சந்திரனின் ஆதிக்கத்தில் நீங்கள் பிறந்ததால், சிந்தனையாளர்களாக திகழ்வீர்கள். பொதுநல ஈடுபாடு கொண்டவர்களாகவும் விளங்குவீர்கள். புகழ் பெறுவது உங்கள் குறிக்கோளாக இருக்கும்.

பிரச்சினையின் பின்னணியில் இருப்பவர்களில் முதல் ஆளாக நிற்பீர்கள். பேச்சாற்றல் இருந்தாலும் தப்பிக்க முடியாமல் சில தடுமாற்றங்களும் ஏற்படும். ஒப்பற்ற வாழ்க்கையில் உள்ளத்தில் அமைதிக் குறைவை ஏற்படுத்துவது சுக்ரன் தான். அவர் உங்கள் இராசிக்கு பாவியாக விளங்குகிறார். அந்த சுக்ரனின் வீட்டிற்குள் தான் குரு இப்பொழுது செல்ல இருக்கிறார்.

உங்களின் எண்ணங்களை எல்லாம் நிறைவேற்றும் வலிமை குருவிற்கு உண்டு. அந்த குரு உங்கள் இராசிக்கு 6, 9 க்கு அதிபதியாக விளங்குவதால் ஆறுதலையும் கொடுப்பார். அமைதியையும் கொடுப்பார். திடீரென பூதாகரமான பிரச்சினைகளையும் கொடுப்பார். எனவே அந்த குருவை முறையாக வழிபட்டு தக்க பரிகாரங்களை தடையின்றி செய்தால், மிக்க புகழோடு வாழ்க்கை நடத்த இயலும். சிக்கல்களில் இருந்தும் விடுபட முடியும்.

பனிரெண்டு கட்டங்களில் உங்கள் இராசியான கடகத்தில் தான் குரு உச்சம் பெறுகிறார். உங்கள் வீட்டிற்கு வந்தால் வலிமையடையும் ஒரு கிரகம், உங்களுக்கு நன்மைகளைத் தானே அதிகம் வாரி வழங்குவார். வீடு கட்டிப் போட்ட திட்டம் முதல், வியக்கும் விதத்தில் பதவி, பண வரவுகளை பெறும் திட்டங்களை படிப்படியாக நிறைவேற்றி வைக்கப் போகிறார்.

### குருப்பெயர்ச்சி

உங்கள் இராசிக்கு இதுவரை பத்தாமிடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான், 17.05.2012 முதல் பதினோராம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். குரு உங்கள் இராசிக்கு ஆறாமிடத்திற்கும் அதிபதியாக வருகிறார். ஒன்பதாமிடம் எனப்படும் பிதுரார்ஜித ஸ்தானத்திற்கும் அதிபதியாகவும் வருகிறார். எனவே ஆறுக்கு அதிபதியை, வரும் முன்னதாகவே கொண்டாடி வரவேற்று வழிபாடுகளை மேற்கொண்டால், தரும் பலன்கள் நல்ல பலன்களாகவே இருக்கும். தடைகளும், தாமதங்களும் அகலும்.

அவிட்ட நட்சத்திரத்தோடு, ஞாயிறு இணையும் நாளில் குருவை போற்றி வழிபட்டால், மாற்றங்கள் நல்ல மாற்றங்களாக வந்து சேரும்.

### லாப குருவின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 6, 9 க்கு அதிபதியான குரு பகவான் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். சஞ்சரிக்கும் குரு கேதுவுடன் அல்லவா கூடுகிறார். எனவே ஏற்றம் இறக்கம் தரும் பாம்பு கிரகத்தின் சேர்க்கை இருப்பதால், ஒரு காலத்தில் ஓகோ என்ற நிலை. மற்றொரு காலத்தில் பாதாளத்தில் இருக்கும் நிலை வரலாம். இதை சரி செய்ய ராகு, கேதுக்களுக்கு ப்ரீதியும், சர்ப்ப சாந்தியும் செய்ய வேண்டியது அவசியமாகும்.

பதினொன்றில் வரும் குருவால் பண மழையில் நனையும் வாய்ப்பு கிட்டும். மதிப்பும் மரியாதையும் கூடி வரும். அஸ்திவாரத்தோடு அரைகுறையாக நின்ற வீடு முழுமை பெறும். தொழில் வளர்ச்சி, புதிய ஒப்பந்தம் வந்து சேரும்.

### குருபார்வை பலன்கள்

பதினோராமிடத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை 3, 5, 7 ஆகிய இடங்களை சேர்வதால் சகோதர சகாய ஸ்தானம், புத்திர ஸ்தானம், களத்திர ஸ்தானம் ஆகியவை புனிதமடைகின்றன. இதன் விளைவாக நல்ல மாற்றங்களை நீங்கள் சந்திக்கப் போகிறீர்கள்.

பொதுவாக குருவின் பார்வைக்கு பலன் அதிகம் என்பார்கள். அதன் அருட்பார்வை பதியும் இடங்கள் எல்லாம் புனிதமடைகின்றன. அந்த அடிப்படையில் உங்கள் இராசிக்கு 3, 5, 7 ஆகிய இடங்களை இப்போது குரு பார்க்கப் போகிறார். இதன்மூலம் உடன் பிறப்புகள் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறி மகிழ்ச்சி ஏற்படும்.

பணப்புழக்கம் அதிகரிக்கும். தொழிலில் தொல்லை கொடுத்து வந்தவர்கள் இனி தானாகவே விலகலாம். தன நம்பிக்கையும், தைரியமும், எதையும் சாதிக்கும் வல்லமையும் உருவாகும். பூர்வ புண்ணிய ஸ்தானம் புனிதமடைவதால், பிள்ளைகள் வழியில் நல்ல செய்திகள் வந்து சேரும்.

வாரிசுகளின் கல்வி முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள். இருப்பினும் பதினோராமிடத்தில் உள்ள கேது உங்கள் ஜென்ம இராசியை பார்ப்பதால் உடல் நலம் ஒத்துழைப்பது அரிது.

உங்கள் சந்தோஷங்களுக்கு குறுக்கீடாக உறவினர்களே நிற்கலாம். அவர்களை அனுசரித்து செல்வது ஆதாயத்தை தரும். குருவின் ஒன்பதாம் பார்வை சப்தம ஸ்தானத்தில் பதிவதால், பிரிந்திருந்த தம்பதியர் ஒன்று சேருவர்.

திருமண வாழ்வில் பிரச்சினை இருப்பவர்கள் யோக பலம் பெற்ற நாட்களில் அதற்குரிய பரிகாரங்களைச செய்து கொண்டால் ஒற்றுமை மேலோங்கும்.

### பலன் தரும் பதினோராமிடம்

வராத கடன்கள் வசூலானது கண்டு ஆச்சரியப்படுவீர்கள். நாளை செய்வோம், ஒத்திப்போட்ட காரியங்கள் துரிதமாக நடைபெறத் தொடங்கும். ஏனென்றால், அதற்குத் தேவையான பணம் உங்கள் கரங்களில் புழங்கும். மண், பொன் வாங்குவது பற்றி சிந்திப்பீர்கள். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். சமூகத்தில் உங்களுக்கு பெயரும், புகழும் கூடும். குறுக்கு வழி வருமானங்கள் அல்லது கூட இருப்பவர்களால் வருமானங்கள் வந்து கொண்டே இருக்கும்.



மூத்த சகோதரர்களால் ஏற்பட்ட முன்னேற்றத் தடைகள் மாறும். காது வலி, கை வலி போன்றவை தீரும்.

குறிப்பாக, இந்த குரு பெயர்ச்சியின் போது, சுக்ர திசை, சுக்ர புத்தி நடப்பவர்கள், பரிகாரங்களை செய்வது நல்லது.

### வாட்டத்தை போக்குமா வக்ர குரு

ரிஷப் இராசிக்குள் சஞ்சரிக்கும் குரு 12.10.2012 முதல் 6.2.2013 வரை வக்ர கதியில் இயங்குகிறார். இது உங்கள் இராசியை பொறுத்தவரை 6, 9 க்கு அதிபதியாக விளங்குவதால், ஒரு பாதி வளர்ச்சியும், ஒரு பாதி தளர்ச்சியும் கொடுப்பார்.

ஆறுக்கு அதிபதியாக இருப்பதால், கொடுக்கல் வாங்கல்களில் திடீர் திருப்பம் ஏற்படும். வராத கடன்கள் வசூலாகும். எதிரிகளின் பலம் குறையும். உடல் ஆரோக்கியமடையும். உத்தியோக மாற்றங்கள் எதிர்பார்த்தபடியே வந்து சேரலாம்.

ஒன்பதுக்கு அதிபதியாகவும் குரு விளங்குவதால் தந்தை வழி விரோதங்கள் உண்டாகும். உறவினர்களின் தொடர்பால் பிரச்சினைகளும் அடிக்கடி வந்து கொண்டே இருக்கும்.

### கடக இராசியில் பிறந்த பெண்களுக்கு...

இந்த குருபெயர்ச்சியால் செயலில் வேகம் கூடும். செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள். தாய் வழி ஆதரவு பெருகும். தனவரவு எதிர்பார்த்தபடி வந்து சேரும். வீடுகட்டி குடியேற வேண்டும் என்று நினைத்த காரியம் நிறைவேறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு திடீரென மாற்றங்கள் வந்து சேரலாம். ஒருசிலர் வி.ஆர்.எஸ். வாங்கிக் கொண்டு வீட்டில் இருந்தே தொழில் செய்யலாமா? என்று யோசிப்பீர்கள். சுயஜாதகம் நன்றாகவும், பலமாகவும் இருந்தால் தொட்ட காரியம் வெற்றி பெறும்.

(தொடரும்)

---

# இனிப்பும் கசப்பும்!

ஞானி ஒருவர் அந்த நாட்டுக்கு வருகை புரிந்தார். அந்த நாட்டு மன்னர் அவரைச் சிறப்புடன் வரவேற்றார்.

மன்னரின் வரவேற்பையும், விருந்தோம்பல்களையும் ஏற்றுக் கொண்ட ஞானி கடைசியில்

விடைபெறும் போது மன்னரிடம், 'இனிப்பாக இருந்தால் விழுங்கி விடும கசப்பாக இருந்தால் உமிழ்ந்து விடும்' என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

ஞானி சொன்ன வாக்கியங்களின் பொருள் மன்னருக்குப் புரியவில்லை.

அங்கிருந்த அமைச்சர்களிடம் ஞானி சொன்ன வாக்கியங்களுக்கான பொருள் சொல்லும்படி கேட்டார்.

அமைச்சர்கள் யாருக்கும் அந்த வாக்கியங்களுக்கான பொருள் தெரியவில்லை.

இதனால் கோபமடைந்த மன்னர், 'இந்த வாக்கியங்களுக்கான பொருள சொல்ல ஒரு மாத காலம் எடுத்துக் கொள்ளுங்கள். இந்த ஒரு மாத காலத்திற்குள் இதற்கான பொருளும் விளக்கமும் சொல்லாவிடில் உங்கள் அனைவருக்கும் மரண தண்டனை அளிப்பேன்' என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

நாட்கள் கடந்தன. ஒரு மாத காலம முடிய இன்னும் ஒரு நாள் மட்டுமே இருந்தது.

மன்னருக்குப் பதில் சொல்ல முடியாத கவலையில் மூத்த அமைச்சர் ஒருவர் படுத்த படுக்கையாகி விட்டார்.

மறுநாள் பதில் சொல்ல முடியா விட்டால் மரணம் நிச்சயம்.



அமைச்சரின் கவலையைக் கண்ட அவரது மனைவி அவரிடம், 'கவலைபடாதீர்கள்! தங்களுக்கு ஒன்றும் ஆபத்து வராது. நாளைக்காலை யாராவது அந்த வாக்கியங்களுக்குச் சரியான பொருளைச் சொல்லி விடுவார்கள்' என்று ஆறுதல் சொன்னார்.

இதைக் கண்ட அமைச்சரின் மகன், 'தந்தையே கவலைப்படாதீர்கள். தங்களிடம் மன்னர் கேட்ட கேள்வியை என்னிடம் ஒரு முறை சொல்லுங்கள்.' என்றான்.

அவர் ஞானி வந்த கதையையும், கடைசியில் ஞானி மன்னரிடம் சொல்லிவிட்டுச் சென்ற இரு வாக்கியங்களையும் சொன்னான்.

உடனே அமைச்சரின் மகன், 'தந்தையே, நீங்கள் கவலையடையாமல் தூங்குங்கள். நாளைக்காலை அரசவைக்குச் சென்று இந்தக் கேள்விக்கான பதிலை நானே கூறிவிடுகிறேன்' என்றான்.

மறுநாள் அமைச்சரின் மகன் அரசவைக்குச் சென்றான்.

அங்கு மன்னரிடம், 'மன்னரே, வணக்கம். நான் தங்கள் அரசவையின் மூத்த அமைச்சரின் மகன். நான் தங்களுக்கு ஞானி சொல்லிவிட்டுச் சென்ற இரண்டு வாக்கியங்களுக்கான பொருளைச் சொல்லிவிட்டுச் செல்லலாம் என்று வந்தேன்' என்றான்.

மன்னர், 'உன் தந்தை வராமல் உன்னை அனுப்பியது ஏன்?' என்று கேட்டார்.

'அவருக்கு உடல்நிலை சரியில்லை. இந்த சாதாரணமான வாக்கியங்களுக்கு நானே விளக்கம் அளிக்கிறேன்' என்றான்.

'சிறுவனே, இந்த வாக்கியத்துக்குச் சரியான பொருள் சொல்லாவிட்டால் உனக்கு மரண தண்டனை கிடைக்கும்'

'பரவாயில்லை, ஞானி உங்களிடம் சொல்லிச் சென்ற வாக்கியங்களைக் கூறுங்கள்' என்றான் சிறுவன்.

'இனிப்பாக இருந்தால் விழுங்கி விடும் கசப்பாக இருந்தால் உமிழ்ந்து விடும்,' என்றார் மன்னர்.

'இது மன்னர்களுக்குக் கொடுக்கப்பட்ட மகத்தான அறிவுரை. ஒரு மன்னன் மக்களிடம் எப்போதும் இனிமையாகவே பழகிக் கொண்டிருந்தால் அவனைக் கோழையாகக் கருதி மக்கள் மன்னரை மதிக்க மாட்டார்கள். அவனது அரச பதவியைக் கூட அபகரித்துக் கொள்வார்கள். இது போல் ஒரு மன்னன் கசப்பாகவே நடந்து கொண்டிருந்தாலும் மக்கள் அவனை அப்பதவியிலிருந்து தூக்கி எறிந்து விடுவார்கள். அதனால் அன்பைக் காட்டித் தண்டிக்க வேண்டிய நேரத்தில் தண்டித்து ஆட்சி செலுத்துபவனே சிறந்த மன்னன் என்று மதிக்கப்படுவான். இதைத்தான் அவர் சொல்லிச் சென்றிருக்கிறார்' என்றான் அந்தச் சிறுவன்.

மன்னரும் அந்தச் சிறுவன் கேட்ட பரிசுகளைக் கொடுத்து அனுப்பினார்.

# இலங்கையின் இராஜதந்திரம் மார்ச் 22இல் தற்கொலை

## கூறுகிறார் ஜயந்த தனபால



(கொழும்பு)

கடந்த மார்ச் 22 ஆம் திகதி, தற்கொலை மூலம் இலங்கை தனது இராஜதந்திரத்தை மாய்த்துக்கொண்ட நாள் என்று விமர்சிக்கப்பட்டுள்ளது.

ஜெனிவாவில் இலங்கையின் மனித உரிமைகளுக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம் இந்த ஜனநாயகத் தற்கொலை இடம்பெற்றதாக இராஜதந்திரியும் முன்னாள் சமாதான செயலக தலை வருமான ஜயந்த தனபால தெரிவித்துள்ளார்.

கொழும்பின் தற்கொலை இராஜதந்திரம் மற்றும் அரசியல் வழிகாட்டல் என்பனவே ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான பிரேரணை நிறைவேற்றப்படுவதற்கான காரணங்களாகும்.

எனவே 64 வருடங்களாக கட்டிக்காத்த இராஜதந்திர தன்மையை இலங்கை இழந்து விட்டது என்று ஜயந்த தனபால குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே, கறுப்பு ஜூலைக்குப் பின்னர் 1984 ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிராக ஜெனிவா மனித உரிமை மாநாட்டின் போதும் அதற்குப் பின்னரும் கொண்டு வரப்பட்ட தீர்மானங்கள், இந்தியா உட்பட்ட ஏனைய நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்படவில்லை.

ஆனால், இந்தத் தடவை இலங்கையினால் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக செயற்படுத்தப்படப் போவதாக தெரிவிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தை, சர்வதேசம் ஏற்றுக்கொள்ளாமையே இலங்கையின் இராஜதந்திர தோல்விக்கான காரணம் என்று ஜயந்த தனபால குறிப்பிட்டுள்ளார்.

# சந்தோலியின் ஹட்ரிக் மூலம் வீழ்ந்தது புனேவாரியர்ஸ்



(ஜெய்ப்பூர்)

அஜித் சந்தோலியின் ஹட்ரிக்கின் மூலம் புனே வாரியர்ஸ் அணிக்கெதிரான போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 45 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

ஐ.பி.எல். ருவெனிரி-20 கிரிக்கெட் தொடரின் 60ஆவது போட்டி நேற்று ஜெய்ப்பூரில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரஹானே 61, வட்சன் 58, ராவிட் 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நெஹ்ரா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 171 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய புனே அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி அளிக்கும் வகையில் இருந்தது. முதல் ஓவரை வீசிய அஜித் சந்தோலி அந்த ஓவரின் ஐந்தாவது பந்தில் ரைடரையும் ஆறாவது பந்தில் கங்குலியையும் ஆட்டமிழக்கச் செய்தன் மூலம் ஹட்ரிக் சாதனை புரியும் வாய்ப்பு ஏற்பட்டது. அதேபோன்று அவரின் இரண்டாவது ஓவரின் முதல் பந்தில் உத்தப்பாவை ஆட்டமிழக்கச் செய்து ஹட்ரிக் சாதனை புரிந்தார். இதன் மூலம் ஐந்தாவது ஐ.பி.எல். தொடரில் முதல் ஹட்ரிக் சாதனை புரிந்த வீரர் என்ற சிறப்பையும் அஜித் சந்தோலி பெற்றுக் கொண்டார். இறுதியில் புனே வாரியர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் ஸ்மித் 37, மத்தியூஸ் 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அஜித் சந்தோலி நான்கு ஓவர்கள் பந்துவீசி 13 ஓட்டங்களைக் கொடுத்து ஹட்ரிக்குடன் நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். மற்றும் வட்சன், போத்தா தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். போட்டியின் ஆட்ட நாயகனாக அஜித் சந்தோலி தெரிவானார்.

# அரச ஆதரவுக்கட்சிகளின் இணக்கமே நடைமுறை



## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகள் தொடர்பாக அரசின் பங்காளிக் கட்சிகள் இணக்கம் தெரிவித்தவற்றை மட்டுமே நடைமுறைப்ப டுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளரும், மின்சக்தி மற்றும் எரிசக்தித் துறை அமைச்சருமான சம்பிக்க ரணவக்க இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நல்லிணக்க ஆணைக்குழு விதந்துரைத்துள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பான யோசனைகளைச் சமர்ப்பிக்குமாறு அரசின் பங்காளிக் கட்சிகளுக்கு ஜனாதிபதியால் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கட்சிகள் தமது அறிக்கைகளை அரசாங்கத்திடம் கையளித்து வருகின்றன. பங்காளிக் கட்சிகள் அனைத்தினதும் அறிக்கைகள் கிடைத்த பின்னர் அவற்றை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு ஜனாதிபதி செயலாளரிடம் வழங்கப்பட்டுள்ளது.

எனவே பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வேகமாகப்....

தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப்பை ஏற்படுத்தும் வகையில் ஒலிபெருக்கி மூலம் மன்னார் நகரில் அறிவிப்பு செய்யப்பட்டது.

மன்னாரில் குழாய் மூலம் விநியோகிக்கப்படும் நீரில் ஏதேனும் இரசாயனப் பதார்த்தங் கள் கலந்துள்ளனவா என்பது குறித்து சுகாதார வைத்திய அதிகாரி பரிசோதனை மேற் கொண்டதுடன், குடிநீரின் மாதிரியை பரிசோதனைக்கு உட்படுத்துவதற்காக கொழும்புக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

## யாழ்.இந்து...

நேற்றைய தினம் யாழ் இந்துக்கல்லூரி மாணவன் 192 சென்றி மீற்றர் உயரத்தைக் கடந்து முறியடித்துள்ளார்.

பாடசாலை மட்டத்திலும், வலய மட்டத்திலும், மாகாண மட்டத்திலும் சாதனைகள் பலவற்றை நிலைநாட்டி வரும் இவர் வருடா வருடம் தனது சாதனைகளை தானே முறியடித்து புதிய சாதனைகளை நிலை நாட்டி வருகின் றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# 13ஆவது திருத்தத்தை இரத்துச் செய்யுமாறு தொழிலாளர் அமைப்புக் கோரிக்கை



(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான தீர்வாக அதிகாரப் பகிர்வை வலியுறுத்தும் வகையில் இலங்கை- இந்திய ஒப்பந்தத்தினை அடுத்து கொண்டு வரப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தினை அரசாங்கம் ரத்துச் செய்ய வேண்டும் என்று இலங்கையின் தொழில்சார் நிபுணர்களின் சங்கங்களின் கூட்டமைப்பு ஜனாதிபதியைக் கேட்டிருக்கிறது.

13ஆவது திருத்தச் சட்டம் இலங்கை நாடாளுமன்றத்திற்கோ அல்லது இலங்கை மக்களுக்கோ தெரியாமல் இந்தியாவினால் வடிவமைக்கப்பட்டுள்ளது என்று கூறி அதனை நீக்க வேண்டும் என்று இலங்கையின் தொழில்சார் நிபுணர்களின் அமைப்புக்களின் கூட்டமைப்பின் தலைவர் திலின கிரிங்கொட கூறியுள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்டம் இலங்கை மீது திணிக்கப்பட்ட ஒன்று என்றும் அது இலங்கையில் பல பிரச்சினைகளை உருவாக்கியுள்ளது என்றும் பெருமளவு பண விரயத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், நாட்டில் ஒரு அரசியல் ஸ்திரமின்மையை ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை இலங்கையில் 13 ஆவது திருத்தத்தின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரப்பகிர்வானது இன ரீதியிலான அதிகாரப் பகிர்வு என்றும், ஒன்றுபட்ட இலங்கைக்கு அது பாதகமானது எனவும் அவர் கூறினார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை விடுதலைப்புலிகள் ஆதரித்தார்கள் என்றும் அதனால் அதனை ஜனாதிபதி ரத்துச் செய்ய வேண்டும் என்றும் அந்த அமைப்பு கோரியுள்ளது.

## தெரிவுக்குழுவில்...

அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கடந்த நாடாளுமன்ற விஞ்ஞாபனத்தில் தமிழீழக் கோரிக்கை முன்வைக்கப்படவில்லை. இருந்தும் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரித்து ஆணை வழங்கியுள்ளனர்.

தமிழ் மக்களின் நியாயமான அரசியல் தீர்வுக் கோரிக்கையை அரசு மறுதலிக்குமானால் நாளை நிலைமைமாறும். சர்வதேசம் எமக்கான தீர்வை பெற்றுத்தந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

எமக்கு சர்வதேச பலம் கிடைத்திருக்கின்றது என்பதை ஜெனிவா தீர்மானம் உறுதிப்படுத்தியிருக்கிறது. நாங்கள் சுயநிர்ணய உரித்துடைய மக்கள் என்பதையும் தேசிய இனம் என்பதையும் இன்று உலகம் உணர்ந்துள்ளது.

வட - கிழக்கில் சுயாட்சியை ஏற்படுத்துவதற்கு சர்வதேசத்தின் பங்களிப்பு முக்கியமாகத் தேவையான ஒன்று. சர்வதேசத்திற்கு எமது சுயாட்சியைப் பற்றிய நியாயப்பாடுகள் தெளிவாகத் தெரியும். சர்வதேச தேசிய இனத்தினுடைய நிலப்பரப்பில் குடிப்பரம்பலை மாற்றுவதற்கு அரசு முயல்கிறது. இது தடுக்கப்பட வேண்டியதொன்று.

ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பரவலாக்கம் மூலம் தீர்வு காண்பதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம் என்பதை சர்வதேசத்திற்கு சொல்லிவைக்க விரும்புகின்றோம். ஜனநாயக நாடுகள் தான் எமக்கு ஆதரவாக இருக்கின்றன.

நாடாளுமன்றத் தெரிவிக்குழு வுக்கு நாங்கள் செல்ல வேண்டும் என்றால் வெற்றுத்தாளுடன் நாங்கள் செல்ல முடியாது. நிபந்தனையுடன் செல்வதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம் எனத் தெரிவித்தார்.

## மாகாண எல்லைகளை...

மலையக பிரதேசங்களின் பகுதிகளும் வழங்கப்பட உள்ளன. நிலைத் தொடர்பற்ற வகையில் இந்த எல்லைகள் நிர்ணயிக்கப்பட உள்ளன.

நாட்டின் தேசிய வளங்கள் அனைத்து மாகாணங்களுக்கு சமமான வகையில் பகிரப்படுவதற்கும், மாகாணங்களுக்கு இடையில் காணப்படும் சிக்கல் நிலைமைகளை குறைப்பதற்காகவும் இந்த புதிய எல்லை நிர்ணயிப்பு மூலம் தீர்வு கிடைக்கும் என அரசாங்கம் கருதுகிறது.

இவ்வாறு எல்லைகளில் மாற்றம் ஏற்படுத்துவதன் மூலம் இன ரீதியான பிரச்சினைகளும் தீர்க்கப்படும் என அரசாங்க பிரதானிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

## தடுத்து..

தடுத்து வைக்கப்ப[illegible]ோர் தொடர்பான தகவல்களைப் பயங்கரவாத விசாரணைப் ப[illegible]வு, இரண்டாவது மாடி, புதிய செயலகக் கட்டடம், கொழும்பு 1 இல் (தொலைபேசி இல.011-2384400) அல்லது கண்டி வீதி, வவுனியாவில் பிரதி பொலிஸ் மா அதிபரின் அலுவலகத்திற்கு எதிரேயுள்ள பயங்கரவாத விசாரணைப் பிரிவு (தொலைபேசி இல.024-3243207) அல்லது பூஸாவில் ரேஸ்கோஸ் வீதியிலுள்ள பயங்கரவாத விசாரணைப் பரிவு (தொலைபேசி இல.091-2267084) ஆகிய அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## வெளிவிவகார...

ஒன்றை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அனுப்பியிருந்தார். இன்னொன்றை வெளிவிவகார அமைச்சைக் கண்காணிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன அனுப்பியிருந்தார்.

வெளிவிவகார அமைச்சின் சார்பில் அனுப்பி வைக்கப்பட்ட இரண்டு அனுதாபச் செய்திகளாலும் தென்னாபிரிக்க அரச நிகழ்வில் குழப்பம் ஏற்பட்டது.

பீரிஸா, சஜின் வாஸ் குணவர்த்தனவா இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் என்பதே அந்தக் குழப்பம்.

இந்த இரண்டு அனுதாபச் செய்திகளையும் வைத்துக் கொண்டு, தென்னாபிரிக்க அதிபர் ஜேக்கப் சூமாவின் நெறிமுறை அதிகாரி ஒருவர், இலங்கை வெளிவிவகார அமைச்சர் யார் என்று கண்டு பிடிக்க அங்குமிங்கும் ஓடித் திரிந்தார்.

கடைசிவரையில் அவரால் இலங்கை வெளிவிவகார அமைச்சர் யார் என்று உறுதி செய்ய முடியாமல் போனது.


இதனால் அந்த நிகழ்வை நெறிப்படுத்திக் கொண்டிருந்த தென்னாபிரிக்காவின் நீண்டகால நிதியமைச்சரும், தற்போதைய திட்டக்குழு அமைச்சருமான ரிவோர் மனுவல் இரண்டு அனுதாபச் செய்திகளையும் வாசித்தார்.

வெளிநாடு ஒன்றின் அரச இறுதிச்சடங்கில்- ஒரே குரலில் அனுதாபத்தை வெளிப்படுத்தத் தவறியதே இந்தக் குழப்பத்துக்கு காரணம் என்று வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் கூறியுள்ளன.

## யுவதி மீது...

கடுமையான வெட்டுக்கள் விழுந்துள்ளன. காயமடைந்த அனைவரும் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எஸ்)

# இனப்பிரச்சினைத் தீர்விற்கு பரிந்துரைகள் அமுலாக வேண்டும்



(கொழும்பு)

இனபபிரச்சினைக்கான தீர்வினை ஏற்படுத்துவதற்கு நல்லிணக்க ஆணைக்குழு முன்வைத்துள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டுமென ஈ.பி.டி.பி.யின் யர்ழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றில் கொண்டுவரப்பட்ட ஒத்திவைப்புப் பிரேரணையில் உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்த நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாக போர் என்றால் போர் என்று அறைகூவல் விடுத்த தவறான அணுகுமுறையிலிருந்தே இந்தப்பிரச்சினை தீவிரமடைந்தது. அதன்பின் நடந்த ஒவ்வொரு துயரம் நிறைந்த நிகழ்வுகளுக்கும் மனித அவலங்களுக்கும் அதற்கு பொறுப்பாக இருந்த ஒவ்வொருவரும் அதற்கான பொறுப்புக்களை ஏற்க வேண்டும்.

ஜனாதிபதியின் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம் ஏற்றுக்கொண்டு அமுல்படுத்த வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தி வருகின்றோம். நல்லிணக்க ஆணைக்குழுவில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சரும் கட்சியின் செயலாளர் நாயகமுமாகிய டக்ளஸ் தேவானந்தா தெரிவித்த வாக்கு மூலத்தின் திரிபுபடுத்தப்பட்ட செய்திகளைத் தவிர ஏனைய பரிந்துரைகளை நாங்கள் அன்றே ஆதரித்திருந்தோம். அதை அமுல்படுத்த வேண்டுமென்று நாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம் அந்த அமுல்படுத்தலை நாங்கள் எல்லோரும் சேர்ந்து வலியுறுத்துகின்ற சந்தர்ப்பத்தில்தான் உண்மையான வெற்றியை நோக்கி செல்லமுடியுமென்று நாங்கள் நம்புகின்றோம்.

கடந்த காலங்களில் ஆளும் கட்சியினர் இனப்பிரச்சினைக்கான தீர்வினை கொண்டு வரும் போது எதிர்க்கட்சியினர் எதிர்ப்பதும் பின்பு எதிர்க்கட்சி ஆளும் கட்சியாக வரும்போது ஆளும் கட்சியாக இருந்த எதிர்க் கட்சி எதிர்ப்பதும்தான் வரலாறு.

இன்று பல அரசியல் கட்சியினரும் இனப்பிரச்சினைக்கான தீரவையும் நல்லிணக்க ஆணைக குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியிருக்கின்றார்கள். ஜனாதிபதி நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை கண்காணிப்பதற்காக தனது செயலாளர் தலைமையிலான ஒரு குழுவை கடந்தவாரம நியமித்திருக்கின்றார். இதை ஒரு ஆரோக்கியமான முன்னேற்பாடாக நான் கருதுகின்றேன். எனவே எதிர்வரும் காலங்களில் இந்த நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை கூடுமானவரை விரைவுபடுத்தி அமுல்படுத்தும்போது இனப்பிரச்சினைக்கான பல்வேறு காரணிகளின் அடிப்படைகள் நீங்கிவிடுமென்று நான் கருதுகின்றேன். என அவர் மேலும் தெரிவித்தார்.

# பொன்சேகா இவ்வாரம் விடுதலை?



முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா இவ்வாரம் விடுதலை செய்யப்படலாம் என நம்பத்தகுந்த தரப்புத் தகவலகள் தெரிவிப்பதாக ஐலன்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது. நவலோக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் பொன்சேகாவின் தண்டனைக் காலம் எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு ஜுலை மாதம் முடிவடைகிறது. இந்த நிலையில் சரத் பொன்சேகாவை விடுதலை செய்வது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் சில சுற்று பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தார்.

எவ்வாறாயினும் இதற்கு முன்னர், ஜனவரி முதலாம் திகதி மற்றும் பெப்ரவரி 4 ஆம் திகதிகளில் பொன்சேகா விடுதலை செய்யப்படுவார் என தகவல்கள் வெளியாகி இருந்த போதிலும் அவர் விடுதலை செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுதந்திரக் கட்சியின் யோசனை அடுத்தவாரம் கையளிப்பு

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை எவ்வாறு அமுல்படுத்த வேண்டும் என்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யோசனை அடுத்த வாரத்தில் கையளிக்கப்படும் என அந்தக் கட்சியின் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளின் தலைவர்களும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் கடந்த வாரம் கூடினர். இதன்போது நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவது தொடர்பான கூட்டணிக் கட்சிகளின் யோசனைகளை முன்வைக்குமாறு இதன்போது ஜனாதிபதி கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த நிலையில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜ கட்சி உள்ளிட்ட சில கட்சிகள் ஏற்கனவே ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பான தமது யோசனைகளை ஜனாதிபதியிடம் கையளித்துள்ளன.

# மக்களின் நம்பிக்கையை வென்று அதிகாரத்தைக் கைப்பற்றுங்கள்

## ஐ.தே. கட்சிக்கு கூறுகிறார் ஜனாதிபதி



(கொழும்பு)

அரசாங்கத்தை தோற்கடித்து அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி விரும்பினால், அரசாங்கத்தை குறை கூறுவதை நிறுத்தி மக்களின் நம்பிக்கை பெறுவதற்கு மக்களிடம் செல்லவேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

அநுராதரபுரத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி தெரிவித்தார். மக்களை சந்திப்பதற்காகவே நான் இக்கிராமத்திற்கு வந்தேன். தேர்தல் எதனையும் பற்றி பேசுவதற்கல்ல என ஜனாதிபதி கூறினார்.

மக்கள் எம்முடன் இருக்கும் வரை நாம் தேர்தல்களில் வெற்றி பெறுவோம். எனவே தேர்தல் எதையும் நடத்துவதற்கு நாம் அஞ்சவில்லை. ஆனால் பிரதான எதிர்க்கட்சி தேர்தல்களுக்கு அஞ்சுகிறது. எப்போது நாம் தேர்தல் நடத்த முற்பட்டாலும் ஐக்கிய தேசியக் கட்சியானது நீதிமன்றத்திற்குச் சென்று தேர்தல் நடத்துவதற்கு எதிராக இடைக்கால தடையுத்தரவு பெறுகிறது என அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 17 வருடங்கள் எதிர்க்கட்சியாக இருந்த போதிலும் மக்களை முறையாக ஒழுங்கமைத்ததால் ஐ.தே.க. அரசாங்கத்தை தோற்கடித்து ஆட்சிக்கு வரமுடிந்தது. கட்சியை புனரமைப்பதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தற்போது ஈடுபட்டுள்ளது. இது தேர்தல் எதையும் இலக்கு வைத்தல்ல, கிராமங்களில் மக்கள் எதிர்நோக்கும் கஷ்டங்களுக்கு தீர்வுகாண்பதற்காகவே இந்நடவடிக்கை என அவர் கூறினார்.

# 17 இராணுவத்தினர் விபத்தில் காயம்

(கொழும்பு)

தனமல்வில ஐந்தாம் கட்டைப் பகுதியில் இராணுவ டிரக் வண்டியொன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் 17 இராணுவ வீரர்கள் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்தில் காயமடைந்த வீரர்கள் எம்பிலிபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருவதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

# வெலிக்கடை சிறையில் கைதி தற்கொலை

வெலிகடை சிறைச்சாலைக்குள் கைதி ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையதாக கூறி 17 மாத சிறைத்தண்டனை விதிககப்பட்ட கைதி ஒருவரே இவ்வாறு தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். தெமட்டகொடை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பில் சிறைச்சாலை அதிகாரிகள் சிலரிடம் வாக்குமூலம் பதிவு செய்து கொண்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அலுவலகம் தெரிவிக்கின்றது.

# சுன்னாகத்தில் விபத்து யுவதி படுகாயம்

சுன்னாகம் பகுதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற வீதிவிபத்தில் யுவதி ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உடுவில் பகுதியைச் சேர்ந்த ஜெ.மேரிறீற்றா (வயது - 18) என்ற யுவதியே படுகாயமடைந்தவராவார். நேற்றுப் பிற்பகல் இரண்டு மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

சுன்னாகம் ஜெற்மோட்டார் பகுதியில் எதிரெதிரே வந்த கன்ரர் வாகனமும் குறித்த யுவதி பயணித்த ஸ்கூட்டி ரக மோட்டார் சைக்கிளும் மோதியதிலேயே இவ்விபத்து இடம்பெற்றது. இதில் படுகாயமடைந்த யுவதி உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 14 வயதுச் சிறுவனை கடத்திய நால்வர் கைது

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சச்சியார் வீதியில் 14 வயது சிறுவன் ஒருவரை கடத்திய நால்வர் வாழைச்சேனை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்று முற்பகல் சிலாபத்தைச் சேர்ந்த இரண்டு சிங்களவர்களும் வழைச்சேனை கல்குடா பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு தமிழர்களுமே இக்கடத்தலில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த சிறுவன் வானுக்குள் ஏற்றி கடத்திச் செல்லப்பட்டுள்ளார். இந்த நிலையில், அவரது சத்தத்தை அவுதானித்த உறவினர்கள் உடனடியாக பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து துரிதமாகச் செயற்பட்ட பொலிஸார் இவர்களைக் கைது செய்துள்ளனர்.

இதேநேரம் நேற்றுக் காலை கல்குடாவில் சிறுமி ஒருவரைக் கடத்த முயன்று முடியாது போன நிலையிலேயே இச்சிறுவன் கடத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இச்சிறுவனை புதையல் எடுப்பதற்கு பயன்படுத்துவதற்கே கடத்தப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# ஆங்கில மொழிமூலப் பட்டதாரிகள் ஆசிரிய சேவைக்குள் இணைப்பு

(கொழும்பு)

ஆங்கிலம் கற்பிப்பதற்கு ஆங்கில பாடத்தைப் பட்டப் படிப்பாக கற்றவர்கள் இல்லை. அதனால் ஆங்கிலமொழி முலம் பயின்ற பட்டதாரிகளை ஆங்கிலம் கற்பிப்பதற்குச் சேர்த்துக் கொள்வதற்காக மீள விண்ணப்பம் கோருவதற்கு அமைச்சரவை பத்திரம் தயாரிக்கப்பட்டு வருவதாக கல்வியமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

முன்னாள் சபாநாயகர் பாக்கீர் மாக்காரினால் நிறுவப்பட்ட அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் ஸ்தாபகர் தினம் கொழும்பு பிரதான தபால் நிலைய கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் உள்ள பாடசாலைகளில் கணிதம், தகவல் தொழில் நுட்பம் மற்றும் ஆங்கிலம் கற்பிப்பதற்கு 3 ஆயிரம் பட்டதாரி ஆசிரியர்களை சேர்த்துக் கொள்வதற்கு விண்ணப்பம் கோரப்பட்டது. அதில் ஆங்கிலப் பாடம் கற்பித்தற்கு 1000 ஆங்கிலப் பட்டதாரிகளுக்கான வெற்றிடம் உள்ளது. ஆனால் 280 ஆங்கிலப் பட்டதாரிகளே விண்ணப்பித்துள்ளனர்.

இந்நாட்டில் ஆங்கிலம் கற்பிப்பதற்கு ஆங்கில பாடத்தை பட்டமாக கற்றவர்கள் இல்லை. ஆகவேதான் அடுத்த அமைச்சரவையின் கூட்டத்தின்போது ஆங்கில மொழி முலம் பயின்ற பட்டதாரிகளை ஆங்கிலம் கற்பிப்பதற்குச் சேர்த்துக் கொள்வதற்காக மீள விண்ணப்பம் கோர அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு, மீள விண்ணப்பம் கோருவதற்கு நடவடிக்கை எடுத்துவருகின்றோம் என கல்வியமைச்சர் பந்துல குணவர்தன மேலும் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 மே 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.